1

இடைநிலைத் தமிழ் இலக்கணம்

ஆறு, ஏழு, எட்டாம், வகுப்புகளுக்கு

(முதல் மூன்று பாரங்களுக்கு)

உரியது.

OFFICE OF THE REGISTRAR OF [?]
15 MAR 1941
MADRAS

494·8115

842

ஆசிரியர்

வித்துவான். அ. மு. பரமசிவானந்தம்

தலைமைத் தமிழாசிரியர்

ஆண்டர்சன் உயர்நிலைப்பள்ளி

காஞ்சிபுரம்

உரிமைப் பதிவு

விக்கிரம கார்த்திகை (டிசம்பர் 1940)

விலை அணா பத்து

Φ31, J:2

தமிழ்க்கலை அச்சகம், காஞ்சிபுரம்—1940

முன்னுரை

செந்தமிழ் நாட்டு இலக்கணம் பண்டைக் கால முதற் கொண்டு சிறந்துள்ளது. அவ்விலக்கணத்தை நாட்டுப் பள்ளிக்கூட இளஞ்சிறுவர் உணர்ந்து கொள்ளுமாறு தொகுத்து வெளியிடப் பலர் முன்னிற்கின்றனர். 'கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உளங்கொள்ளு' மாறு விளக்குதல் இயற்கை முறையாகும். அம்முறையில் இந்த இலக்கண நூல் எழுதப்பட்டது.

பல அன்பர்களது தூண்டுதலை உடன் கொண்டு, இதற்கு முன் நான்காம், ஐந்தாம் வகுப்புகளுக்கு நான் எழுதிய 'ஆரம்பத் தமிழிலக்கணம்' என்னும் நூல் சென்னைப் பாடபுத்தகக் கழகத்தாரது அங்கீகாரம் பெற்றுள்ளது. அதைத் தொடர்ந்தே இடை நிலை வகுப்புகளுக்கு (Middle School Classes) ஏற்ற முறையில் இவ்விலக்கண நூல் அமைக்கப் பட்டதால் இதற்கு 'இடை நிலைத் தமிழ் இலக்கணம்' என்னும் பெயர் இடப்பட்டது.

இந்நூல், மாணவர் மூன்று வகுப்புகளிலும் தொடர்ந்து இலக்கணப் பயிற்சி பெறுமாறு அமைத்து அவைகளில் ஒரு வகுப்புக்கும் மறு வகுப்புக்கும் உள்ள சம்பந்தத்தை ஆங்காங்கே விளக்கிக்காட்டி அமைக்கப்பட்டுள்ளது. இந்நூல்

உயர்தரப் பள்ளிகளின் இடை வகுப்புகளுக்கும் (FORMS I. II. III.) ஆரம்பப் பாடசாலைகளின் மேல் மூன்று வகுப்புகளுக்கும் (VI. VII. VIII. Standards) ஏற்ற முறையில் எழுதப்பட்டுள்ளது.

இந்நூலின் கடைசியில் தமிழ் இலக்கணச் சொற்களுக்கு ஏற்ற ஆங்கிலச் சொற்கள் எழுதப் பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்திற்குக் கடைசியிலும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இளஞ் சிறுவர்கள் நன்கு அறியும் வண்ணம் இந்நூல் அமைக்கப் பட்டிருத்தலின் இந்நூலைப் பள்ளிக்கூட ஆசிரியர்களும் பிறரும் ஆதரித்து மேன்மேலும் இப் பணியில் என்னை ஊக்குமாறு வேண்டிக்கொள்ளுகின்றேன்.

இந்நூல் வெளிவர உதவியாயிருந்த எனது உடன் துணையாசிரியர் வித்துவான் ர. சிவராம சேதுப்பிள்ளை அவர்கட்கும், வாலாஜாபாத் இந்து மத பாடசாலை ஆசிரியர் நா. ப. தணிகை அரசு அவர்கட்கும் என் நன்றி உரியதாகும்.

காஞ்சி,
1—12—40.

இங்ஙனம்,
அ. மு. பரமசிவானந்தம்.

பொருளடக்கம்

ஆறும் வகுப்பு (I From)

	பக்கம்
எழுத்து	
உயிரெழுத்து	9
மெய்யெழுத்து	10
உயிர் மெய்யெழுத்து	12
ஆய்த எழுத்து	14
சுட்டு எழுத்து	15
வினு எழுத்து	16
சொல்	
பெயர்ச்சொல்	17
திணை	19
பால்	20
எண்	21
இடம்	22
வேற்றுமை	23
வினைச்சொல்	29
வினைச்சொற்களின் பாகுபாடுகள்	31
காலம்	33
இடைச்சொல்	34
உரிச்சொல்	35
புணர்ச்சி	36
உயிரின் முன் உயிர்	37
உயிரின் முன் மெய்	38
மெய்யின் முன் உயிர்	38
மெய்யின் முன் மெய்	39

சொற்றொடர் 40
எழுவாய் பயனிலை செயப்படு பொருள் 41
குறியீடுகள் 43

ஏழாம் வகுப்பு (II Form)

எழுத்து
முதலெழுத்து சார்பெழுத்து 45
குற்றியலுகரம் 45
முற்றியலுகரம் 46
அகச்சுட்டு புறச்சுட்டு 47
அகவினா புறவினா 48
இன எழுத்துக்கள் 49

சொற்கள் 51
பெயர்ச்சொல் 52
பொதுப்பெயர் சிறப்புப்பெயர் 52
பெயர்ச்சொல்லின் பிரிவுகள் 53
ஆகுபெயர் 58
வேற்றுமை 61
வேற்றுமைத் தொகையும் விரியும் 62
வினைச்சொல் 67
தெரிநிலை குறிப்பு 67
வினைகள் உற்பத்தி 68
முற்று வினைகளும் எச்ச வினைகளும் 69
தன்வினை பிறவினை 72
இடைச்சொல் 74
உரிச்சொல் 75
சொற்றொடர் 76
சொற்களின் அமைப்பு 78
புணர்ச்சி 79
குற்றியலுகரப்புணர்ச்சி 79
உயிரின்முன் மெய் 81

உயிரின்முன் மெய்யும் உயிரும் 81
மெய்யின் முன் உயிர் 82
மெய்யின் முன் மெய் 82
மகர ஈறு 83

சொல்லிலக்கணம் 84

எட்டாம் வகுப்பு (III Form)

எழுத்து

மாத்திரை 88
சார்பெழுத்து விரி 89
மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் 92
மொழிக்குக் கடையில் வரும் எழுத்துகள் 94
போலி 95
வடவெழுத்துக்கள் 97

சொல் 97

இயல்பு வழக்குகள் 98
தகுதி வழக்குகள் 99
காரண இடுகுறிப் பெயர் 101
ஆகுபெயர் 102
வேற்றுமை 105
தொழிற்பெயரும் வினையால் அணையும் பெயரும் 108
ஒருமைப் பன்மைப் பெயர்கள் 109
உயர்வுப் பன்மை 110

வினைச்சொல் 111

தன்மை வினை முற்றுக்கள் 111
முன்னிலை வினை முற்றுக்கள் 112
படர்க்கை வினை முற்றுக்கள் 112
முற்றெச்சம் 114
காலங்கரந்த பெயரெச்சம் 115
சில வினை முற்றுக்கள் 116
செய்யும் என்னும் வினைமுற்று 117

உடன்பாடு, எதிர்மறை	117
வியங்கோள் வினை	119
ஏவல் வினை	120
ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்	121
இடைச்சொல்	122
ஏகார இடைச்சொல்	122
ஓகார இடைச்சொல்	123
உம் என்னும் இடைச்சொல்	124
'கொல்' என்னும இடைச்சொல்	126
உரிச்சொல்	126
ஒரு குணம் குறித்த பல உரிச்சொல்	127
பலகுணம் குறித்த ஒரு உரிச்சொல்	127
சொற்றொடர்	128
தொகை நிலைச் சொற்றொடர்	128
தொகா நிலைச் சொற்றொடர்	132
மூவகைச் சொற்றொடர்கள்	133
தனிச் சொற்றொடர்	133
தொடர்ச் சொற்றொடர்	133
கலப்புச் சொறறொடர்	133
தொடர் இலக்கணம்	135
பகுபத இலக்கணம்	135
புணர்ச்சி	137
வேற்றுமை, அல்வழிப் புணர்ச்சி	137
பண்புப் பெயர்ப் புணர்ச்சி	137
ணகர, னகர ஈறு	139
வடமொழிப் புணர்ச்சி	140
பிற் சேர்க்கை	142

இடைநிலைத் தமிழ் இலக்கணம்

ஆறும் வகுப்பு (I Form)

இலக்கணம் என்பது ஒரு மொழியைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் கற்பிக்கும் நூலாகும். தமிழ் மொழியைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் கற்பிப்பதே தமிழ் இலக்கணமாகும்.

ஒரு மொழியை நன்றாகக் கற்பதற்கு முதலில் தெரிந்து கொள்ள வேண்டுவது இலக்கணமே.

நாம் பேசும்போதும் எழுதும்போதும் சொற்றொடர்களை உபயோகிக்கின்றோம். அச் சொற்றொடர்களுக்குக் காரணமாயிருப்பனவே எழுத்துக்கள்.

எழுத்து

தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்கள் நான்கு வகைப்படும். அவை: 1. உயிர் எழுத்து 2. மெய் எழுத்து 3. உயிர் மெய் எழுத்து 4. ஆய்த எழுத்து என்பன.

உயிர் எழுத்து

இவற்றுள் உயிர் எழுத்து பன்னிரண்டு. அவை: அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பன. இப் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களுள் சில குறைந்த ஓசை உடையனவாகவும், சில நீண்ட ஓசை உடையனவாகவும் இருக்கும்.

குறைந்த ஓசையை உடையன குறில் என்று அழைக்கப்படும். அவை: அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தாகும்.

நீண்ட ஓசையை உடையன நெடில் என்று அழைக்கப்படும். அவை: ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழாகும்.

மெய் எழுத்து

மெய் எழுத்துக்கள் பதினெட்டாகும். அவை: க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்பன.

இந்த மெய்யெழுத்துக்களில் சில வலிய ஓசை உடையனவாகவும், சில மெலிந்த ஓசை உடையனவாகவும், சில இடைப்பட்ட ஓசை உடையனவாகவும் இருக்கின்றன.

வலிய ஓசை உடைய எழுத்துக்கள் வல்லினம் எனப்படும். அவை: க், ச், ட், த், ப், ற் என ஆறும்.

மெல்லிய ஓசை உடைய எழுத்துக்கள் மெல்லினம் எனப்படும். அவை: ங், ஞ், ண், ந், ம், ன் என ஆறும்.

இடைப்பட்ட ஓசை உடைய எழுத்துக்கள் இடையினம் எனப்படும். அவை: ய், ர், ல், வ், ழ், ள் என ஆறும்.

பெயர்க் காரணம்:-

முதலில் கண்ட பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் அவ்வாறு அழைக்கப்படக் காரணம் என்ன? இவைகள் மற்ற எழுத்துக்களுக்கெல்லாம் உயிர் போன்று இருத்தலின் உயிர் எழுத்துக்கள் எனப்பட்டன. உயிர் கூடினாலல்லது உடம்பு தனியாக இயங்கமாட்டாது. அதுபோலவே இந்த

உயிர் எழுத்துக்களின் உதவியில்லாது மெய் எழுத்துக்கள் இயங்கமாட்டா.

பதினெட்டு மெய் எழுத்துக்களும் மெய்போன்றிருத்தலின் அப்பெயர் பெற்றன. தனியாக க், ங் என்று ஒலிக்க முடியாது. அத்துடன் உயிர் எழுத்தைச் சேர்த்தே க, ங என்றுவது, ககரம், ஙகரம் என்றுவது ஒலிக்கவேண்டும். ஆகவே, தனித்து இயங்காத மெய்போன்ற இவ்வெழுத்துக்கள் மெய் எழுத்துக்கள் எனப்பட்டன.

தமிழுக்கு உயிர் எழுத்துப் பன்னிரண்டும், மெய் எழுத்துப் பதினெட்டும் முதலெழுத்துக்களாம்.

பயிற்சி 1

1. இலக்கணம் என்பது யாது?
2. தமிழில் உள்ள எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? என்னென்ன?
3. உயிர் எழுத்துக்கள் எத்தனை? என்னென்ன?
4. உயிர் எழுத்துக்களில் எத்தனை பிரிவுகள் உள்ளன? என்னென்ன?
5. குறில் என்பது யாது? அதில் எத்தனை எழுத்துக்கள் உள்ளன?
6. நெடில் என்பது யாது? அதில் எத்தனை எழுத்துக்கள் உள்ளன?
7. மெய் எழுத்துக்கள் யாவை? அவை எத்தனை வகைப்படும்? என்னென்ன?
8. வல்லினம் எத்தனை? அவை ஏன் அப்பெயர் பெற்றன?
9. மெல்லினம் என்பன யாவை? அவை எத்தனை?
10. இடையினம் எத்தனை எழுத்துக்கள்? அவை அப்பெயர் பெறக் காரணம் என்ன?
11. உயிர் எழுத்துக்கள் அவ்வாறு உயிர் என்று அழைக்கப்படக் காரணம் என்ன?

12. மெய் எழுத்துக்கள் அவ்வாறு மெய் என்று அழைக்கப்படக் காரணம் என்ன?

உயிர்மெய் எழுத்து

ஒவ்வொரு உயிரும் தனித் தனி ஒவ்வொரு மெய்யோடு கூடிப் பிறக்கும் எழுத்து உயிர்மெய் எழுத்தாம். உயிரும் மெய்யும் கூடிப் பிறத்தலால் இவை உயிர்மெய் எனப்பட்டன. பதினெட்டு மெய்யின்மேலும், தனித் தனி பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் ஏறி வருவதால் உயிர்மெய் இருநூற்றுப் பதினாறாகும். $(18 \times 12 = 216.)$

ஒவ்வொரு உயிரும் பதினெட்டு மெய்யின்மேலும் ஏறும்போது அதன் ஒலி உயிர் ஒலியோடு கலந்து நின்று வடிவத்தில் மாறுபட்டு நிற்கும்.

க் + அ = க	க் + உ = கு	க் + ஐ = கை
க் + ஆ = கா	க் + ஊ = கூ	க் + ஒ = கொ
க் + இ = கி	க் + எ = கெ	க் + ஓ = கோ
க் + ஈ = கீ	க் + ஏ = கே	க் + ஔ = கௌ

இதுபோல் பிறவற்றையும் எழுதிக் கண்டுகொள்க.

இனி, இவ்வுயிர்மெய் உயிரைப்போல், உயிர்மெய்க் குறில் என்றும், உயிர்மெய் நெடில் என்றும் பிரிக்கப்பெறும். குற்றெழுத்துக்களாகிய அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்தும் தனித் தனி பதினெட்டு மெய்யின்மேலும் ஏறுவதால் உயிர்மெய்க் குறில் தொண்ணூறு ஆகும். $(18 \times 5 = 90)$

அதேபோல் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற நெட்டெழுத்து ஏழும் பதினெட்டு மெய்யின் மேலும் ஏறுவதால்

உயிர்மெய்க் குறில் 90

மெய் 18	அ	இ	உ	எ	ஒ
க்	க	கி	கு	கெ	கொ
ங்	ங	ஙி	ஙு	ஙெ	ஙொ
ச்	ச	சி	சு	செ	சொ
ஞ்	ஞ	ஞி	ஞு	ஞெ	ஞொ
ட்	ட	டி	டு	டெ	டொ
ண்	ண	ணி	ணு	ணெ	ணொ
த்	த	தி	து	தெ	தொ
ந்	ந	நி	நு	நெ	நொ
ப்	ப	பி	பு	பெ	பொ
ம்	ம	மி	மு	மெ	மொ
ய்	ய	யி	யு	யெ	யொ
ர்	ர	ரி	ரு	ரெ	ரொ
ல்	ல	லி	லு	லெ	லொ
வ்	வ	வி	வு	வெ	வொ
ழ்	ழ	ழி	ழு	ழெ	ழொ
ள்	ள	ளி	ளு	ளெ	ளொ
ற்	ற	றி	று	றெ	றொ
ன்	ன	னி	னு	னெ	னொ

உயிர்மெய் நெடில் 126

ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
கா	கீ	கூ	கே	கை	கோ	கௌ
ஙா	ஙீ	ஙூ	ஙே	ஙை	ஙோ	ஙௌ
சா	சீ	சூ	சே	சை	சோ	சௌ
ஞா	ஞீ	ஞூ	ஞே	ஞை	ஞோ	ஞௌ
டா	டீ	டூ	டே	டை	டோ	டௌ
ணா	ணீ	ணூ	ணே	ணை	ணோ	ணௌ
தா	தீ	தூ	தே	தை	தோ	தௌ
நா	நீ	நூ	நே	நை	நோ	நௌ
பா	பீ	பூ	பே	பை	போ	பௌ
மா	மீ	மூ	மே	மை	மோ	மௌ
யா	யீ	யூ	யே	யை	யோ	யௌ
ரா	ரீ	ரூ	ரே	ரை	ரோ	ரௌ
லா	லீ	லூ	லே	லை	லோ	லௌ
வா	வீ	வூ	வே	வை	வோ	வௌ
ழா	ழீ	ழூ	ழே	ழை	ழோ	ழௌ
ளா	ளீ	ளூ	ளே	ளை	ளோ	ளௌ
றா	றீ	றூ	றே	றை	றோ	றௌ
னா	னீ	னூ	னே	னை	னோ	னௌ

உயிர்மெய் நெடில் நூற்று இருபத்தாறு ஆகும். $(18 \times 7 = 126)$

ஆய்த எழுத்து

இது மூன்று புள்ளி வடிவினதாகும். இது ஆய்தம் போன்று இருத்தலால் ஆய்த எழுத்து எனப்பட்டது. பழைய காலத்தில் சண்டைகளில் போர்வீரர் கேடயம் என்ற ஆயுதத்தை உபயோகித்தனர். அதன் நடுவில் மூன்று ஆணிகள் அடிக்கப்பட்டு இருந்தன. அதுபோன்று இருப்பதால் (ஃ) இஃது ஆய்த எழுத்தெனப்பட்டது. இது சொல்லின் நடுவில் வருமே ஒழிய முதலிலும் கடைசியிலும் வராது.



பயிற்சி 2

1. உயிர்மெய் எழுத்துக்கள் எப்படிப் பிறக்கின்றன?
2. உயிர்மெய் எழுத்துக்கள் 216 ஆவது எவ்வாறு?

3. உயிர்மெய்க் குறில் எத்தனை? எப்படி?
4. உயிர்மெய் நெடில் எத்தனை? எப்படி?
5. ஆய்த எழுத்து என்றால் என்ன?
6. ஆய்த எழுத்து மொழிக்கு எவ்விடத்தில் வரும்?
7. கந்தன் பள்ளிக்கூடம் வந்து அங்கு இருந்து தமிழ்ப் பாடங்களை அமைவுறப் படித்தான். அஃது அவனுக்குப் பெரும் பயன் அளிக்கும்.

இவ்வாக்கியத்திலுள்ள எழுத்துக்களை இனமுறையாகப் பிரிக்க.

சுட்டெழுத்து

உன்னுடைய புத்தகம் எங்கே என்று கேட்டால் இதோ என்று உன் புத்தகத்தைக் காட்டுகிறாயல்லவா? அவ்வாறு உன் புத்தகத்தைக் காட்ட ஏதுவாயிருந்தது எது? இதோ என்ற சொல்தானே! இந்த இதோ என்பதன் முதலில் உள்ள 'இ' என்பது அந்தப் பொருளைச் சுட்டுவதற்குக் காரணமாகின்றது. எனவே இது சுட்டெழுத்தாகும்.

சுட்டெழுத்துக்கள் மூன்றாகும். அவை: அ, இ, உ என்பன.

அ — அவன்		
இ — இவன்	}	இவை உதாரணங்கள்.
உ — உவன்		

இந்த மூன்று சுட்டெழுத்துக்களும் ஒவ்வொரு வகையில் சுட்டுப்பொருளைக் காட்டுகின்றன.

தூரத்திலே உள்ள பொருளை 'அ' என்னும் எழுத்தும் சமீபத்திலே உள்ள பொருளை 'இ' என்னும் எழுத்தும்.

நடுவிலும் பின்னுலும் உள்ள பொருளை 'உ' என்னும் எழுத்தும் சுட்டிக்காட்டும். இதை நீங்கள் அநுபவத்தில் காண்பீர்கள். 'உ' என்பது பெரும்பாலும் வழக்கத்தில் இல்லை.

விஞ எழுத்து

நீங்கள் ஏதாவது ஒரு பொருளைப்பற்றிக் கேட்கும்போது எது(?) என்றும், ஒருவரைப்பற்றிக் கேட்கும்போது யார்(?) என்றும் கேட்கிறீர்கள். அப்படிக் கேட்கும்போது கேள்வியை உணர்த்தும் சொற்களில் எ, யா என்பன விஞப்பொருளை உணர்த்துகின்றன. இவ்வாறு தமிழில் ஐந்து விஞ எழுத்துக்கள் இருக்கின்றன. அவை: எ, யா, ஆ, ஓ, ஏ என்பன. இவற்றுள் எ, யா என்ற இரண்டும் சொல்லின் முதலில் வந்து விஞப்பொருளை உணர்த்தும்.

(உதாரணம்) எவன்? யார்?

ஆ, ஓ என்ற இரண்டும் சொல்லின் கடைசியில் வந்து விஞப் பொருளை உணர்த்தும்.

(உ-ம்.) அவனு? அவனே?

ஏ சொல்லின் முதலிலும் கடைசியிலும் வந்து விஞப்பொருளை உணர்த்தும்.

(உ-ம்.) ஏவன்? அவனே?

பயிற்சி 3

1. சுட்டெழுத்து என்ருல் என்ன? அவை எத்தனே?
2. சுட்டெழுத்து எப்பொழுது உபயோகிக்கப்படும்?
3. தூரத்தில் உள்ள பொருளைச் சுட்டும் எழுத்து எது?
4. சமீபத்திலுள்ள பொருளைச் சுட்டும் எழுத்து எது?

5. பின்னால் உள்ள பொருளைச் சுட்டும் எழுத்து எது?
6. வினு எழுத்து என்பன யாவை? அவை எத்தனை?
7. வினு எழுத்து எப்பொழுது உபயோகிக்கப்படும்?
8. மொழிக்கு முதலில் வரும் வினு எழுத்துக்கள் யாவை?
9. மொழிக்குச் கடைசியில் வரும் வினு எழுத்துக்கள் யாவை?
10. 'ஏ' எவ்வாறு வினுப்பொருளை உணர்த்தும்?

சொல்

எழுத்துக்கள் தனியாகவோ, தொடர்ச்சியாகவோ வந்து ஒரு பொருள் தருமாயின் அது சொல் எனப்படும். எனவே சொல் என்பது பொருள் விளங்கக்கூடிய எழுத்துக் கூட்டம் என்பது தெளிவாகின்றது. சொல், பதம், வார்த்தை என்பன ஒரு பொருள் தருவன.

ஒரு எழுத்துச் சொற்கள்: பூ, ஈ, வா, நீ, போ என்பன.

பல எழுத்துச் சொற்கள்: பசு, கொக்கு, சென்றுன், வருகிறது, வாசிக்கிறுன் என்பன.

தமிழ் மொழியில் இச்சொற்கள் நான்கு வகையாகப் பகுக்கப்படும்.

அவை: பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்பன.

பெயர்ச்சொல்

பொருள்களின் பெயர்களைக் குறிக்க வருவனவெல்லாம் பெயர்ச்சொற்களாம்.

இப் பெயர்ச்சொல் ஆறு வகைப்படும்.

அவை: பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என்பனவாம்.

பொருட்பெயர்:- பொருளின் பெயரைக் குறிக்க வருவன வெல்லாம் பொருட்பெயர்களாகும்.

(உ-ம்.) மண், கல், நாற்காலி முதலியன.

இடப்பெயர்:- இடத்தின்பெயர்களைக் குறிக்க வருவன வெல்லாம் இடப்பெயர்களாகும்.

(உ-ம்.) பள்ளிக்கூடம், வீடு, தெரு, அறை.

காலப்பெயர்:- காலத்தைக் குறிக்க வரும் பெயர்களெல் லாம் காலப் பெயர்களாகும்.

(உ-ம்.) காலை, பகல், மணி, ஆண்டு.

சினைப்பெயர்:-ஒரு முழுப் பொருளின் உறுப்பு அல்லது சினையைக்குறிப்பனவெல்லாம் சினைப்பெயர்களாகும்.

(உ-ம்.) கை, கால், கிளை, ஏடு முதலியன.

குணப்பெயர்:-பொருளின் தன்மைஅல்லது குணத்தைக் குறிக்கவரும் பெயர்களெல்லாம் குணப்பெயர்களாகும்.

(உ-ம்.) நன்மை, வெண்மை, மெய்ம்மை.

தொழிற்பெயர்:- தொழிலின் பெயரைக் குறிக்க வரு கின்ற பெயர்களெல்லாம் தொழிற் பெயர்களாகும்.

(உ-ம்.) நடத்தல், வருதல், போதல்.

பயிற்சி 4

1. சொல் என்பது யாது ?
2. சொல் என்பதற்கு உள்ள வேறு பெயர்கள் யாவை?
3. ஓரெழுத்துச் சொற்கள் நான்கு எழுதிப் பொருள் தருக.
4. தமிழ் மொழியில் சொற்கள் எத்தனை வகைப்படும்? என்னென்ன ?
5. பெயர்ச்சொல் என்பது யாது ?
6. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்?
7. பெயர்ச்சொற்களில் உள்ள ஒவ்வொரு பிரிவையும் உன் பாட புத்தகத்தில் உள்ள உதாரணங்களைக்கொண்டு விளக்கு.

திணை

தமிழிலே உள்ள பெயர்களை யெல்லாம் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றனர். 'முருகன் இருக்கின்றான்.' 'மாடு இருக்கிறது.' இவ்விரண்டு வாக்கியங்களுக்கும் ஒரு வேறுபாடு இருப்பதாகத் தெரிகிறதல்லவா? அவ்வாறு வேறுபட்ட பிரிவே பகுப்பு எனப்படும். இப் பகுப்புக்குத் தமிழ் இலக்கணத்தில் திணை என்று பெயர். முருகன் என்றபொழுது உயர்வாகவும், மாடு என்றபொழுது தாழ்வாகவும் பொருள் விளங்குகின்றது. ஆகையினால் திணையும், உயர்திணை. அஃறிணை என இரண்டுவகைப் படுகின்றது.

உயர்திணையில் மக்கட் பெயரும், தேவர்கள் பெயரும் கீழுலகவாசிகளாகிய நரகர்கள் பெயரும் அடங்கும்.

(உ-ம்.) மனிதன், கடவுள், ஆதிசேடன் என்பன.

இதைப்போன்ற பெயர்கள் எல்லாம் உயர்திணைப் பெயர்களாம்.

மேலே காட்டிய உயர்திணைப் பொருள்களல்லாத உயிருள்ள பொருள்களும், எல்லா உயிரில்லாப்பொருள்களும் அஃறிணையில் அடங்கும். அவைகளின் பெயர்களெல்லாம் அஃறிணைப் பெயர்களாம்.

(உ-ம்.) பசு, மயில், மண், கல்.

பால்

எல்லாப் பெயர்களையும் இரண்டு பெரும் பிரிவில் பகுத்து, திணை எனப் பெயரிட்டிருப்பதைப் படித்தீர்கள். இனி அத் திணைகளுள் சில உட்பிரிவுகள் உள்ளன. அவைகளே பால் எனப்படுவன.

தமிழ் மொழியிலுள்ள பால் பகுப்பு ஐந்து வகைப்படும் அவை: ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பன.

ஆண்களின் பெயர்களை உணர்த்துவன எல்லாம் ஆண் பாற் பெயர்களாகும்.

(உ-ம்.) முருகன், கந்தன், இராமன்.

பெண்களின் பெயர்களை உணர்த்துவன எல்லாம் பெண் பாற் பெயர்களாகும்.

(உ-ம்) வள்ளி, சீதை, மரியாள்.

ஒன்றுக்கு மேற்பட்ட ஆணோ பெண்ணோ இருந்தாலும் அவர்கள் கலந்திருந்தாலும் அவர்களை உணர்த்தும் பெயர்கள் எல்லாம் பலர்பாற் பெயர்களாம்.

(உ-ம்.) தேவர், மாணுக்கர், சிறுமியர்.

மக்கள் அல்லாத பிற உயிருள்ள பொருள்களையும் உயிரற்ற பொருள்களையும் தனியாகக் குறிப்பதில், ஒரு பொருளைமட்டும் குறிக்கும் சொற்கள் எல்லாம் ஒன்றன்பாற் பெயர்களாம்.

(உ-ம்.) எருது, மாடு, கோழி, மேசை, புத்தகம்.

ஒன்றுக்கு மேற்பட்ட அஃறிணைப் பொருள்களைக் குறிப்பனவெல்லாம் பலவின்பாற் பெயர்களாம்.

(உ-ம்.) எருதுகள், மாடுகள், கோழிகள், மேசைகள், புத்தகங்கள்.

குறிப்பு:- மேல் கூறிய ஐந்து பால்களுள்ளும் ஆண்பால், பெண் பால், பலர்பால் என்ற மூன்றும் உயர்திணைப் பொருள்களைக் குறிப்பதால் உயர்திணைப் பால்கள் எனப்படும். மற்ற ஒன்றன் பால், பலவின்பால் என்ற இரு பால்களும் அஃறிணைப் பொருள் களைக் குறிப்பதால் அஃறிணைப்பால்கள் எனப்படும். அஃறிணையில் எல்லாப் பொருள்களிடத்தும் ஆண், பெண் வித்தியாசம் இல் லாமையால் அவை பிரித்துக் கூறப்படவில்லை.

எண்

மேலே கூறிய பால் பிரிவுகளில் சில பால்கள் ஒரு பொருளையும், சில பால்கள் பல பொருள்களையுங் குறிக்கின்றன. இவ்வாறு எண்ணிக்கையைக் காட்டுவதற்கு எண் என்று பெயர். இவ்வெண் ஒருமை, பன்மை என இரு வகைப்படும்.

ஒன்றைப்பற்றிக் குறிப்பனவெல்லாம் ஒருமை எண்ணுப் பெயர்களாம்.

(உ-ம்.) எருது, நாற்காலி, மேசை, பலகை, ஆசிரியர்.

ஒன்றுக்கு மேற்பட்டவைகளைக் குறிப்பனவெல்லாம் பன்மை எண்ணுப் பெயர்களாம்.

(உ-ம்.) எருதுகள், நாற்காலிகள், மேசைகள், பலகைகள், ஆசிரியர்கள்.

குறிப்பு:- மேலேகண்ட பால் பிரிவில் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் என்ற மூன்றும் ஒருமை எண்ணைச் சேர்ந்தனவாகும். மற்ற பலர்பால், பலவின்பால் என்பன பன்மை எண்ணைச் சேர்ந்தனவாகும்

இடம்

ஆசிரியர் கந்தனை நோக்கி 'நீ இராமனைப் பார்த்தாயா?' என்று கேட்கிறார். அப்படிக் கேட்கும்போது இவ்வாக்கியத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மூவராகின்றனர். இவ்வாக்கியத்தைச் சொல்லுபவர் ஆசிரியர். எதிரிலிருந்து கேட்பவன் கந்தன். ஆசிரியர் கேட்ட, எதிரிலே இல்லாதவன் இராமன். இவ்வாறு பேசும்போது அவற்றின் நிலை நோக்கி இடம் மூன்று வகைப்படுகின்றது. அவை: தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன. பேசுவோன் தன்மை இடம். எதிரிலிருந்து கேட்பவன் முன்னிலை இடம். மூன்றாவதாக இருந்து கேட்கப்படுபவன் படர்க்கை இடம்.

மேலே கண்ட வாக்கியத்தில் ஆசிரியர் தன்மை இடம், கந்தன் முன்னிலை இடம், இராமன் படர்க்கை இடம்.

குறிப்பு:- இவ்வாறே வேறு சில வாக்கியங்களைச் சொல்லி இவற்றை நன்கு அறிந்துகொள்க.

பயிற்சி 5

1. திணை என்பது யாது ?
2. திணை எத்தனை வகைப்படும்? என்னென்ன ?
3. உயர்திணையில் அடங்கும் பெயர்கள் யாவை ?
4. அஃறிணையில் அடங்கும் பெயர்கள் யாவை ?
5. பால் என்பது யாது ?
9. பால் எத்தனை வகைப்படும்? என்னென்ன ?
7. உயர்திணைக்கு உரிய பால்கள் எவை ?
8. அஃறிணைக்கு உரிய பால்கள் எவை ?
9. ஏன் அஃறிணையில் ஆண்பால், பெண்பால் என்ற வேறுபாடு இல்லை ?
10. பலர் பாலுக்கும் பலவின் பாலுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?
11. எண் என்பது எதைக் குறிக்கும் ?
12. எண் எத்தனை வகைப்படும் ?
13 ஒருமை எண்ணில் அடங்கும் பால்கள் யாவை ?
14. பன்மை எண்ணில் அடங்கும் பால்கள் யாவை ?
15. இடம் என்பது யாது ?
16. இடம் எத்தனை வகைப்படும்? என்னென்ன ?
17. இடத்தை எவ்வாறு நீ அறிந்து கொள்வாய் ?

வேற்றுமை

பெயர்ச் சொற்களின் கடைசியிலே ஒரு எழுத்தோ சில எழுத்துக்களோ தொடர்ந்து வந்து அப் பெயரின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமையாகும். அவ்வாறு கடைசியில் வரும் எழுத்துக்கள் வேற்றுமை உருபுகள் எனப்படும்.

இவ் வேற்றுமை எட்டு வகைப்படும். அவை: முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்ரும் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆரும் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என்பவைகளாகும்.

கந்தன் வந்தான்.
நான் கந்தனைக் கண்டேன்
இவ் வீடு கந்தனுல் கட்டப்பட்டது.
இதைக் கந்தனுக்குக் கொடு.
கந்தனில் முருகன் நல்லவன்.
இது கந்தனது வேல்.
கந்தன்கண் ஆசிரியர் அன்புடையவர்.
கந்தா வா.

மேலே கண்ட எட்டு வாக்கியங்களிலும் கந்தன் என்ற ஒரே சொல் பல்வேறு பொருள்களில் மாறுபட்டிருக்கிறது. அவ்வாறு மாறுபடுவதற்குக் காரணம் கந்தன் என்னும் சொல்லின் கடைசியில் தோன்றும் சில எழுத்துக்களே என்று தெரிகிறது. இவ்வாறு எட்டு வகையாகப் பெயர்ப் பொருளை வேறுபடுத்துவனவே எட்டு வேற்றுமைகளாகும்.

முதல் வேற்றுமை: இதற்குத் தனியாக ஒரு உருபு கிடையாது. பிற உருபுகளை யேற்கும் பெயர்ச் சொல்லே முதல் வேற்றுமையில் எழுவாயாக நின்று எழுவாய்ப் பொருளை உணர்த்தும். ஆகவே, இது எழுவாய் வேற்றுமை என்றும் அழைக்கப்படும்.

(உ-ம்.) ஆசிரியர் வந்தார். மாணவன் நின்ருன்.

இரண்டாம் வேற்றுமை: இதன் உருபு ஐ. இது செயப்படுபொருளாக வரும். ஆதலால் இதற்குச் செயப்படுபொருள் வேற்றுமை என்று பெயர்.

(உ-ம்.) 1. மணி அடித்ததும் மாணவர் பள்ளியை அடைந்தனர்.

2. நாள்தோறும் பாடத்தைப் படிக்க வேண்டும்.

இவ் விரண்டு வாக்கியங்களிலும் பள்ளி, பாடம் என்ற சொற்கள் ஐ உருபு ஏற்று செயப்படுபொருள் பெற்றுவந்தன.

மூன்றும் வேற்றுமை: இவ் வேற்றுமைக்கு ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன் என்பன உருபுகளாகும்.

(உ-ம்.) குயவனால் பாண்டம் செய்யப்பட்டது.
வாளான் மரத்தை அறுத்தான்.
ஆசிரியரோடு மாணவர் வந்தார்.
மகனோடு தந்தை வந்தார்.
பிள்ளைகளுடன் கலந்து இரு.

மேலே கண்ட வாக்கியங்களில் குயவனால், வாளான், ஆசிரியரொடு, மகனோடு, பிள்ளைகளுடன் என்ற சொற்கள் மூன்றும் வேற்றுமை உருபுகளுடன் வந்து, பொருள் வேறுபட்டன.

நான்காம் வேற்றுமை: இவ் வேற்றுமைக்கு உருபு கு.

(உ-ம்.) ஏழைகளுக்குச் சோறிட்டான். இராமனுக்குத் தம்பி இலக்குமணன்.

இவ்வாக்கியங்களில் ஏழைகளுக்கு, இராமனுக்கு என்னும் சொற்களில் கு உருபு வந்து, பொருள் வேறுபட்டன.

ஐந்தாம் வேற்றுமை: இவ் வேற்றுமையின் உருபுகள். இல், இன் என்பன.

(உ-ம்.) மலையின் வீழருவி.
கல்வியிற் பெரியவன் கம்பன்.
காக்கையிற் கரியது களாப்பழம்.

இவ்வாக்கியங்களில் மலையின், கல்வியில், காக்கையில் என்ற சொற்களில் இல், இன் என்ற உருபுகள் வந்து பொருள் வேறுபட்டன.

ஆறாம் வேற்றுமை: இதன் உருபுகள் அது, உடைய என்பன.

(உ-ம்.) எனது கை. என்னுடைய புத்தகம்.

இவ்வாக்கியங்களுள் எனது, என்னுடைய என்னும் சொற்களில் ஆறாம் வேற்றுமை உருபுகள் வந்து, பொருள் வேறுபட்டன.

குறிப்பு:- ஆறாம் வேற்றுமை பன்மைப் பொருளுக்கு அ என்பது உருபாக வரும். அதன் விளக்கத்தை மேல் வகுப்பிற் படிப்பீர்கள்.

ஏழாம் வேற்றுமை: இதன் உருபுகள் கண், இல் முதலியன.

(உ-ம்.) வீட்டின்கண் இருந்தான். பள்ளியில் படிக்கின்றான்.



பெயர்ச் சொல்
திணை
பால்
எண்
இடம்
வேற்றுமை
உயர்திணை
அஃறிணை
ஒருமை
பன்மை
ஆண், பெண், பலர், ஒன்று, பல.
தன்மை, முன்னிலை, படர்க்கை.
1
2
3
4
5
6
7
8

இவ்வாக்கியங்களில் வீடு, பள்ளி என்ற சொற்கள் கண், இல் என்ற ஏழாம் வேற்றுமை உருபுகளை யேற்று, பொருள் வேறுபட்டன.

எட்டாம் வேற்றுமை: இதற்குத் தனிமையாக ஒரு உருபும் கிடையாது. பெயர்ச்சொல்லின் கடைசி எழுத்து குறைந்தோ, கெட்டோ கடைசிக்கு முன்எழுத்து மாறுபட்டோ வரும். தூரத்திலுள்ளவனைத் தன்னிடத்தில் அழைப்பதற்கு இது பயன்படுகிறது.

(உ-ம்.) கந்தா வா. இராமனே படி.

இதில் கந்தன், இராமன் என்ற சொற்கள் கடைசியில் மாறுபட்டுக் கூப்பிடும் பொருளாகிய விளிப்பொருளை ஏற்றன.

இது விளிக்கும் பொருளில் வருவதால், இதற்கு விளி வேற்றுமை எனவும் பெயர்.

பயிற்சி 6

1. வேற்றுமை என்பது யாது?
2. வேற்றுமை உருபுகள் எதனோடு சேர்ந்து வரும்?
3. வேற்றுமை மொழியை என்ன செய்யும்?
4. வேற்றுமை எத்தனை வகைப்படும்?
5. ஒருசொல் எழுதி அதற்கு எட்டு வேற்றுமைகளையும் ஏற்றிக் காட்டு?
6. முதல் வேற்றுமை யாது? அதற்கு வேறு என்ன பெயர்?
7. இரண்டாம் வேற்றுமைக்கு உருபு யாது? அது எப்போது வரும்?
8. மூன்றும் வேற்றுமை உருபுகள் யாவை? எப்படிவரும்?
9. நான்காம் வேற்றுமைக்கு உருபு யாது? உதாரணம் தருக;

10. ஐந்தாம் வேற்றுமை உருபுகள் யாவை?
11. ஆறும் வேற்றுமை உருபுகள் யாவை? அவை எவ்வாறு வரும்?
12. ஏழாம் வேற்றுமை உருபுகள் யாவை? உதாரணம் தருக.
13. எட்டாம் வேற்றுமைக்கு உருபுகள் உண்டா?
14. எட்டாம் வேற்றுமை எதற்குப் பயன்படும்?
15. எட்டாம் வேற்றுமைக்கு உள்ள வேறு பெயர் யாது?
16. 'ஆசிரியர் பள்ளிக்கூடத்தை அடைந்து வகுப்பில் நுழைந்து மாணவர்களுக்கு அருகில் சென்று அவர்களுடைய மனதில் பதியும்படி நல்லுபதேசம் செய்தார்.' இவ்வாக்கியத்திலுள்ள வேற்றுமைகளைக் கண்டுபிடித்து அவை எவ்வெப் பொருளில் வந்தன என அறிவிக்க.

வினைச்சொல்

ஒரு பொருளின் தொழிலைக் குறிக்க வருவனவெல்லாம் வினைச்சொற்களாம். 'நீ பள்ளிக்கூடம் வந்தாய்.' இந்த வாக்கியத்தில் உன் தொழிலைக் காட்டுவது எது? 'வந்தாய்' என்னும் சொல்லல்லவா? இதுபோலவே 'நான் போகிறேன்' என்பதில் என் தொழிலாகிய போதலைக் காட்டுவது எது? 'போகிறேன்' என்ற சொல்லல்லவா? ஆகவே, அது வினைச்சொல்லாகும். இவ்வாறு ஒரு பொருளின் தொழிலைக் குறிக்க வருவன வினைச்சொற்களாம்.

'இராமன் வந்து பாடம் படித்தான்.' இவ் வாக்கியத்திலுள்ள வினைச்சொற்கள் எவை? இராமன், பாடம் என்ற இரண்டும் பெயர்ச்சொற்கள். மற்றுள்ள 'வந்து' என்பதும் 'படித்தான்' என்பதும் வினைச்சொற்களாகும். ஆனல், இந்த இரண்டு வினைச்சொற்களுக்கும் ஏதாவது வேறுபாடு தெரிகிறதா? 'வந்து' என்ருல் வந்து என்ன செய்தான்

என்ற கேள்விக்கு வழியாகின்றது. ஆகவே, 'வந்து' என்ற சொல் தனது தொழிலை முழுதும் காட்டவில்லை. அது முடிய வேறு ஒரு சொல் தேவையாயிருக்கிறது. 'வந்து படித்தான்' என்றதும் பொருள் நன்ருகத் தெரிகின்றது. 'வந்து' என்பது வேறு ஒரு சொல்லுக்கு எஞ்சி (குறைந்து) நிற்பதால் 'எச்சம்' என்று பெயர் பெறும். மற்ற 'படித்தான்' என்பது முடிந்த பொருளைத் தருவதால் 'முற்று' என்று பெயர் பெறும். எனவே, வினைச்சொல் முற்று என்றும் எச்சம் என்றும் இரண்டு வகைப்படும்.

வினைமுற்று: ஆசிரியர் வந்தார். பாடம் படித்தேன். இவ் வாக்கியங்களில் வந்தார், படித்தேன் என்ற வினைச்சொற்கள் முடிந்த பொருளைக் காட்டுகின்றன. இவ்வாறு தொழிலின் முடிந்த பொருளைக் காட்டும் வினைச்சொற்களுக்கெல்லாம் வினைமுற்று என்று பெயர்.

எச்சம்: மேலே பொருள் முடியாது வேறொரு சொல்லுக்கு (எஞ்சி) குறைந்து நிற்பது எச்சம் என்று பார்த்தோம்; அந்த எச்சம் இரண்டு வகைப்படும்.

வந்த மனிதன். வந்து போனுன். இந்த இரண்டு வாக்கியங்களையும் நோக்குக. வந்த என்ற எச்சம் மனிதன் என்ற பெயரைக் கொண்டு முடிகின்றது. இவ்வாறு பெயரைக் கொண்டு முடிவனவெல்லாம் பெயரெச்சம் எனப்படும்.

வந்து போனுன் என்ற வாக்கியத்தில் வந்து என்ற எச்சம் போனுன் என்ற வினையைக் கொண்டு முடிகின்றது. இவ்வாறு வினையைக் கொண்டு முடிவனவெல்லாம்

வினையெச்சங்களாம். எனவே, எச்சம் பெயரெச்சம் வினை யெச்சம் என இரு வகைப்படும்.

பயிற்சி 7

1. வினைச்சொல் என்றால் என்ன?
2. வினைச்சொல் எதைக் காட்டும்?
3. வினைச்சொற்களில் உள்ள வேறுபாடுகள் யாவை?
4. முற்றுவினை என்றால் என்ன? உதாரணம் தருக.
5. எச்சவினை என்றால் என்ன?
6. எச்சவினை எத்தனை வகைப்படும்? என்னென்ன?
7. எச்சவினைகள் இரண்டும் அவ்வாறு பெயர்பெறக் காரணம் என்ன? ஒரு வாக்கியத்தில் பெயரெச்சமும் வினையெச்சமும் முற்றும் வரும்படி எழுது.

வினைச்சொற்களின் பாகுபாடுகள்:- இனி, இவ் வினைச் சொற்களில் உள்ள சில பாகுபாடுகளைப் பார்ப்போம்.

கந்தன் பாடத்தைப் படித்தான். நான் நடந்தேன். இந்த இரண்டு வாக்கியங்களிலும் உள்ள வினைச்சொற்கள் யாவை? படித்தான், நடந்தேன் என்பன. இவற்றுள் படித்தான் என்பது கந்தன் என்ற எழுவாய்க்குப் பயனிலை யாக வந்தது. எதைப் படித்தான் என்று கேட்டால் பாடத்தை என்று பதில் வருகின்றது. இவ்வாறு வருவது செயப்படுபொருளாகும். நடந்தேன் என்றபோது எதை நடந்தேன் என்றால் பதில் என்ன? ஒன்றுமில்லை. ஆகை யால் சில வினைச்சொற்கள் செயப்படுபொருள்கள் பெற்றும், சில பெறுதும் வருகின்றன. செயப்படுபொருள் பெற்று வருகின்றனவெல்லாம் செயப்படுபோருள் குன்றுவினைகளா

கும். செயப்படுபொருள் பெறுதுவருவனவெல்லாம் செயப்படுபொருள் குன்றிய வினைகளாகும். இவ்வாறு சில வாக்கியங்கள் சொல்லி அறிந்துகொள்க.

ஏவல் வினை:-ஆசிரியர் மாணவனைப் பார்த்து நீ பாடம் படி என்று சொல்கின்றார். இதில் உள்ள வினைச்சொல் எது? 'படி' என்பதாகும். இது ஆசிரியர் மாணவனை ஏவல் இடுவது அல்லவா? இவ்வாறு ஏவல் அல்லது கட்டளை இடுவதாக வரும் சொல்லெல்லாம் ஏவல் வினைகளாம்.

(உ-ம்.) புத்தகம் எடு. நூல் பல கல். எடு, கல் முதலியன ஏவல் வினைகளே.

வியங்கோள்:-நாம் நம்மினும் பெரியாரைப் பார்த்தால் வருக! உட்காருக! என்று அழைக்கின்றோம். திருமணங்களுக்குச் சென்றால் பெரியோர்கள் கலியாண மக்களை வாழ்க! என்று வாழ்த்துகிறார்கள். இவ்வாறாக மரியாதையோடு சொல்லும் வினைச்சொற்களும் வாழ்த்துவினைச் சொற்களும் வியங்கோள் வினைச் சொற்களாகும்.

நீ வாழ்க! நீங்கள் வருக! தமிழ் தழைக்க! முதலியவற்றில் வியங்கோள் வினை வருதல் கண்டுகொள்க.

பயிற்சி 8

1. செயப்படுபொருள் குன்றிய வினை என்றால் என்ன?
2. செயப்படுபொருள் குன்றா வினை என்றால் என்ன?
3. செயப்படுபொருளை வினையைக் கொண்டு எப்படி அறிவாய்?
4. ஏவல்வினை என்றால் என்ன?
5. ஏவல் என்பதன் பொருள் என்ன?

6. வியங்கோள் என்பது யாது?
7. ஏவல், வியங்கோள் வினைகள் வரும் வாக்கியங்கள் ஐந்தைந்து எழுது.

காலம்

உலகத்திலே காலத்தை மூன்றாகப் பகுத்துள்ளார்கள். நாம் இப்பொழுது அனுபவித்து வரும் காலம்—நிகழ்கின்ற காலம்—நிகழ் காலமாகும்.

நமக்குமுன் எத்தனையோ காலங்கள் மறைந்து - இறந்து விட்டன. அக் காலமெல்லாம் இறந்த காலமாகும்.

நமக்குப் பின்னால் எத்தனையோ காலங்கள் எதிரில் இருக்கின்றன. அக் காலமெல்லாம் எதிர் காலமாகும்.

எனவே, காலம் இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என மூவகைப்படும்.

ஒரு வாக்கியத்தில் இக் காலத்தைக் காட்டுவது எது? வினைச்சொல்லே. பெயர்ச் சொல்லுக்குத் திணை, பால், எண் இடம் இருப்பதுபோல வினைச்சொல்லுக்கும் உண்டு. ஆனால், வேற்றுமை கிடையாது. அதற்குப் பதிலாக வினைச்சொல் காலத்தைக் காட்டும்.

நான் நேற்று பள்ளிக்கூடம் வந்தேன்
நான் இன்று பள்ளிக்கூடம் வருகிறேன்
நான் நாளை பள்ளிக்கூடம் வருவேன்

இந்த மூன்று வாக்கியங்களையும் கவனிக்க. முதல் வாக்கியத்தில் நேற்று வந்தேன் என்று நடந்த—இறந்த நிகழ்ச்சியைக் குறிக்கின்றது. ஆகவே வந்தேன் என்பது

இறந்தகாலத்தைக் காட்டுகின்றது. அதுபோலவே, வருகிறேன் என்பது இன்று நிகழும் செயலாதலால் நிகழ் காலத்தையும், வருவேன் என்பது நாளை எதிர்காலத்தில் நிகழப் போகும் வினையாதலால் எதிர்காலத்தையும் குறிப்பனவாகும்.

இவ்வாறு வருதலாகிய ஒரே வினை மூன்று காலத்துக்கும் மாறி வரும்போது அம்மாறுதலை விளக்கும் எழுத்துக்கள் எவை? இடையில் உள்ள இரண்டொரு எழுத்துக்களல்லவா? அவைகளைப்பற்றி மேல் வகுப்பில் நன்ருகப் படிப்பீர்கள்.

பயிற்சி 9

1. காலம் எத்தனை வகைப்படும்? என்னென்ன?
2. காலத்தைக் காட்டும் சொல் யாது?
3. இறந்தகாலம் என்பது யாது? அது அவ்வாறு பெயர்பெறக் காரணம் என்ன?
4. நிகழ்காலம் என்ருல் என்ன? உதாரணம் தருக.
5. எதிர்காலம் என்ருல் என்ன? அது அவ்வாறு அழைக்கப் படக் காரணம் என்ன?
6. சொல்லில் மூன்று கால மாறுதலையும் காட்டுவது எது?

இடைச்சொல்

பெயர்ச்சொல் தனியாக வந்து ஒரு பொருளின் பெயரைக் காட்டிற்று. வினைச்சொல் தனியாக வந்து ஒரு பொருளின் தொழிலைக் காட்டிற்று. ஆனல் இடைச்சொல் அவ்வாறு தனியாக வந்து ஒரு பொருளைக் காட்டாது. பெயர்ச்சொற்களோடும், வினைச்சொற்களோடும் கலந்து

அவற்றை இடமாகக் கொண்டுவந்து இடைச்சொற்கள் தத்தம் பொருள்களைக் காட்டும்.

வேற்றுமை உருபுகளும், இடைநிலைகளும் விகுதி முதலியவைகளும் உம், ஏ, ஓ முதலியனவும் இடைச்சொற்களாம்.

(உ-ம்.) இராமனும் கிருஷ்ணனும் வந்தனர். மரத்தை அறுத்தான். மண்ணால் செய்த குடம். அவனே கொண்டான். நானோ சென்றேன்.

உரிச்சொல்

ஒரு பொருளின் குணத்தை விளக்கவரும் சொல் உரிச்சொல்லாம். இச்சொல்லும் தனியே வழங்காது பெயர்ச்சொல்லையேனும் வினைச்சொல்லையேனும் அடுத்துவரும். இது பெரும்பாலும் செய்யுட்களிலேயே வரும்.

சால, உறு, தவ, கடி முதலியன உரிச்சொற்களாம்.

சாலப் பசித்தான். தவப் பெரியன். கடி நகர்.

(சால - மிகவும்.) (தவ - மிகவும்.) (கடி - காவல்.)

பயிற்சி 10

1. இடைச்சொல் என்பது யாது? அது எங்கே வரும்?
2. இடைச்சொல் வருவதால் பயன் என்ன?
3. எவை எவை இடைச்சொற்களாக வரும்?
4. உரிச்சொல் என்பது யாது? அது எதைக் காட்டும்?
5. உரிச்சொல் எவ்விடத்தைச் சார்ந்து வரும்?
6. இரண்டு உரிச்சொல் எழுதி அவற்றை விளக்கு.

புணர்ச்சி

எழுத்துக்கள் ஒன்றோடொன்று சேர்ந்து சொல்லாயிற்று என்பதை அறிந்தோம். அச்சொற்கள் ஒன்றோடொன்று சேர்ந்து வாக்கியம் அல்லது சொற்றொடர் ஆகும். அவ்வாறு சொற்கள் ஒன்றோடொன்று சேருவதைப்பற்றிக் கூறுவதுதான் புணர்ச்சியாகும்.

ஒரு சொல் மற்றொரு சொல்லோடு சேரும்போது சில சமயங்களில் யாதொரு வேறுபாடும் இல்லாமல் அப்படியே இருக்கும். 'பள்ளிக்கூடம் வந்தான்' என்ற சொற்றொடரில் இரண்டு சொற்கள் ஒன்றோடொன்று சேருகின்றன. இவ்வாறு சேரும்போது அச்சொற்களில் உள்ள எழுத்துக்கள் மாறாமல் அப்படியே இருக்கின்றன. இவ்வாறு அப்படியேமாறாது இயல்பாக இருப்பதற்கு இயல்புப் புணர்ச்சி என்று பெயர்.

சில சொற்கள் ஒன்றோடொன்று சேரும்போது ஓரெழுத்து கெட்டோ, மாறியோ, அதிகப்பட்டோ நிற்கும். படித்தற்கு நயமாய் இருக்கும்பொருட்டும், சொல்லழகு முதலிய பெறும்பொருட்டும் இவ்வாறு மாறுகின்றன. இப்படி மாறும் புணர்ச்சியெல்லாம் விகாரப் புணர்ச்சி எனப் படும்.

தோன்றல், திரிதல், கெடுதல் மூன்றும் விகாரப் புணர்ச்சிகளே.

வாழை + பழம் = வாழைப்பழம் — தோன்றல் விகாரம்

புத்தகம் + கொண்டான் = புத்தகங் கொண்டான் — திரிதல் விகாரம்

மரம் + வேர் = மர வேர் — கெடுதல் விகாரம்

இத்தகைய விகாரங்களை உன் பாட புத்தகத்தில் கண்டு பிடித்து மேலும் தெரிந்துகொள்க.

பயிற்சி 11

1. புணர்ச்சி என்பது யாது?
2. இயல்புப் புணர்ச்சி என்றால் என்ன?
3. விகாரப் புணர்ச்சி என்றால் என்ன?
4. விகாரப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்?
5. 'இராமன் பள்ளிக்கூடம் வந்து பாடங்களைச் செவ்வையாகப் படித்து முதல் வகுப்பிற் றேர்ச்சி பெற்றுப் பெருமை யுற்றான்.' இவ் வாக்கியத்தில் உள்ள புணர்ச்சிகளைக் காட்டுக.

உயிரின் முன் உயிர்:- புணர்ச்சியில் இரண்டு சொற்கள் சம்பந்தப்பட்டுள்ளன. ஒன்று நிலைத்த அல்லது இருக்கும் நிலைமொழி. மற்றொன்று அத்துடன் வந்து சேரும் வருமொழி. எனவே புணர்ச்சியில் நிலைமொழி, வருமொழி இரண்டும் முக்கியங்களாகும்.

நிலைமொழி கடைசியிலும் உயிர் எழுத்து இருந்து, வருமொழி முதலிலும் உயிர் எழுத்து வந்தால் அப்பொழுது எழுத்துக்கள் எவ்வாறு மாறும்?

நிலைமொழியின் கடைசியில் இ, ஈ, ஐ என்னும் உயிர் எழுத்துக்கள் இருந்து, வருமொழி முதலில் உயிர் எழுத்துக்கள் வந்தால் 'ய்' என்ற மெய்யெழுத்து வந்து தோன்றும். இவ்வாறு இரண்டு உயிர்களையும் உடம்படுத்தி ஒன்று சேர்த்தலால் இது உடம்படுமெய் என்ற பெயரைப் பெறும்.

(உ-ம்.) மணி + அழகு—மணியழகு. தீ + எழுந்தது—தீயெழுந்தது. கலை + அடுத்தான்—கலையடுத்தான்.

நிலைமொழியின் கடைசியில் அ, ஆ, உ, ஊ, எ, ஒ, ஓ, ஔ என்ற உயிரெழுத்துக்களிருந்து, வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால் 'வ்' என்ற மெய்யெழுத்து வந்து தோன்றும். இது வகர உடம்படுமெய்யென்று பெயர் பெறும்.

(உ-ம்.) பல + அணி = பலவணி
பலா + அறிந்தான் = பலாவறிந்தான்
எரு + இட்டான் = எருவிட்டான்
பூ + ஆடை = பூவாடை
கோ + ஏறினன் = கோவேறினன்

'ஏ' என்ற உயிர் எழுத்து நிலைமொழிக் கடைசியிலிருந்து, வருமொழி முதலில் உயிர் வந்தால் ய், வ் என்ற இரண்டு மெய்யெழுத்துக்களும் தோன்றும்.

(உ-ம்.) தே + ஆரம் = தேவாரம்
அவனே + அடித்தான் = அவனேயடித்தான்

உயிரின்முன் மெய்:- நிலைமொழியின் கடைசியில் உயிர் எழுத்து இருந்து, வருமொழி முதலில் க, ச, த, ப என்னும் மெய் எழுத்துக்கள் வந்தால் அவை பெரும்பாலும் மிகும்.

(உ-ம்.) வாழை + காய் = வாழைக்காய்
பலா + பழம் = பலாப்பழம்
குளிக்க + சென்றுன் = குளிக்கச்சென்றுன்
வாழை + தண்டு = வாழைத்தண்டு

மெய்யின்முன் உயிர்:- நிலைமொழியின் கடைசியில் மெய் எழுத்து இருந்து, வருமொழி முதலில் உயிரெழுத்து

வந்தால் அது இயற்கைப் புணர்ச்சியாகும். உடலில் உயிர் சேர்ந்து நிற்றல் இயற்கையாயிருக்கிறபடியால் இப்புணர்ச்சியும் இயற்கைப் புணர்ச்சியாயிற்று. வருமொழி முதலில் உள்ள உயிர் நிலைமொழியின் கடைசியில் உள்ள மெய்மீது ஏறி உயிர்மெய் எழுத்தாக வரும்.

(உ-ம்.) பலன் + இது = பலனிது
கலம் + அறுத்தான் = கலமறுத்தான்
வேல் + எறிந்தான் = வேலெறிந்தான்

மெய்யின்முன் மெய்:- நிலைமொழியின் கடைசியில் மெய்யெழுத்தும், வருமொழி முதலில் மெய்யெழுத்தும் இருந்தால் சில இயல்பாகவும், சில தோன்றல், திரிதல், கெடுதல் விகாரங்களைப் பெற்றும் வரும்.

இயல்பு
(உ-ம்.) மண் + மாட்சி = மண்மாட்சி
வேர் + நீண்டது = வேர்நீண்டது

தோன்றல்
தேர் + கால் = தேர்க்கால்
தாய் + பால் = தாய்ப்பால்

திரிதல்
பொன் + தகடு = பொற்றகடு
முள் + தீது = முட்டீது

கெடுதல்
மரம் + வேர் = மரவேர்

பயிற்சி 12

1. உயிரின்முன் உயிர் என்றால் என்ன?
2. வருமொழி நிலைமொழி என்பன யாவை?
3. உயிரின்முன் உயிர் வந்தால் எவ்வாறு புணரும்?

4. உடம்படுமெய் என்று எதற்குப் பெயர்?
5. உடம்படுமெய் எத்தனை? எவ்வாறு?
6. உயிரொடு உயிர் சேருதலை இரண்டு உதாரணங்களால் விளக்குக.
7. 'ஏ' முன் உயிர் வந்தால் என்ன ஆகும்?
8. உயிர் முன் மெய்யெழுத்து என்றால் என்ன?
9. உயிர் முன் க, ச, த, ப வந்தால் எவ்வாறு மாறும்? ஒவ்வொன்றிற்கும் இரண்டிரண்டு உதாரணங்கள் தருக.
10. மெய்யின் முன் உயிர் வந்தால் எவ்வாறு புணரும்?
11. மெய் முன் உயிர் வரும்போது இயற்கைப் புணர்ச்சியாவது எவ்வாறு?
12. மெய்யின் முன் மெய் வந்தால் எவ்வாறு புணரும்? உதாரணம் தருக.

சொற்றொடர்

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வருவதற்குச் சொற்றொடர் என்று பெயர்.

(உ-ம்.) கந்தன் வந்தான்.
மாணவர் வந்து

இங்கே இரண்டு சொற்றொடர்கள் உள்ளன. முதலாவதான 'கந்தன் வந்தான்' என்ற சொற்றொடரில் பொருள் நன்றாக விளங்குகின்றது. இவ்வாறு முழுப்பொருள் விளங்கவரும் சொற்றொடருக்கு முற்றுச் சொற்றொடர் என்று பெயர்.

இரண்டாவது உள்ள 'மாணவன் வந்து' என்ற வாக்கியத்தில் பொருள் முடிந்துள்ளதா? இல்லையே. இவ்வாறு

பொருள் முடிவுபெருது, சில சொற்கள் தொடர்ந்து வருவதற்கு எச்சச் சொற்ருெடர் என்று பெயர்.

எனவே சொற்ருெடர் எச்சச் சொற்ருெடர் என்றும், முற்றுச் சொற்ருெடர் என்றும் இரு வகைப்படும்.

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்

இவ்வாறு வரும் சொற்ருெடர்கள் முக்கியமாக எழுவாய், பயனிலை என்ற இரண்டினுல் ஆக்கப்பட்டிருக்கும். எழுவாய் என்பது யாது? ஒரு வாக்கியத்தின் கருத்தாவாக வருவதே எழுவாயாகும். அதாவது ஒரு வாக்கியத்தில் நடைபெறும் நிகழ்ச்சியைச் செய்பவன். அந்த நிகழ்ச்சியைக் குறித்து ஒரு வாக்கியத்தைக் கொண்டு முடிக்கவரும் வினைச்சொல்லே பயனிலையாகும். இனி, இந்த இரண்டுமல்லாது செயப்படுபொருள் என்பது வாக்கியங்களில் வருவதும்உண்டு. அதாவது அந்த வினை அல்லது பயனிலையின் பயன். அதற்குச் செயப்படுபொருள் என்று பெயர்.

எனவே ஒரு வாக்கியத்தில் முக்கியமாக வேண்டுவன எழுவாய், பயனிலை என்பதும், செயப்படுபொருளும் ஒவ்வொரு வாக்கியத்தில் வரும் என்பதையும் அறிகிருேம்.

இராமன் வந்தான். இதில் இராமன் என்ற எழுவாயும், வந்தான் என்ற பயனிலையும் மட்டும் வந்தன.

இராமன் பாடத்தைப் படித்தான் என்பதில் இராமன் என்ற எழுவாயும், படித்தான் என்ற பயனிலையும், பாடத்தை என்ற செயப்படு பொருளும் வந்தன.

இவற்றைக் கண்டுபிடிப்பது எப்படி?

முதலில் ஒரு வாக்கியத்தில் வரும் தொழில் அல்லது பயனிலை எது என்று தெரிந்துகொள்ளவேண்டும். பிறகு அச்செயலைச் செய்தவர் யார் அல்லது செய்தது எது என்று கேட்டால் வரும் பதிலே எழுவாயாகும்.

பயனிலையை வைத்து எதை, யாரை என்று கேட்டால் அதற்கு வரும் பதிலே செயப்படுபொருளாகும்.

தமிழில் வினைச்சொல் மட்டும் அல்லாது பெயர்ச் சொல்லும், வினாச்சொல்லும்கூடப் பயனிலையாக வருவது உண்டு.

(உ-ம்.) மயில் அழகான பறவை. மயிலேறும் பெரு மான் யார்?

குறிப்பு:—சில வாக்கியங்களில் எழுவாய் மறைந்துவரும். அவ்வாறு மறைந்து வரும் எழுவாய்க்குத் தோன்றா எழுவாய் என்று பெயர்.

(உ-ம்.) 'இங்கு வா' இதில் நீ என்ற எழுவாய் தோன்றாமல் மறைந்துள்ளது.

பயிற்சி 13

1. சொற்றொடர் என்றால் என்ன?
2. சொற்றொடர் எத்தனை வகைப்படும்? என்னென்ன?
3. வாக்கியத்திற்கு முக்கியமாக வேண்டுவன யாவை?
4. எழுவாய் என்பது யாது?
5. பயனிலை என்பது யாது?
6. செயப்படுபொருள் என்பது யாது?

7. எழுவாயையும், செயப்படுபொருளையும் எப்படிக் கண்டு பிடிப்பாய்?
8. தமிழில் பயனிலையாக எவ்வெச் சொற்கள் வரும்? உன் பாடத்திலிருந்து உதாரணம் காட்டு.
9. தோன்று எழுவாய் என்றால் என்ன? அது எப்படி வரும்?

குறியீடுகள்

வாக்கியங்கள் ஒன்றோ, பல தொடர்ந்தோ வரும்போது அவற்றின் பொருள்கள் நன்கு விளங்கவும், அவை வாசிப்பதற்கு இனிமை பயக்கவும், எம்மொழியிலும் சில குறியீடுகள் இருக்கின்றன.

நாம் பொருள் விளங்க வாசிக்கும்போது இன்னின்ன இடத்தில், இன்னின்ன அளவு நிறுத்தவேண்டும் என்று சில நிறுத்துக் குறிகள் உள்ளன. அவை: காற் புள்ளி, அரைப் புள்ளி, முக்காற் புள்ளி, முற்றுப் புள்ளி, வினாக் குறி, வியப்புக் குறி என்பனவாம்.

, இது காற் புள்ளி. இக் குறியிட்ட இடங்களில் ஒரு மாத்திரை அல்லது ஒரு கை நொடிப்பொழுதே நிறுத்திப் பிறகு மேலே படிக்கவேண்டும்.

; இது அரைப்புள்ளி. இங்கு இரண்டு மாத்திரை நேரம் நிறுத்திப் பிறகு மேலே படிக்க வேண்டும்.

: இது முக்காற் புள்ளி. இங்கு மூன்று மாத்திரை நேரம் நிறுத்திப் பிறகு மேலே படிக்க வேண்டும்.

. இது முற்றுப் புள்ளி. இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும். இது வாக்கிய முடிவைக் குறிக்க வருவதாகும்.

? இது வினாக்குறி. ஏதேனும் ஒன்றைப் பற்றியோ, யாரேனும் ஒருவரைப் பற்றியோ கேட்கும் போது இக்குறி உபயோகிக்கப்படும்

! இது வியப்புக்குறி. ஏதேனும் ஆச்சரியமான பொருளைக் கண்டு அதைப்பற்றி ஆச்சரியத்தோடு சொல்லும் போது இக்குறி உபயோகிக்கப்படும்.

பயிற்சி 14

1. குறியீடுகள் என்பன யாவை?
2. குறியீடுகளின் அவசியம் என்ன?
3. தமிழில் உள்ள குறியீடுகள் யாவை?
4. தமிழ்க் குறியீடுகள் ஒவ்வொன்றையும் உதாரணங் காட்டி விளக்கு.

ஏழாம் வகுப்பு (II FORM)

எழுத்து

தமிழிலே உள்ள எழுத்துக்களை உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்து, ஆய்த எழுத்து என நான்கு வகையாகப் பிரித்துள்ளதை நீங்கள் கீழ் வகுப்பில் படித்திருக்கிறீர்கள்.

இவ் வகுப்பில் எழுத்தைப்பற்றி அறியவேண்டியவை இன்னும் சில உள.

முதல் எழுத்து, சார்பெழுத்து

எழுத்துக்கள், முதலெழுத்து என்றும் சார்பெழுத்து என்றும் இரு வகைப்படும். அதாவது மற்ற எழுத்துக்கள் பிறப்பதற்கு முதலாக உள்ள எழுத்துக்கள் முதலெழுத்துக்களாம். அவை: உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டும் ஆகும். தமிழிலே உள்ள மற்றெல்லா எழுத்துக்களும் இந்த முப்பது எழுத்துக்களின் அடியாகவே பிறக்கின்ற காரணத்தினுலே இவை முதலெழுத்து எனப்பட்டன. ஒரு பெரிய இடத்திலிருந்து பல்வேறு கிளைகள் தோன்றுவது போன்று, இம் முப்பது எழுத்துக்களினின்று மற்ற தமிழ் எழுத்துக்களெல்லாம் பிறக்கின்றன.

சார்பெழுத்துக்களில் உயிர்மெய் எழுத்துக்களும் சேர்ந்தனவாகும். உயிர்மெய் எழுத்துக்கள் உயிரும் மெய்யும் சேர்ந்து ஒன்றை ஒன்று சார்ந்து பிறக்கின்ற காரணத்தினுலே சார்பெழுத்தாகும்.

குற்றியலுகரம்

இதுவும் ஒரு சார்பெழுத்தாகும். குற்றியலுகரம் என்ருல், உகரம் தனக்குரிய ஓசையினின்று குறைந்து நிற்பதாகும். ஒரு உகரம் ஒரு சொல்லின் கடைசியிலே வரும்

பொழுது தன் ஓசையில் குறைந்து நிற்கும். அந்த உகரம் க், ச், ட், த், ப், ற் என்ற ஆறு வல்லெழுத்துக்களின்மீது ஏறி, கு, சு, டு, து, பு, று என்று ஆகும். அவ்வாறு வரும் எழுத்துக்களுக்கு முன் ஓரே ஒரு குற்றெழுத்து இருந்தால் அப்பொழுது குற்றியலுகரமாகாது.

(உ-ம்.) அது, இது. (இவை குற்றியலுகரமல்ல)

இக் குற்றியலுகரம் ஆறு வகைப்படும். எவ்வாறெனில் சொல்லின் கடைசியில் வரும் இந்த உகரத்திற்கு முன்னால் என்ன எழுத்து இருக்கின்றதோ, அதைக்கொண்டு குற்றியலுகரத்தின் பிரிவைக் கணக்கிடுவார்கள்.

'பாக்கு' இச்சொல்லின் கடைசியில் 'கு' என்ற குற்றியலுகரம் இருக்கின்றது. அந்த உகரத்திற்கு முன் 'க்' என்ற வல்லினம் வருகின்றது. ஆகையினால் இது வன்தொடர்க் குற்றியலுகரமாகும். இதுபோலவே, மென்தொடர்க் குற்றியலுகரம், இடைத்தொடர்க் குற்றியலுகரம், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம், நெடில்தொடர்க் குற்றியலுகரம், ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் என மற்றப் பிரிவுகளும் உள்ளன.

(உ-ம்.) வன் தொடர்—பாட்டு
மென் தொடர்—பஞ்சு
இடைத் தொடர்—மார்பு
உயிர்த் தொடர்—பாலாறு
நெடில் தொடர்—காது
ஆய்தத் தொடர்—எஃகு

முற்றியலுகரம்

இவ்வாறு குற்றியலுகரமாக வராதனவெல்லாம் முற்றியலுகரங்களாம்.

(உ-ம்.) பசு, வரவு, கதவு.

இன்னும் இவைகளைப்பற்றி அறியவேண்டியவற்றையும் மற்ற சார்பெழுத்துக்களைப்பற்றியும் மேல் வகுப்பில் படிப்பீர்கள்.

பயிற்சி 1

1. முதல் எழுத்து என்றால் என்ன? அவை யாவை? அவற்றிற்கு முதல் எழுத்துக்கள் என்று ஏன் பெயர் வந்தது?
2. சார்பெழுத்து என்றால் என்ன? அவற்றுள் இரண்டொன்றை எழுது. அவை அவ்வாறு பெயர்பெறக் காரணம் என்ன?
3. முதலெழுத்திலிருந்து சார்பெழுத்துக்கள் எவ்வாறு உண்டாகின்றன?
4. உயிர்மெய் எழுத்து எப்படிச் சார்பெழுத்தாகும்?
5. குற்றியலுகரம் என்றால் என்ன?
6. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்?
7. குற்றியலுகரத் தொடரை நீ எவ்வாறு கண்டு பிடிப்பாய்?
8. குற்றியலுகர மல்லாத உகரங்களுக்கு என்ன பெயர்?

அகச் சுட்டு, புறச் சுட்டு

அ, இ, உ என்ற மூன்று எழுத்துக்களும் பொருள்களைச் சுட்டிக் காட்டுவதால் சுட்டெழுத்துக்கள் என்பதை அறிவீர்கள். இவ்வெழுத்துக்கள் ஒரு சொல்லின் உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் சுட்டுப் பொருளைக் காட்டும். அவ்வாறு பதத்திற்கு உள்ளிருந்து சுட்டுப் பொருளை விளக்குவது அகச் சுட்டு என்றும், மற்றவை புறச் சுட்டு என்றும் பெயர் பெறும்.

(உ-ம்.) அவன், இவன், உவன். இவை மூன்றும் அகச் சுட்டுக்கள்.

இச்சொற்களிலிருந்து சுட்டெழுத்துக்களை நீக்கிவிட்டால் இச்சொற்கள் கெட்டு ஒரு பொருளையும் தராது

போகின்றன. அதனால் சுட்டெழுத்துக்கள் சொல்லிற்கு உள்ளேயே இருந்து பொருளைத் தருகின்றன என்பது தெரிகின்றது. இவ்வாறு வருவனவெல்லாம் அகச் சுட்டுக்களாகும்.

இனி, அம் மனிதன், இவ் வாசான், உப்பக்கம் என்ற இச்சொற்களிலுள்ள சுட்டெழுத்துக்களை நீக்கிவிட்டால் அப்பொழுதும் மீதியுள்ள சொற்கள், மனிதன், ஆசான், பக்கம் என்ற பொருள்களைத் தருகின்றன. இவ்வாறு பதங்களின் வெளியேயிருந்து சுட்டுப் பொருள்களை உணர்த்துவனவெல்லாம் புறச் சுட்டுக்களாகும்.

எனவே, சுட்டு அகச் சுட்டு, புறச் சுட்டு என இரு வகைப்படும் என்பதை அறிக.

அக வினா, புற வினா

எ, யா, ஆ, ஓ, ஏ என்ற ஐந்து எழுத்துக்களும் ஒரு மொழிக்கு முதலிலோ கடைசியிலோ வந்து வினாப்பொருளை உணர்த்துகின்ற காரணத்தினாலே, இவைகள் வினா எழுத்துக்கள் என்பதை நீங்கள் கீழ் வகுப்பில் படித்தீர்கள். இனி, இவ் வினா அக வினா, புற வினா என்று இருவகைப் படுவதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

எவன், யாவன், எது என்ற சொற்களில் எ, யா, எ என்ற வினா எழுத்துக்கள் அச்சொற்களுக்கு உள்ளேயே வந்து வினாப் பொருளை உணர்த்துகின்றன. இவ் வினா எழுத்துக்களை எடுத்துவிட்டால். அச்சொற்களின் பொருள் நன்றாக விளங்குவதில்லை. இவ்வாறு ஒரு பதத்திற்கு

உள்ளேயே வந்து வினாப் பொருளை உணர்த்துவனவெல்லாம் அக வினாவாகும்.

எம்மனிதன், யாங்கனம், கண்ணனா. இச்சொற்களில் வினா எழுத்துக்கள் சொல்லோடு சம்பந்தப்படாது வந்து தனியாக நின்று வினாப் பொருளை உணர்த்துகின்றன. இவ்வாறு தனியாக வந்து நின்று வினாப் பொருளை உணர்த்துவன வெல்லாம் புற வினா ஆகும்.

எனவே, வினா, அக வினா, புற வினா என இருவகைப் படும் என்பதை அறிக.

பயிற்சி 2

1. சுட்டெழுத்து எத்தனை வகைப்படும்? என்னென்ன?
2, அகச்சுட்டு என்றால் என்ன?
3. 'அவன்' இது அகச்சுட்டானால் ஏன் அவ்வாறு அழைக்கப் படுகிறது?
4. புறச்சுட்டு என்பது யாது? அது எப்படி வரும்?
5. புறச்சுட்டு, அகச்சுட்டுகளுக்கு உன் பாட உதாரணம் தருக.
6. வினா எத்தனை வகைப்படும்?
7. அகவினா என்பது யாது? அது எவ்வாறு வரும்?
8, வினா எழுத்துக்களில் எந்தெந்த எழுத்துக்கள் அகவினாவாக வரும்?
9. புறவினா என்பது யாது? அது எப்படி வரும்?
10. அகவினா புறவினாவிற்கு உன் பாட உதாரணம் தருக.

இன எழுத்துக்கள்

தமிழ் எழுத்துக்களில், நீங்கள் உச்சரிக்கும்போதும் எழுதும்போதும் சிற்சில எழுத்துக்கள் ஒன்றையொன்று, ஒலியாலும் உருவத்தாலும் ஒத்திருப்பதைக் கூர்ந்து கவனித்

தால் அறிவீர்கள். இவ்வாறு, ஒலி, வடிவு முதலியவற்றில் ஒத்திருப்பனவெல்லாம் இன எழுத்துக்களாகும்.

உயிர் எழுத்துக்களைச் சொல்லும்போது அ, ஆ; இ, ஈ; உ, ஊ என்று உச்சரிக்கிறீர்கள். அவைகளின் வடிவமும் ஒலியும் ஒன்றையொன்று ஒத்திருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு குறிலும் அதை அடுத்தபடியுள்ள நெடிலும் இன எழுத்துக்களாகும்.

அ-ஆ; இ-ஈ; உ-ஊ; எ-ஏ; ஒ-ஓ. இவ்வாறு பத்து எழுத்துக்கள் இனமாவது போக, ஐ, ஔ என்ற இரண்டு எழுத்துக்களுக்கும் இன எழுத்துக்கள் யாவை? ஐ என்பது அ+இ என்ற கலப்பு ஒலியாகத் தோன்றுகின்றது. ஔ என்பது அ+உ என்ற கலப்பு ஒலியாகத் தோன்றுகின்றது. எனவே, ஐ—இ; ஔ—உ என்பன இன எழுத்துக்களாகும்.

இனி, மெய்யெழுத்துக்கள் பதினெட்டையும், அவைகள் பிறக்கும் இடத்தைப்பற்றி வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற மூன்று இனமாகப் பிரித்து இருக்கின்றனர். ஆனல், நாம் உச்சரிக்கும்போது, க, ங. ச, ஞ, ட, ண, த, ந என உச்சரிக்கின்றோம். ஆகையினுல், கவுக்கு ஙவும், சவுக்கு ஞவும் இனமாகின்றன. இதுபோல ஒவ்வொரு வல்லினத்திற்கும் ஒவ்வொரு மெல்லினம் இனமாகின்றது. இடையினம் ஆறும் ஒரே இனம் ஆகும்.

க்-ங், ச்-ஞ், ட்-ண், த்-ந், ப்-ம், ற்-ன்,
ய—ர—ல—வ—ழ—ள;

குறிப்பு:—மெய் எழுத்துக்களில் ற், ர் என்பனவும், ன், ண், ந் என்பனவும் ஒன்றுக்கொன்று ஒற்றுமை உடையனபோல் வருகின்

றன. ஆகையினால், இவற்றைப் பிரித்துச் சொல்வதற்காக வல்லின றகரம் என்றும், இடையின ரகரமென்றும், டண்ணகரம், தந்நகரம், றன்னகரம் என்றும் வேறுபடுத்திக் கூறுகின்றோம்.

பயிற்சி 3

1. இன எழுத்து என்றால் என்ன?
2. உயிர் எழுத்துக்களை எப்படி இனவாரியாகப் பிரிப்பாய்?
3. ஐ, ஔ என்ற இரண்டிற்கும் இன எழுத்துக்கள் யாவை?
4. வல்லெழுத்துக்கள் எவ்வாறு இனவாரியாகப் பிரிக்கப்படுகின்றன.
5. வல்லின மெல்லினங்கள் எவ்வாறு தம்முள் இனமாகப் பிரிக்கப்படும்?
6. (a) மெய்யெழுத்துக்களில் ஏறக்குறைய ஒரே வகையாக ஒலியுடைய எழுத்துக்கள் யாவை?
   (b) அவைகளை எவ்வாறு பிரித்துக் காட்டுவாய்?

சொற்கள்

தமிழிலேயுள்ள சொற்கள் பகுபதம், பகாப்பதம் என்று இரு வகையாகப் பிரிக்கப்படும்.

பகுபதம் என்பது பல வகையாகப் பிரிக்கப்படும் சொல்லாகும். பகுபதத்திற்குரிய உறுப்புக்கள் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்பனவாம். இவற்றுள் பகுதியாவது, ஒரு பதத்தின் முதலில் நிற்பதாகும். விகுதியாவது ஒரு பதத்தின் கடைசியில் இருப்பதாகும். இடைநிலை இரண்டிற்கும் நடுவிலே இருப்பதாகும்.

இம் மூன்றும் பகுபத இலக்கணத்திற்கு முக்கியங்களாம்.

(உ-ம்.) செய்தான். இதை, செய்+த்+ஆன் என்று பிரிக்கலாம். இவற்றுள் செய் என்பது பகுதி. த் இடைநிலை. ஆன் விகுதி.

இவ்வாறு பிரிக்க வருகின்ற சொற்கள் எல்லாம் பகுபதங்களாகும்.

தனித்தனியாகப் பிரிக்கமுடியாமல் வரும் பதங்களெல்லாம் பகாப்பதங்களாம்.

(உ-ம்.) மண், கல், நட, செல்.

பெயர்ச்சொல்

பெயர்ச்சொற்கள் இடுகுறிப்பெயர் என்றும், காரணப்பெயர் என்றும் இருவகைப்படும். ஏதாவது ஒரு காரணங் கருதி ஒரு பொருளுக்கு இடும் பெயர் காரணப் பெயராகும்.

(உ-ம்.) நாற்காலி. இது நான்கு கால்களை உடையதால் நாற்காலி என்று பெயர் பெற்றது.
எழுதுகோல். இது எழுதுவதற்கு உபயோகப்படுவதால் எழுதுகோல் என்று பெயர் பெற்றது.

இவ்வாறன்றி, ஒரு காரணமுமில்லாது பண்டைக் காலமுதற்கொண்டு வழங்கி வரும் பெயர்களெல்லாம் இடுகுறிப் பெயர்களாம்.

(உ-ம்.) மரம், மண், கல்.

போதுப் பெயர், சிறப்புப் பெயர்

பெயர்ச் சொற்கள், பொதுப் பெயர் எனவும் சிறப்புப் பெயர் எனவும் இரு வகைப்படும். அதாவது: பலவற்றிற்

குப் பொதுவாக வரும் பெயர்களும், ஒன்றற்கே சிறப்பாக வரும் பெயர்களுமாம்.

(உ-ம்.) அணி அணிந்தார். இதில் அணி என்பது அணிகின்ற எல்லா ஆபரணங்களுக்கும் பொதுவாக வருதலால் இது பொதுப் பெயர்.

வளையல் அணிந்தாள். இதில் வளையலென்பது ஒரே ஆபரணத்துக்குப் பெயராய் வருதலால் இது சிறப்புப் பெயர்.

இன்னும் சில உதாரணங்கள்:

பொதுப் பெயர்	சிறப்புப் பெயர்
மரம்	தென்னை
பாடம்	தமிழ்
ஆயுதங்கள்	கத்தி
பந்து விளையாட்டு	உதைப் பந்து

பயிற்சி 4

1. தமிழிலே உள்ள சொற்களை எவ்வாறு பிரிக்கலாம்?
2. பகுபதத்திற்கும், பகாப்பதத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
3. பெயர்ச்சொல்லிலுள்ள முக்கிய வேறுபாடுகள் யாவை?
4. இடுகுறி, காரணம் இவைகளுக்குள்ள வேறுபாடுகள் யாவை?
5. பொதுப் பெயர் என்றால் என்ன? காரணத்தோடு விளக்கு.
6. சிறப்புப்பெயர், பொதுப் பெயரின் எவ்வாறு வேறுபட்டது?

பெயர்ச் சொல்லின் பிரிவுகள்

பெயர்ச் சொற்கள், பொருட் பெயர், இடப் பெயர், காலப் பெயர், சினைப் பெயர், பண்புப் பெயர், தொழிற் பெயர் என்று ஆறு வகைப்படும். இப் பெயர்களோடு

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்பவற்றின் அடியாகப் பிறக்கின்ற பிற பெயர்களும் அடங்கும்.

உதாரணம்:--

அறு வகைப் பெயர்கள்		அவற்றின் அடியாகப் பிறப்பன
1 பொருள்	செல்வம்	செல்வன், செல்வி
	மலர்	மலரான், மலராள்
2 இடம்	குறிஞ்சி	குறிஞ்சியான், குறிஞ்சியாள்
	இல்லம்	இல்லத்தான், இல்லாள்
3 காலம்	கேட்டை	கேட்டையான், கேட்டையாள்
	காலை	காலையான், காலையாள்
4 சினை	கண்	கண்ணன், கண்ணம்மாள்
	தோள்	தோளன், தோளி
5 குணம்	நன்மை	நல்லான், நல்லாள்
	பெருமை	பெரியன், பெரியள்
6 தொழில்	ஈதல்	ஈவான், ஈவாள்
	கொடை	கொடுப்பான், கொடுப்பாள்

இவ்வாறன்றி பெயர்கள் வேறு சில வகையாகவும் வரும். அவை: கிளைப் பெயர், சாதிப் பெயர்: அளவுப் பெயர், சுட்டுப் பெயர், வினைப் பெயர், திணைப் பெயர், பால் பெயர், எண்ணுப் பெயர், இடப் பெயர் என்பனவாகும்.

கிளைப் பெயர்:- இது ஒருவரது சுற்றத்தாரைக் குறிக்க வரும் பெயராகும். இதை முறைப் பெயர் என்றும் சொல்வார்கள்.

(உ-ம்.) தாய், தந்தை, மாமன். அக்காள்.

சாதிப் பெயர்:- இது பல்வேறு வகைப்பட்ட சாதிகளைக் குறிக்க வரும் பெயராகும்.

(உ-ம்.) அந்தணன், அரசன், அறிவோன் முதலியன.

அளவுப் பெயர்:- இவ்வளவுப் பெயர் பல்வேறு வகைப் பட்ட அளவுகளைக் குறிக்க வரும் பெயராகும்.

அது: நீட்டல் அளவை, முகத்தல் அளவை, எண்ணல் அளவை, எடுத்தல் அளவை என நான்கு வகைப்படும்,

(உ-ம்.) நீட்டல் அளவை: அடி, அங்குலம், சாண்.
முகத்தல் அளவை: நாழி, படி, உழக்கு.
எண்ணல் அளவை: ஒன்று, ஐந்து, பத்து.
எடுத்தல் அளவை: வீசை, பலம், மணங்கு.

சுட்டுப் பெயர்:- சுட்டுப் பொருளைப்பற்றி வருவன வெல்லாம் சுட்டுப் பெயர்களாம்.

(உ-ம்.) அவன், இவன், உவன்.

வினுப் பெயர்:- வினுப் பொருளை உணர்த்த வரும் பெயர்களெல்லாம் வினுப் பெயர்களாம். இவ் வினுப் பெயர்கள் மொழிக்கு முதலில் வருகின்ற எ, ஏ, யா என்ற எழுத்துக்களின் அடியாகவே பிறக்கும்.

(உ-ம்.) எவன்? ஏவன்? யார்?

திணைப் பெயர்:- திணை, உயர்திணை, அஃறிணை என இரு வகைப்படும் என்பதைக் கீழ் வகுப்பில் படித்துள்ளீர்கள்.

அவ்வாறே திணைப் பெயரும் உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர் என இரு வகைப்படும்.

உயர் திணைப் பொருள்களைக் குறிக்க வருகின்ற பெயர்களெல்லாம் உயர் திணைப் பெயர்களாம்.

(உ-ம்.) மகன், மகள், தேவன், முருகன.

அஃறிணைப் பொருள்களைக் குறிக்க வரும் பெயர்களெல்லாம் அஃறிணைப் பெயர்களாம்.

(உ-ம்.) காய், மயில், கல், மண்.

பால் பெயர்:- பால், ஆண் பால், பெண் பால், பலர் பால், ஒன்றனபால், பலவின் பால் என ஐந்து வகைப்படுமென்பதை அறிவீர்கள். இந்த ஐந்து வகைகளின் அடியாகப் பிறக்கின்ற பெயர்களெல்லாம் அந்தந்தப் பாலால் வரும்பெயர்களாகும்.

ஆண் பாலைக் குறிக்க வருகின்ற பெயர்களெல்லாம் ஆண் பாற் பெயர்களாம்.

(உ-ம்.) கந்தன், இராமன், அரசன்.

பெண் பாலைக் குறிக்க வருகின்ற பெயர்களெல்லாம் பேண் பாற் பெயர்களாம்.

(உ-ம்.) சீதை, வள்ளி, அரசி, தேவி.

பலர் பாலைக் குறிக்க வருகின்ற பெயர்களெல்லாம் பலர் பாற் பெயர்களாம்.

(உ-ம்.) மக்கள், அரசர், பெண்டிர்.

ஒன்றன் பாலைக் குறிக்க வருகின்ற பெயர்களெல்லாம் ஒன்றன் பாற் பெயர்களாம்.

(உ-ம்.) மாடு. எருது, கல்.

பலவின் பாலைக் குறிக்க வருகின்ற பெயர்களெல்லாம் பலவின் பாற் பெயர்களாம்.

(உ-ம்.) மாடுகள், கற்கள், எருதுகள்.

எண்ணுப் பெயர்கள்:- எண், ஒருமை, பன்மை என இரு வகைப்படும் என்பது நீங்கள் அறிந்ததே. அவ்வாறே பெயர்களும் ஒருமை எண்ணுப் பெயர், பன்மை எண்ணுப் பெயர் என இரு வகைப்படும்.

ஒருமைப் பொருளைத் தர வரும் பெயர்களெல்லாம் ஒருமை எண்ணுப் பெயர்களாம்.

(உ-ம்.) மனிதன், நாற்காலி, பள்ளிக்கூடம்.

பன்மைப் பொருளைத் தர வரும் பெயர்களெல்லாம் பன்மை எண்ணுப் பெயர்களாம்.

(உ-ம்.) மனிதர், நாற்காலிகள், பள்ளிக்கூடங்கள்.

இடப் பெயர்:— இடம், தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும் என்பதை அறிவீர்கள். இவற்றுள், தன்மைப் பொருளைக் குறிக்க வரும் பெயர்களெல்லாம் தன்மைப் பெயர்களாம்.

(உ-ம்.) நான், யான், நாம், யாம், நாங்கள், யாங்கள்.

முன்னிலைப் பெயர்:- முன்னிலைப் பொருளைக் குறிக்க வருகின்ற பெயர்களெல்லாம் முன்னிலைப் பெயர்களாம்.

(உ-ம்.) நீ, நீர், நீவிர், நீங்கள்.

படர்க்கைப் பெயர்:- படர்க்கைப் பொருளைக் குறிக்க வருகின்ற பெயர்களெல்லாம் படர்க்கைப் பெயர்களாம்.

(உ-ம்.) அவன், அவள், அது, அவை.

பயிற்சி 5

1. பெயர்ச்சொல்லின் உட்பிரிவுகள் யாவை?
2. அறுவகைப் பெயர்களும் அவற்றின் அடியாகப் பிறப்பனவும் எவை எவை என விளக்குக:
3. பெயர்கட்கும் அவற்றின் அடியாக பிறப்பனவற்றிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
4. கிளைப்பெயர் என்றால் என்ன? உதாரணம் தருக?
5. ஜாதிப் பெயர் என்றால் என்ன?
6. அளவுப்பெயர் எத்தனை வகைப்படும்? என்னென்ன?
7. சுட்டுப்பெயர், வினாப்பெயர் என்பன யாவை?
8. திணைப்பெயர்கள் எவ்வெவ்வாறு வரும்?
9. பாலால் வரும் பெயர்கள் எவ்வாறு பிரிக்கப்படுகின்றன?
10. எண்ணுப்பெயர்களும் இடப்பெயர்களும் யாவை?

ஆகு பெயர்

சொற்களில் ஆகு பெயர் என்று ஒரு பிரிவு உண்டு. அதாவது, ஒன்றின் பெயர் அதனோடு சம்பந்தப்பட்ட மற்றொன்றுக்கு ஆகி வருவது. அது, பொருளாகு பெயர், இடவாகு பெயர், காலவாகு பெயர், சினையாகு பெயர், பண்பாகு பெயர், தொழிலாகு பெயர் என ஆறு வகைப்படும்.

பொருளாகு பெயர்:- ஒரு பொருளின் பெயர் அதனோடு சம்பந்தப்பட்ட சினைக்கு ஆகி வருவது பொருளாகு பெயராம். (சினை = உறுப்பு: அவயவம்.)

(உ-ம்.) தாமரை பூத்தது.

இதில் தாமரை என்ற கொடியின் பெயர் அதன் சினையாகிய பூவிற்கு ஆகி வந்தது.

இடவாகு பெயர்:- ஒரு இடத்தின் பெயர் அதில் உண்டாகிய பொருளுக்கு ஆகி வருவது இடவாகு பெயராம்.

(உ-ம்.) சேலம் வாங்கினான். சேலம் என்னும் இடப்பெயர் அதில் நெய்யப்பட்ட துணிக்கு ஆகி வந்தது, ஊர் அடங்கிற்று. இதில் ஊர் என்னும் இடப்பெயர் அதில் உள்ள மக்களுக்கு ஆகி வந்தது.

காலவாகு பெயர்:- ஒரு காலத்தின் பெயர் அதில் உண்டாகும் பொருளுக்கு ஆகி வருவது காலவாகு பெயராம்.

(உ-ம்.) கார் அறுத்தது.

இதில் கார் என்னும் காலப்பெயர் அக்காலத்தில் அறுக்கும் நெல்லுக்கு ஆயிற்று.

சினையாகுபெயர்:- ஒரு சினையின் பெயர் அதன் முதற் பொருளுக்கு ஆகி வருவது சினையாகு பெயராம்.

(உ-ம்.) தலைக்கு ஆயிரம் பொன் கொடுத்தான்.

இதில் தலை என்ற சினை அதையுடைய மனிதனுக்கு ஆகி வந்தது.

குணவாகு பெயர்:- ஒரு குணத்தின் பெயர் அக்குணத்தையுடைய பொருளுக்கு ஆகி வருவது குணவாகு பெயராம்.

(உ-ம்.) வண்ணான் வெள்ளை கொடுத்தான்.

வீட்டுக்கு வெள்ளை அடித்தான்.

இதில் வெள்ளை என்னும் பண்புப் பெயர் அக்குணத்தையுடைய பொருளுக்கு ஆகி வந்தது.

தொழிலாகு பெயர்:- ஒரு தொழிலின் பெயர் அத்தொழிலினால் செய்யப்பட்ட பொருளுக்கு ஆகி வருவது தொழிலாகு பெயராம்.

(உ-ம்.) வற்றல் உண்டான்.

இதில் வற்றல் என்னும் தொழிற் பெயர் அதனால் உண்டாக்கப்பட்ட பொருளுக்கு ஆயிற்று.

பயிற்சி 6

1. ஆகுபெயர் என்பன யாவை?
2. ஆகுபெயர் எத்தனை வகைப்படும்?
3. பொருளாகு பெயர் என்றால் என்ன?
4. 'சேலம் வாங்கினான்' இவ்வாக்கியத்தில் வந்த ஆகுபெயர் எது?
5. காலவாகுபெயர் எவ்வாறு வரும்?
6. சினையாகுபெயர் என்றால் என்ன? உதாரணம் தருக,
7. குணவாகுபெயர் என்பது யாது? அது எப்படி வரும்?
8 'வற்றல் உண்டான்' இவ்வாக்கியத்திலுள்ள ஆகுபெயர் யாது?

வேற்றுமை

வேற்றுமை என்பது எட்டு வகைப்படும். இவ் வேற்றுமை எட்டினுள் முதல் வேற்றுமைக்கும் கடைசி வேற்றுமைக்கும் தனியாக உருபுகள் கிடையா. மற்ற இடையிலே உள்ள ஆறு வேற்றுமைகளுக்கும் தனித்தனி உருபுகள் உண்டு. இவற்றுள் முதல் வேற்றுமை எழுவாய் வேற்றுமை என்றும், எட்டாம் வேற்றுமை விளிவேற்றுமை என்றும் பெயர் பெறுகின்றன.

முதல் வேற்றுமை பெயர்ச்சொல்லளவாகவிருந்து எழுவாய்ப் பொருளைக் காட்டி நிற்கின்ற காரணத்தினல் எழுவாய் வேற்றுமை என்று அழைக்கப்படுகின்றது. இவ் வெழுவாய்கள் பெயரையும், வினையையும், வினவையும் பயனிலையாகக் கொண்டு முடியும்.

(உ-ம்.) கந்தன் அவன்.

கந்தன் என்ற எழுவாய் அவன் என்ற பெயர்ப் பயனிலையைக் கொண்டு முடிந்தது.

கந்தன் வந்தான்.

இதில் கந்தன் என்ற எழுவாய் வந்தான் என்ற வினைப் பயனிலையைக் கொண்டு முடிந்தது.

கந்தன் யார்?

இதில் கந்தன் என்ற எழுவாய் யார் என்ற வினப் பயனிலையைக் கொண்டு முடிந்தது.

எட்டாம் வேற்றுமை விளி வேற்றுமை என்று அழைக்கப்படுகின்றது. ஏனென்றால், எட்டாம் வேற்றுமைப் பெயர்கள் மூன்றாமிடமாகிய படர்க்கையில் உள்ளவர்களை முன்னிலை இடமாக்கி விளிக்க உபயோகப்படுகின்றது.

(உ-ம்.) கந்தா வா.

இவ்வாறுள்ள விளி வேற்றுமை அண்மை விளி யென்றும், சேய்மை விளி யென்றும் இருவகைப்படும். அண்மை விளியாவது, சமீபத்திலுள்ளவர்களை அழைப்ப தாகும். அப்பொழுது பெயர்கள் இயற்கையாகவோ கடைசி யெழுத்து குறைந்தோ இருக்கும்.

(உ-ம்.) முருகன், முருக.

சேய்மை விளியாவது, தூரத்திலுள்ளவர்களை அழைப் பதாகும். அப்பொழுது அப்பெயர்கள் சிற்சில மாறுத லடையும்.

(உ-ம்.) கந்தா! கந்தனே! கந்தாவோ!

வேற்றுமைத் தொகையும், விரியும்

இரண்டு முதலாக ஏழாம் வேற்றுமை முடிவாக இடையிலே உள்ள ஆறு வேற்றுமைகளுக்கும் தனித்தனி உருபுகள் உள்ளன. இரண்டாம் வேற்றுமைக்கு ஐயும், மூன்றாம் வேற்றுமைக்கு ஆல், ஆன், ஒடு, உடன்என்பனவும், நான்காம் வேற்றுமைக்கு குவும், ஐந்தாம் வேற்றுமைக்கு இன்னும், இல்லும், ஆறாம் வேற்றுமைக்கு அது, ஆது, அ, உடைய என்பனவும், ஏழாம் வேற்றுமைக்கு இல், இடத்தில், கண் என்பனவும் உருபுகளாம். இவ்வுருபுகள் பெயர்ச்

சொற்களின் கடைசியிலே வந்து வெவ்வேறு வகையாக அப் பெயர்ச் சொற்களின் பொருளை மாறுபடுத்தி நிற்கும்.

இரண்டாம் வேற்றுமைக்குச் செயப்படுபொருள் பொருளாகும். ஆதலால் இது செயப்படுபொருள் வேற்றுமை என்றழைக்கப்படும்.

மூன்றும் வேற்றுமை கருவிப் பொருள், கருத்தாப் பொருள், உடனிகழ்ச்சிப் பொருள் என்ற மூன்று பொருளிலும் வரும்.

நான்காம் வேற்றுமை பெரும்பாலும் கொடைப் பொருளில் வரும். மற்றும் பகை, தகுதி முதலியவற்றிலும் வரும்.

ஐந்தாம் வேற்றுமை நீங்கல், ஒப்பு, எல்லை ஏதுப் பொருள்களில் வரும்.

ஆறும் வேற்றுமை உரிமைப் பொருள்களில் வரும். அவ்வுரிமை தற்கிழமை, பிறிதின்கிழமை என இருவகைப் படும்.

தற்கிழமை என்பது தன்னோடு சம்பந்தப்பட்டுப் பிரிக்கமுடியாமல் வருவது.

பிறிதின்கிழமை என்பது தன்னோடு சம்பந்தப்பட்டு பிரிக்க முடியுந் தன்மையதாய் வருவது.

ஏழாவது வேற்றுமை இடப்பொருளில் வருவது. இதுவும் மேலே கூறிய தற்கிழமை, பிறிதின்கிழமை என்ற பாகுபாட்டைக் கொண்டுள்ளது.

உதாரணம்.

வேற்றுமை	உருபுகள்	பொருள்	உதாரணம்
1 இரண்டாம் வேற்றுமை	ஐ	ஆக்கல்	வீட்டைக் கட்டினான்
		அழித்தல்	காட்டை அழித்தான்
		அடைதல்	ஊரை அடைந்தான்
		நீத்தல்	நாட்டை நீங்கினான்
		ஒத்தல்	காளையை ஒத்தான்
		உடைமை	தம்பியை உடையான்
2 மூன்றாம் வேற்றுமை	ஆல், ஆன், ஒடு, உடன்	கருவி	வாளான் வெட்டினான்
		கருத்தா	அரசனால் கட்டப்பட்டது
		உடன் நிகழ்ச்சி	தந்தையோடு மகன் வந்தான்
3 நான்காம் வேற்றுமை	'கு'	கொடை	ஏழைக்குக் கொடுத்தான்
		பகை	பாம்புக்குப் பகை கருடன்

			நட்பு	இராமனுக்கு நண்பன் குகன்
			தகவு	விரலுக்குத் தக்க வீக்கம்
			அதுவாதல்	காப்புக்கு ஏற்ற பொன்
			பொருட்டு	கூலிக்கு வேலை செய்தான்
			முறை	இராமனுக்குத் தம்பி இலக்குமணன்
4	ஐந்தாம் வேற்றுமை	இல், இன்	நீங்கல்	மலையின் வீழ் அருவி
			ஒப்பு	காக்கையிற் கரிது களாப்பழம்
			எல்லை	காஞ்சியின் கிழக்கு சிவபுரம்
			ஏது	கல்வியில் பெரியவர் கம்பர்
5	ஆறாம் வேற்றுமை	அது, ஆது, அ, உடைய	(உரிமை)	
			தற்கிழமை	எனது கை
			பிறிதின்கிழமை	என்னுடைய மோதிரம்
6	ஏழாம் வேற்றுமை	இல், இடத், தில், கண்	(இடம்)	
			தற்கிழமை	மணியின் கண் ஒளி
			பிறிதின்கிழமை	மாடத்தினிடத்தில் விளக்கு

(உ-ம்.)

	வேற்றுமைத்தொகை	வேற்றுமை விரி
2-ம் வேற்றுமை	மரம் அறுத்தான்	மரத்தை அறுத்தான்
	பாடம் படித்தான்	பாடத்தைப் படித்தான்
3-ம் வேற்றுமை	கல்லெறிந்தான்	கல்லால் எறிந்தான்
	வாள் வீசினான்	வாளால் வீசினான்
4-ம் வேற்றுமை	கூலி வேலை	கூலிக்கு வேலை
	பள்ளி சென்றான்	பள்ளிக்குச் சென்றான்
5-ம் வேற்றுமை	மலை அருவி	மலையின் (வீழ்) அருவி
	பள்ளி வடக்கு	பள்ளியின் வடக்கு
6-ம் வேற்றுமை	என் கை	எனது கை
	பள்ளி வேலை	பள்ளியினுடைய வேலை
7-ம் வேற்றுமை	வீடு நுழைந்தான்	வீட்டில் நுழைந்தான்
	நிற அழகு	நிறத்தின்கண் அழகு

பயிற்சி 7

1. வெற்றுமை எத்தனை வகைப்படும்?
2. முதல் வேற்றுமைக்குள்ள வேறு பெயர் யாது? அது அப் பெயர் பெறக் காரணம் என்ன?
3. எட்டாம் வேற்றுமை விளி வேற்றுமை என்று அழைக்கப் படக் காரணம் என்ன?
4. விளிவேற்றுமை எத்தனை வகைப்படும்? என்னென்ன?
5. அண்மை விளிக்கும் சேய்மை விளிக்கும் உள்ள வேறுபாடு கள் யாவை?
6. வேற்றுமைத் தொகை என்றால் என்ன?
7. வேற்றுமை விரி என்பது யாது?

8. இரண்டு முதல் ஏழு வேற்றுமைகளும் எவ்வெப்போது வரும்?
9. வேற்றுமைத் தொகைக்கும், வேற்றுமை விரிக்கும் உள்ள வேறுபாடுகளை உதாரணத்தோடு விளக்குக.

வினைச் சொல்

ஒரு பொருளின் தொழிலைக் காட்டுவது வினைச் சொல் என்றும், அது திணை, பால், எண், இடம், காலம் இவைகளைக் காட்டுமென்றும் கீழ் வகுப்பில் படித்தீர்கள். இனி, வினைச் சொற்களிலுள்ள சில பிரிவுகளையும் மற்றும் சிலவற்றையும் தெளிவாகப் படிப்பீர்கள்.

வினைச் சொல், தெரிநிலை வினை என்றும், குறிப்பு வினை என்றும் இரு வகையாகப் பிரிக்கப்படும்.

தெரிநிலை வினை:- ஒரு வினைச்சொல் பொருள் நன்கு விளங்குமாறு காலத்தோடு தொழிலைத் தெளிவுபடுத்துவது.

குறிப்பு வினை:- ஒரு வினைச்சொல் குறிப்பாகக் காலத்தைக் காட்டி தனக்குரிய பொருளை விளக்குவது.

கந்தன் பந்து ஆடினான்.
கந்தன் பொன் பெரியன்.

இந்த இரண்டு வாக்கியங்களிலும் எழுவாய், பயனிலை யாவை? முதல் வாக்கியத்தில் கந்தன் என்ற எழுவாயும், ஆடினான் என்ற பயனிலையும் இருக்கின்றன. ஆனால், இரண்டாவது வாக்கியத்தில் கந்தன் என்ற எழுவாயும், பெரியன் என்ற பயனிலையும் இருக்கின்றன. இவ் விரண்டு வாக்கியங்களிலுமுள்ள பயனிலைகள், பாலை ஒன்றாகக் காட்டினபோதி

லும் சிலவற்றில் மாறுபடுகின்றன. ஆடினான் என்ற வினைச் சொல் ஆடு என்ற வினையின் அடியாகப் பிறந்து இறந்த காலத்தை நன்கு தெரியக்காட்டி செயப்படுபொருளைக் கொண்டு நிற்கின்றது. ஆனால், பெரியன் என்ற வினைச் சொல்லோ பெருமை என்ற பண்புப்பெயர் அடியாகப் பிறந்து காலத்தைக் குறிப்பாகக் காட்டிச் செயப்படுபொருள் இல்லாமல் வருகின்றது. ஆகையினால், இவற்றுள் ஆடினான் என்பது தெரிநிலை வினை என்பதும், பெரியன் என்பது குறிப்பு வினை என்பதும் புலப்படுகின்றது. எனவே, தொழிலையும், காலத்தையும், செயப்படு பொருளையும் தொழிலுக்குக் கருவியாயிருப்பதையும், செய்யும் கர்த்தாவையும் விளக்குவது தெரிநிலை வினை முற்றாகும்.

காலத்தையும், செயப்படுபொருளையும் குறிப்பாகக் காட்டி செய்பவனை மாத்திரம் விளக்கிப் பொருளாதி அறுவகைப் பெயர்களின் அடியாகப் பிறப்பது குறிப்பு வினை முற்றாகும்.

வினைகள் உற்பத்தி

நடந்தான், பொன்னன், ஓடினான், பாடினான், கண்ணன் இவைகளில் தெரிநிலை வினை குறிப்பு வினை முற்றுக்கள் யாவை?

நடந்தான், ஓடினான், பாடினான் என்பன தெரிநிலை வினை முற்றுக்களாம். இவைகள் எவைகளின் அடியாகப் பிறந்தன?

நடந்தான் என்பது நட என்ற வினையின் அடியாகவும், ஓடினான் என்பது ஓடு என்ற வினையின் அடியாகவும்,

பாடினான் என்பது பாடு என்ற வினையின் அடியாகவும் பிறந்தன. எனவே, தெரிநிலை வினை முற்றுக்களெல்லாம் தத்தமக்கு ஒரு மூல வினையைக் கொண்டு பிறக்கின்றன. அம் மூல வினைகளே பகுதிகள் எனப்படும்.

பொன்னன், கண்ணன் என்பன குறிப்பு வினைகள். இவைகள் எவைகளை அடியாகக் கொண்டு பிறந்தன? பொன், கண் என்ற பெயர்ச்சொற்களை அடியாகக் கொண்டு பிறந்தவைகள் அல்லவா? ஆகவே, இவ்வாறு பொருளாதி அறுவகைப் பெயர்களின் அடியாகப் பிறப்பவைகளெல்லாம் குறிப்பு வினை முற்றுக்களாம்.

பயிற்சி 8

1. வினைச்சொல் காட்டுவன யாவை?
2. வினைச்சொல் எத்தனை வகைப்படும்? என்னென்ன?
3. குறிப்பு வினைக்கும் தெரிநிலை வினைக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன?
4. தெரிநிலை வினைமுற்று எதை எதைக் காட்டும்?
5. குறிப்பு வினைமுற்று காட்டுவன யாவை?
6. தெரிநிலை வினைகள் எவற்றின் அடியாகப் பிறக்கும்?
7. குறிப்பு வினைகள் எவற்றின் அடியாகப் பிறக்கும்?
8. தெரிநிலை குறிப்பு வினைமுற்றுகள் இரண்டிரண்டை உன் பாட உதாரணங்கொண்டு விளக்கு:

முற்று வினைகளும் எச்ச வினைகளும்

வினைச் சொல், வினை முற்று என்றும், பெயரெச்சம் என்றும், வினையெச்சம் என்றும் மூவகைப்படும். வினை முற்று, திணை, பால், எண், இடம், காலம் இவைகளை ஏற்று

வருவதால் வெவ்வேறு வகையாக மாறும். எல்லா வினைகளும் ஒரே பகுதியின் அடியாகப் பிறத்தலால் முதல் நிலை மாறுபடாது. ஆனால், இடைநிலை காலத்திற்கு ஏற்பவும், விகுதி அல்லது இறுதி நிலை திணை, பால், எண், இடங்களுக்கு ஏற்பவும் மாறி மாறி வரும்.

(உ-ம்.) நட என்னும் வினையின் அடியாகப் பிறந்த வினைச் சொற்கள் காலங் காட்டும்பொழுது, நடந்தான், நடக்கிறான், நடப்பான் என்று மூன்று வகையாக மாறுபடுவதைக் காணலாம். இவற்றுள், 'த்' என்னும் இடைநிலையைக் கொண்டு நடந்தான் என்ற இறந்த காலமும், 'கிறு' என்ற இடைநிலையைக் கொண்டு நடக்கிறான் என்ற நிகழ் காலமும், 'ப்' என்ற இடைநிலையைக் கொண்டு நடப்பான் என்ற எதிர்காலமும் மாறப் பெறுகின்றன. இவ்வாறு, இடைநிலைகள்காலத்தை மாற்றுகின்றன. மற்றும், கேட்டான், பற்றினான் முதலிய சொற்களில், ட், ற் என்ற இடைநிலைகள் வந்து இறந்த காலத்தைக் காட்டின. செய்கின்றான், செய்யாநின்றான் என்ற சொற்களில், கின்று, ஆநின்று என்ற இடைநிலைகள் வந்து நிகழ் காலத்தைக் காட்டின. மற்றும், வாழ்வான் என்ற சொல்லில், 'வ்' என்ற இடைநிலை எதிர் காலத்தைக் காட்டிற்று. எனவே, த், ட். ற், என்ற மூன்றும் இறந்த கால இடைநிலைகளாம்.

ஆநின்று, கின்று, கிறு என்ற மூன்றும் நிகழ் கால இடைநிலைகளாம். ப், வ் என்ற இரண்டும் எதிர் கால இடைநிலைகளாம்.

வினைச் சொல்லின் கடைசியிலுள்ள விகுதிகள், திணை, பால், எண், இடம் முதலியவைகளைக் காட்டும் என்று பார்த்தோம்.

உயர்திணை		இறப்பு	நிகழ்	எதிர்
ஆண்பால்	-	நடந்தான்	நடக்கிறான்	நடப்பான்
பெண்பால்	-	நடந்தாள்	நடக்கிறாள்	நடப்பாள்
பலர்பால்	-	நடந்தார்	நடக்கிறார்	நடப்பார்

அஃறிணை

ஒன்றன்பால்	-	நடந்தது	நடக்கிறது	நடக்கும்
பலவின்பால்	-	நடந்தன	நடக்கின்றன	நடக்கும்

எண்

ஒருமை	-	நடந்தான்	நடக்கிறான்	நடப்பான்
பன்மை	-	நடந்தார்	நடக்கிறார்	நடப்பார்

இடம்

தன்மை	-	நடந்தேன்	நடக்கிறேன்	நடப்பேன்
முன்னிலை	-	நடந்தாய்	நடக்கிறாய்	நடப்பாய்
படர்க்கை	-	நடந்தான்	நடக்கிறான்	நடப்பான்

எச்ச வினை

எச்சம், பெயரெச்சமெனவும் வினையெச்சமெனவும் இரண்டு வகைப்படுமென அறிந்தோம். அவைகளும், காலம் ஒட்டி இறந்தகாலப் பெயரெச்சம், நிகழ்காலப் பெயரெச்சம், எதிர்காலப் பெயரெச்சம் என்றும், இறந்தகால வினையெச்சம், நிகழ்கால வினையெச்சம், எதிர்கால வினையெச்சம் என்றும் மும் மூன்று வகையாகப் பிரிக்கப்படும். பெயருக்குக் குறைந்து நிற்பது பெயரெச்சமென்றும், வினைக்குக் குறைந்து நிற்பது வினையெச்சம் என்றும் நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள்.

(உ-ம்.) வந்த மனிதன்—இறந்த காலப் பெயரெச்சம்
வருகிற மனிதன்—நிகழ் காலப் பெயரெச்சம்
வரும் மனிதன்—எதிர் காலப் பெயரெச்சம்

படித்துப்போனான்—இறந்தகால வினையெச்சம்
படிக்க இருக்கிறான்—நிகழ்கால வினையெச்சம்
படித்தால் தேறுவான்—எதிர்கால வினையெச்சம்

இப் பெயரெச்ச வினை யெச்சங்கள், வினை முற்றுக்களைப் போலவே, தெரிநிலை, குறிப்பு என இரு வகையாகப் பகுக்கப்படும். எனவே, தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம், தெரிநிலை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம் என்பன அவைகளின் பாகுபாடுகளாம்.

(உ-ம்.) தெரிநிலைப் பெயரெச்சம்

இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
வந்த மனிதன்	வருகிற மனிதன்	வரும் மனிதன்

குறிப்புப் பெயரெச்சம்

நல்ல மனிதன் பெரிய பிள்ளை

தெரிநிலை வினையெச்சம்

படித்து வந்தான் படிக்க வருகின்றான் படித்தால் வருவான்

குறிப்பு வினையெச்சம்

நன்கு தேறினான் நன்கு தேறுகிறான் நன்கு தேறுவான்

தன் வினை, பிற வினை

இவ் வினைச் சொற்கள், தன் வினை, பிற வினை என இரண்டு வகைப்படும்.

தன் வினை என்பது எழுவாயாகவுள்ள தானே ஒரு காரியத்தைச் செய்வது. பிறவினை என்பது எழுவாயாக

உள்ள தான், பிறரைக் கொண்டு ஒரு காரியத்தைச் செய்விப்பது.

(உ-ம்.) தன்வினை

இராமன் உளம் உருகினான்.

அரசன் தருமம் நடத்தினான்.

பிறவினை

இராமன் பொன்னை உருக்கினான்.

அரசன் தருமம் நடப்பித்தான்.

இவ்வாறு பல தன் வினை பிற வினைகளைக் கண்டு வித்தியாசத்தைத் தெரிந்து கொள்க.

மற்றும், வினைச் சொற்கள், செய் வினை யென்றும், செயப்பாட்டு வினை யென்றும் இரண்டு வகைப்படும்.

(உ-ம்.) இராமன் மரம் வெட்டினான்.

மரம் இராமனால் வெட்டப்பட்டது.

இவ் விரண்டு வாக்கியங்களுக்கும் பொருள் ஒன்றே என்றாலும் இவை சொல்லளவில் மாறுபடுகின்றன. முதல் வாக்கியத்தில் இராமன் என்ற எழுவாய், வெட்டுதலாகிய வினையைப் பயனிலையாகக் கொண்டது. இரண்டாவது வாக்கியத்தில் மரம் என்ற எழுவாய், தான் வெட்டப்பட்டதாகிய வினையைப் பயனிலையாகக் கொண்டது. முதல் வாக்கியத்தில் மரம் செயப்படுபொருளாக வந்தது. ஆனால், செய் வினை செயப்பாட்டு வினையாக வந்த இரண்டாவது வாக்கியத்தில் செயப்படுபொருளாகிய மரம் எழுவாயாக வந்தது. செயப்பாட்டு வினையில், வினைக்குக் காரணமாக இருந்த

கர்த்தா தனியாகச் சொன்னாலன்றி விளங்காது. ஆனால், செய்வினையில் கர்த்தாவே எழுவாயாக வரும்.

மற்றும், செயப்படுபொருள் குன்றா வினைகளே செயப்பாட்டு வினைகளாக வரத் தகுதியுடையன.

பயிற்சி 9

1. முற்றுவினை எச்சவினை எனப்படுவன யாவை?
2. எச்சம் எத்தனை வகைப்படும்? என்னென்ன?
3. வினைமுற்றின் முதல்நிலை மாறுபடாது இருக்கக் காரணம் என்ன?
4. வினைமுற்றில் காலம் காட்டும் பகுதி யாது? அதற்கு என்ன பெயர்?
5. மூன்று காலத்திற்கும் உள்ள இடைநிலைகள் யாவை?
6. வினைச்சொல் விகுதிகள் காட்டுவன யாவை?
7. பெயரெச்சமும் வினையெச்சமும் எவ்வாறு மூவகைப் படுகின்றன?
8. தெரிநிலை குறிப்பு என்ற வேறுபாடு எச்சங்களுக்கும் உண்டா? உண்டானால் உதாரணம் காட்டி விளக்குக.
9. தன்வினை என்பது யாது?
10. பிறவினை என்பது யாது?
11. செய்வினை செயப்பாட்டுவினை என்ற இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

இடைச்சொல்

பெயர்ச்சொற்களோடும், வினைச்சொற்களோடும் முன் பின்னாக ஓரிடத்து வந்து, அச்சொற்களின் பொருள்களை விளக்க வருவது இடைச்சொல் என்பதை நீங்கள் கீழ் வகுப்பில் படித்தீர்கள்.

வேற்றுமை உருபுகளும்,இடைநிலைகளும், சுட்டும் வினவும் இடைச் சொற்களாம். மற்றும், சாரியைகளும், ஏ, அன், அல் முதலியனவும் இடைச் சொற்களே. பின்னும், போல முதலிய உவமைச் சொற்களும், இகழ்ச்சியைக் குறிக்கும் ஆ, ஆ, அந்தோ முதலிய சொற்களும், மற்று, தான், ஓ என்ற சொற்களும் இடைச் சொற்களாம்.

(உ-ம்.)

வேற்றுமை உருபுகள்—இராமனை, இராமனால், இராமனுக்கு.

இடைநிலை—நடந்தான். இதில் த் இடைச் சொல்.

சுட்டு வினா—அ, இ, உ; எ, யா, ஆ, ஓ, ஏ.

சாரியை—நடந்தனன். இதில் அன் சாரியை.

ஏ, அன், அல்—இராமனே, நடந்தனன். தொடையல்.

போல—காளைபோலத் தோன்றினான்.

ஆ, ஆ, அந்தோ—அந்தோ கெட்டான். ஆ ஆ இழந்தான்.

மற்று, தான், ஓ—இப் புத்தகம் அவனுடையது; மற்றொன்று என்னுடையது. நீதான் பார். அண்ணாவோ கேள்.

உரிச் சொல்

உரிச்சொற்கள் ஒன்றன் தன்மையைக் காட்ட வருவன என்று அறிவீர்கள். அவ்வுரிச்சொல் பெயர் உரிச்சொல் என்றும், வினை உரிச்சொல் என்றும் இருவகைப்படும். இவற்றுள், பெயர்ச் சொல்லின் தன்மையை விளக்க அப் பெயர்ச் சொல்லோடு சேர்ந்து வருவனவெல்லாம் பெயர் உரிச் சொற்களாகும்.

(உ-ம்.) கடிநகர்; நன்செய்.

வினையைச் சார்ந்து அவ் வினையின் தன்மையை உணர்த்துவனவெல்லாம் வினை உரிச்சொற்கள்.

(உ-ம்.) நனி நடந்தான்; சால உழைத்தான்.

பயிற்சி 10

1. எவை எவை இடைச்சொற்களாக வரும்?
2. இடைச்சொற்கள் சொல்லில் எவ்வெவ்விடத்து வரும்?
3. உரிச்சொல் எத்தனை வகைப்படும்? என்னென்ன?
4. உரிச்சொல் அவ்வாறு பிரிக்கப்படக் காரணம் என்ன?
5. இடைச்சொல் உரிச்சொற்களுக்கு உன் பாடத்திலிருந்து இரண்டிரண்டு உதாரணம் தருக.

சொற்றொடர் அல்லது வாக்கியம்

ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் சேர்ந்து ஒரு பொருளைத் தந்து நிற்பது வாக்கியம் என்பதை அறிவீர்கள். அச் சொற்றொடர் பொருள் முற்றுப் பெற்றதாயின் முற்றுச் சொற்றொடர் என்றும், முற்றுப் பெறாததாயின் எச்சச் சொற்றொடர் என்றும் பெயர்பெறும்.

சொற்றொடர்க்கு மிக முக்கியமானவை எழுவாயும் பயனிலையுமாகும். அவற்றுள் பெயர்ச் சொற்களே சொற்றொடர்களுக்கு எழுவாயாக வரும். ஆனால் பயனிலைகள் வினைச் சொற்களாகவும், வினாச் சொற்களாகவும், பெயர்ச் சொற்களாகவும் வரும். இந்த எழுவாய் பயனிலையே அல்லாது வாக்கியத்தில் செயப்படுபொருளும் சில இடங்களில்

வரும். செயப்படுபொருள் பெயர்ச் சொற்களாகவே இருக்கும்.

(உ-ம்) இராமன் மரத்தை வெட்டினான்.

இதில் இராமன் என்ற பெயர்ச்சொல் எழுவாயாகவும், வெட்டினான் என்ற வினைச்சொல் பயனிலையாகவும், மரம் என்ற பெயர்ச்சொல் செயப்படுபொருளாகவும் வந்தன.

இராமன் யார்? இதில் வினாச்சொல் பயனிலையாக வந்தது.

இராமன் அவன். இதில் பெயர்ச் சொல் பயனிலையாக வந்தது.

நல்ல பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு வந்து சிறந்த பாடங்களை ஊக்கமாகப் படிப்பார்கள்.

இவ் வாக்கியத்திலுள்ள எழுவாய் பயனிலைகள் யாவை? பிள்ளைகள் என்ற எழுவாயும், படிப்பார்கள் என்ற பயனிலையும், பாடம் என்ற செயப்படுபொருளும் வந்தன. ஆனால், இந்த மூன்று சொற்களோடு அந்த வாக்கியம் முற்றுப் பெறவில்லை பையன்கள் என்ற எழுவாயோடு நல்ல என்ற சொல்லும், பாடம் என்ற செயப்படுபொருளோடு சிறந்த என்ற சொல்லும், படிப்பார்கள் என்ற பயனிலையோடு ஊக்கமாக என்ற சொல்லும் வந்திருக்கின்றன.

இவ்வாறு எழுவாய் பயனிலைகளை அடுத்து வருவனவெல்லாம் அடைமொழிகள் என்று பெயர்பெறும். சில வாக்கியங்களில் அடைமொழிகள் ஒன்றிரண்டுக்கு வராம

லும் இருக்கும். அடைமொழி இல்லாமலும் சாதாரண வாக்கியங்கள் ஆக்கப்படுகின்றன.

அடைமொழிகள் எழுவாய் பயனிலை செயப்படுபொருளாகியவற்றின் தன்மை முதலியவற்றை விளக்க வருவனவாகும்.

இவ் வடைமொழிகளைத் தவிர வேறு சில இடைப் பிறவரல் மொழிகளும் உள்ளன. அவற்றைப்பற்றிப் பிறகு படிப்பீர்கள்.

எழுவாய் பயனிலையில், ஒரு எழுவாய்க்கு ஒரு பயனிலை வருதலும், ஒரு பயனிலைக்குப் பல எழுவாய்கள் வருதலும் உண்டு.

(உ-ம்.) இராமன் பாடம் படித்தான்.
இதில் ஒரு எழுவாயும் ஒரு பயனிலையும் வந்தன.

இராமனும், கந்தனும், கோவிந்தனும் பள்ளிக்கூடம் வந்தார்கள்.

இதில் ஒரு பயனிலை பல எழுவாய்களைக் கொண்டது.

சொற்களின் அமைப்பு

மேலே கண்ட வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எங்கெங்கு வந்தன? எழுவாய் வாக்கியத்தின் முதலிலும், பயனிலை வாக்கியத்தின் கடைசியிலும், செயப்படுபொருள் இருந்தால் அவை இரண்டின் நடுவிலும் வருகின்றன. ஆகவே, தமிழிலே எழுவாய் முதலிலும், பயனிலை கடைசியிலும், செயப்படுபொருள் நடுவிலுமிருக்க எழுதுவதே சரியான முறையாகும்.

பயிற்சி 11

1. சொற்றொடர்கள் எத்தனை வகைப்படும்? என்னென்ன?
2. ஒரு சொற்றொடருக்கு மிக முக்கியமாக வேண்டுவன யாவை?
3. தமிழில் எந்தெந்த சொற்கள் எழுவாயாகவும், பயனிலையாகவும் வரும்? ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.
4. செயப்படு பொருளாக வரும் சொற்கள் எவை?
5. அடைமொழிகள் என்பன யாவை?
6. அடைமொழிகள் எதற்காக வருகின்றன?
7. எழுவாய் பயனிலைகள் எவ்வெவ்வாறு வரும்?
8. சொற்றொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்கள் எங்கெங்கே அமைக்கப்படும்?

புணர்ச்சி

பதங்கள் ஒன்றோடொன்று சேரும்போது சில எழுத்துக்கள் கெட்டும், மாறியும் வருகின்றன என்றும், சில மாறாது அப்படியே இருக்கின்றன என்றும் நீங்கள் அறிவீர்கள்.

குற்றியலுகரப் புணர்ச்சி:-குற்றியலுகரத்திற்கு முன் வருகின்ற வருமொழி முதலில் உயிர் எழுத்து இருக்குமானால், அக்குற்றியலுகரம், தான் ஏறியிருந்த மெய்யெழுத்தைவிட்டு நீங்கும். அப்பொழுது அந்த நிலைமொழி கடைசியிலிருக்கும் மெய்யெழுத்தின் மேல் வருமொழி முதலிலுள்ள உயிர் தானாக வந்து ஏறும்.

(உ-ம்.) பந்து + எடுத்தான் = பந்தெடுத்தான்.

இதில் பந்து என்னும் குற்றியலுகரத்திலேயுள்ள கடைசி உகரம் கெட்டு பந்த் என்றாயிற்று. பிறகு அந்த

'த்' என்ற மெய்யெழுத்தின் மேல் 'எ' என்ற உயிரெழுத்து ஏறிப் பந்தெடுத்தான் என்றாயிற்று. (த் + எ = தெ)

பாகு + அரிது = பாகரிது
வண்டு + அடித்தான் = வண்டடித்தான்

இவற்றிலும் மேலே கூறியவாறு இலக்கணம் அமைதலை அறிக.

இக் குற்றியலுகரத்திற்கு முன் வருமொழி முதலில் யகரம் வந்தால் அப்போது உகரம், இகரமாகத் திரியும்.

(உ-ம்.) வரகு + யாது = வரகியாது.

குற்றியலுகரங்களேயன்றி சில இடங்களில் முற்றியலுகரங்களும் இவ்வாறு புணரும்பொழுது இந்த இலக்கணங்களைப் பெறும்.

வரவு + அறிந்தான் = வரவறிந்தான்.

இதில் உ என்ற முற்றியலுகரம் குற்றியலுகரம்போல மெய்யெழுத்தைவிட்டு நீங்க அத்துடன் வருமொழி முதலிலுள்ள உயிர்வந்து சேர்ந்தது.

வரவு + யாது = வரவியாது.

இதில் முற்றியலுகரத்திற்கு முன் யகரம் வந்ததால் உகரம் இகரமாகத் திரிந்தது.

இக் குற்றியலுகரங்களுக்கு முன் வருமொழி முதலில் வல்லின மெய்யெழுத்து வந்தால் அம் மெய்யெழுத்து பெரும்பாலும் மிகுந்திருக்கும்.

(உ-ம்.) பட்டு + சேலை = பட்டுச் சேலை;
சுக்கு + தந்தான் = சுக்குத் தந்தான்
நச்சு + பொய்கை = நச்சுப் பொய்கை

உயிரின்முன் மெய்:-உயிரெழுத்துக்களுக்கு முன்பாக வரும் வல்லின எழுத்துக்கள் பெரும்பாலும் மிகும் என்பதை அறிந்திருக்கின்றீர்கள். ஆனால் சில மிகாத இடங்களும் இருக்கின்றன. அவை யாவை?

சொல்லின் கடைசியிலே வரும் ஆ, எ, ஓ என்ற வினாக்களின் முன்னும் யா என்ற வினாவின் முன்னும், விளிப்பெயர்களின் முன்னும் வல்லின எழுத்துக்கள் வந்தால் அப்பொழுது அவைகள் மிகாமல் இயற்கையாக இருக்கும்.

(உ-ம்.) அவனா + கொடுத்தான் = அவனா கொடுத்தான்
நீயே + கொண்டாய் = நீயே கொண்டாய்
அவனோ + செய்தான் = அவனோ செய்தான்
யா + பெற்றாய் = யாபெற்றாய்

இவற்றுள் வினா எழுத்துக்களுக்குமுன் வல்லினம் இயல்பாயின.

தம்பீ + தா = தம்பீ தா
கந்தா + கொடு = கந்தா கொடு

இவற்றுள் விளிப் பெயர் முன் வல்லினம் இயல்பாயின.

உயிரின்முன் மெய்யும் உயிரும்:-தனித்த உயிரெழுத்துக்களுக்குமுன் உயிரெழுத்து வந்தால் வகர உடம்படுமெய் தோன்றும்.

(உ-ம்.) எ + ஊர் = எவ்வூர்?
பூ + அழகு = பூவழகு
இ + உடல் = இவ்வுடல்
அ + உயிர் = அவ்வுயிர்
உ + இடம் = உவ்விடம்
அணி + அணிந்தான் = அணியணிந்தான்.

உயிரெழுத்துக்களுக்கு மாத்திரமன்றி, யகரம் வந்தாலும் தனிக் குற்றெழுத்திற்குமுன் இவ்வாறு வகர உடம்படுமெய் தோன்றும்.

அ + யாறு = அவ் யாறு
அ + யானை = அவ் யானை

மெய்யின்முன் உயிர்:-தனித்தகுறிலைச் சார்ந்து மொழிகளின் கடைசியில் மெய்யெழுத்து இருந்து வருமொழி முதலில் உயிரெழுத்து வந்து சேருமானால் அம் மெய்யெழுத்து இரட்டிக்கும்.

(உ-ம்.) மண் + இடம் = மண்ணிடம்
கல் + ஒளி = கல்லொளி

இவைகளில் தனிக்குறிலை அடுத்துவந்த 'ல்' 'ண்' உயிரெழுத்தோடு சேர்ந்து இரட்டித்தன.

மெய்யின்முன் மெய்:--(வகரவீறு) வகரத்தைக் கடைசியிலே உடைய சுட்டுப் பெயர்களின்முன் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் அவ்வகரம் ஆய்தமாகத் திரியும். மெல்லினம் வந்தால் வகரம் மெல்லினமாகவே மாறும். இடையினம் வந்தால் இயல்பாக இருக்கும்.

(உ-ம்.) அவ் + கடிது = அஃகடிது.

இதில் வல்லினம் வர வகரம் ஆய்தமாகத் திரிந்தது.

அவ் + ஞானம் = அஞ்ஞானம்.

இதில் மெல்லினம் வர வகரம் மெல்லினமாகத் திரிந்தது.

அவ் + யானை = அவ்யானை

இதில் இடையினம் வர இயல்பாயிற்று.

மகரவீறு:— நிலைமொழிக் கடைசியிலே மகரம் இருந்து, வருமொழி முதலில் வல்லெழுத்து வந்தால் சில இடங்களில் மகரம் கெட்டு வல்லெழுத்து மிகும். சில இடங்களில் வல்லெழுத்துக்கு இனமான மெல்லெழுத்துத் தோன்றும். மெல்லினமும் இடையினமும் வந்தால் மகரம் கெட்டு விடும்.

(உ-ம்.) மரம் + பலகை = மரப்பலகை

மரம் + தண்டு = மரத்தண்டு

இவற்றுள் மகரம் கெட்டு வல்லினம் மிக்கது.

மரம் + கொடிது = மரங் கொடிது
பணம் + தா = பணந்தா.

இவற்றுள் மகரம் கெட்டு வல்லினத்துக்கு இனமான மெல்லினம் தோன்றியது.

மரம் + வேர் = மரவேர்
மரம் + நாய் = மரநாய்

இவற்றில் இடையினமும் மெல்லினமும் வர மகரம் கெட்டது.

இன்னும் பிற மெய்யெழுத்துக்களின் புணர்ச்சியையும் அவற்றின் விரிவையும் மேல் வகுப்பில் நன்றாகப் படிப்பீர்கள்

பயிற்சி 12

1. குற்றியலுகரத்தின் முன் உயிர் வந்தால் எவ்வாறு சேரும்?
2. குற்றியலுகரத்திற்கு முன் யகரம் வந்தால் எவ்வாறு சேரும்?
3. குற்றியலுகரத்தைப் போலவே புணர்ச்சி இலக்கணம் கொண்ட வேறு சில மொழிகள் யாவை?
4. குற்றியலுகரத்திற்கு முன் வல்லினம் வந்தால் எவ்வாறு புணரும்?
5, உயிரெழுத்துக்கு முன் வல்லினம் வந்தால் எவ்வெவ்விடத்தில் இயற்கையாக வரும்? உதாரணத்தோடு விளக்கு.
7. எவ்விடத்தில் வகர உடம்படுமெய் தோன்றும்?
8. எவ்விடத்தில் நிலைமொழியின் கடைசியிலுள்ள மெய்யெழுத்து இரட்டிக்கும்?
9. வகர ஈற்றுச் சுட்டுப் பெயர் எவ்வாறு புணரும்?
10. மேலேகண்ட ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பாட உதாரணம் தருக.
11. மகர ஈற்றுச் சொற்கள் எவ்வெவ்வாறு புணரும் என்பதை உதாரணத்தோடு விளக்குக.
12 இராமன் மரமறுக்கக் காட்டிற்குச் சென்று அங்கே அவன் வரவறிந்த மற்றவரோடுங்கூடி மரங்களை அறுத்து அவ்வாறு அறுத்தவற்றை வீட்டிற்குக் கொணர்ந்தான்.

இதிலுள்ள புணர்ச்சி இலக்கணங்களை விளக்கி எழுதுக.

சொல்லிலக்கணம்

சொற்களுக்குத் திணை, பால், எண், இடம், உண்டென்று படித்திருக்கிறீர்கள் அல்லவா? தவிர பெயர்ச் சொற்களுக்கு வேற்றுமையும் வினைச்சொற்களுக்குக் காலமும் உண்டல்லவா? சொற்கள் ஒரு வாக்கியத்தில் எழுவாய், பயனிலை,

செயப்படுபொருளாக வந்து முடிகின்றன வென்பதையும், அவைகள் தனியாகவேனும் பல அடைமொழிகளைப் பெற்றேனும் வரும் என்பதையும் அறிவீர்கள். ஆகவே, அச் சொற்களுக்கெல்லாம் தனித் தனியாக இலக்கணங்கள் உண்டென்று அறியவேண்டும். அவ்வாறு சொற்களுக்கு இலக்கணம் கூறுதலே சொல்லிலக்கணம் என்று கூறப்படும். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைச் சேர்ந்த அடைமொழிச் சொற்களும், அவைகள் அடுத்துள்ள சொற்களைப்போலவே, திணை, பால், எண், இடங்களைப் பெறுகின்றன.

(உ-ம்.) கந்தன் பாடத்தைப் படித்தான்.

இதில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் மாத்திரம் வந்தன.

இவற்றுள், கந்தன்- உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, முதல்வேற்றுமை, படித்தான் என்ற பயனிலைக்கு எழுவாயாக வந்தது.

பாடத்தை-அஃறிணை, ஒன்றன்பால், ஒருமை, படர்க்கை, இரண்டாம் வேற்றுமை, படித்தான் என்ற பயனிலைக்குச் செயப்படுபொருளாக வந்தது.

படித்தான்-உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, இறந்தகாலம், கந்தன் என்ற எழுவாய்க்குப் பயனிலையாக வந்தது.

இனி, அடைமொழிகள் சேர்ந்த வாக்கியங்கள் எழுதி அவற்றிலுள்ள சொற்களுக்கு இலக்கணம் கண்டுபிடிக்க.

கந்தன் தன் வீட்டை விட்டு வேகமாகப் பள்ளிக்கூடத்திற்கு வந்து ஆசிரியரையும் மாணவரையும் கண்டான்.

கந்தன்—உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, முதல் வேற்றுமை, கண்டான் என்ற பயனிலைக்கு எழுவாய் ஆயிற்று.

தன்—உயர்திணை, ஆண்பால் (பொதுப்பெயர்), ஒருமை, படர்க்கை, ஆறும் வேற்றுமை, வீட்டை என்ற பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிந்தது.

வீட்டை—அஃறிணை, ஒன்றன்பால், ஒருமை, படர்க்கை இரண்டாம் வேற்றுமை, விட்டு என்ற வினையெச்சத்திற்குச் செயப்படுபொருளாக வந்தது.

விட்டு, இறந்தகால வினையெச்சம், கண்டான் என்ற வினையைக்கொண்டு முடிந்தது.

வேகமாக—வினையெச்சம், வந்து என்ற வினையெச்சத்தைக் கொண்டு முடிந்தது.

பள்ளிக்கூடத்திற்கு-அஃறிணை, ஒன்றன்பால், ஒருமை, படர்க்கை, நான்காம் வேற்றுமை, வந்து என்ற வினையெச்சத்தைத் தழுவிற்று.

வந்து—இறந்தகால வினையெச்சம், கண்டான் என்ற வினையைக்கொண்டு முடிந்தது.

ஆசிரியரை—உயர்திணை, ஆண்பால், உயர்வுப் பன்மை, படர்க்கை, இரண்டாம் வேற்றுமை, கண்டான் என்ற பயனிலைக்குச் செயப்படுபொருளாக வந்தது.

உம்—எண் இடைச்சொல், ஆசிரியர் என்னும் பெயரோடு சேர்ந்து எண்ணுப் பொருளைக் குறித்தது.

மாணவரை—உயர்திணை, பலர்பால், பன்மை, படர்க்கை, இரண்டாம் வேற்றுமை, கண்டான் என்ற பயனிலைக்குச் செயப்படுபொருளாக வந்தது.

உம்—எண் இடைச்சொல், மாணவர் என்னும் பெயரோடு சேர்ந்து எண்ணுப் பொருளைக் குறித்தது.

கண்டான்—உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, இறந்தகாலம், கந்தன் என்ற எழுவாய்க்குப் பயனிலையாக வந்து முடிந்தது.

எட்டாம் வகுப்பு (III FORM)

எழுத்து

மாத்திரை

சொற்றொடர்களை வாசிக்கும்பொழுது நன்றாகப் பொருள் விளங்கச் சில இடங்களில் நிறுத்தவேண்டும் என்றும், அவ்வாறு நிறுத்துவதற்குச் சில குறியீடுகள் வேண்டுமென்றும், அக் குறியீடுகளில் நிறுக்தும் நேரத்தை மாத்திரையில் கணக்கிடுவார்களென்றும் கீழ் வகுப்பில் படித்திருக்கிறீர்கள்.

மாத்திரை என்பது யாது? அதன் அளவு எவ்வளவு? இயல்பாக உண்டாகின்ற கண்ணிமைக்கும் நேரம் அல்லது கைநொடிக்கும் நேரம் மாத்திரையின் அளவாகும். இவ்வளவைக்கொண்டே நிறுத்துக் குறிகளால் உண்டாகும் நேரமும் கணக்கிடப்படும்.

நிறுத்துக் குறிகள் தவிர ஒவ்வொரு எழுத்திற்கும் தனித் தனி மாத்திரை அளவும் உண்டு. குற்றெழுத்துக்கு ஒரு மாத்திரையும், நெட்டெழுத்துக்கு இரண்டு மாத்திரையும், மெய்யெழுத்திற்கு அரை மாத்திரையும், குற்றியலுகரம் ஆய்தம் இவைகளுக்கு அரை மாத்திரையும் அளவுகளாம்.

ஆனால், பாடும்போதும், அழும்போதும், பண்டங்களை விற்கும்போதும் மாத்திரையளவு மேலே குறிப்பிட்ட எல்லையைத் தாண்டியும் நிற்கும்.

உயிர்மெய் யெழுத்திற்கு உயிர் எழுத்துக்களின் மாத்திரையே அளவாம். மெய் எழுத்தின் மாத்திரை அங்கே தோன்றாது.

பயிற்சி 1

1. மாத்திரை என்பது யாது?
2. மாத்திரைக்குரிய இயல்பான நேரம் யாது?
3. தமிழ் எழுத்துக்களுக்கு உள்ள மாத்திரையைத் தனித்தனி பிரித்து எழுது?
4. எப்பொழுது எழுத்துக்கள் மாத்திரைஅளவில் மிக்குஒலிக்கும்?
5. உயிர்மெய் எழுத்திற்கு உள்ள மாத்திரை யாது?
6. இம்மாத்திரைச் கணக்கினால் நாம் அடையும் நன்மை என்ன?

சார்பெழுத்து விரி

சார்பெழுத்துக்கள் உயிரையும் மெய்யையும் முதலாகக் கொண்டு ஒன்றையொன்று சார்ந்து பிறப்பனவாகும். அவை குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக்குறுக்கம் உயிரளபெடை, ஒற்றளபெடை என்பனவாகும். இவற்றோடு ஆய்தமும் உயிர்மெய்யும் சேர்ந்து சார்பெழுத்துக்கள் பத்து வகைப் படும்.

இவற்றுள், குற்றியலுகரம் ஒரு சொல்லின் கடைசியில் வரும் வல்லின உகரம் தனக்கு உரிய ஓசையில் குறைந்து நிற்பதாகும். அது வன்தொடர்க் குற்றியலுகரம், மென் தொடர்க் குற்றியலுகரம், இடைத்தொடர்க் குற்றியலுகரம், நெடிற்றொடர்க் குற்றியலுகரம், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம், ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் என ஆறுவகைப்

படும். இந்தப் பிரிவுகளைக் குற்றியலுகரத்திற்குமுன் உள்ள எழுத்துக்களைக் கொண்டு கண்டுபிடிக்கவேண்டும். நெடிற்றொடர்க் குற்றியலுகரம் இரண்டெழுத்துச் சொல்லாயிருக்கும். முதல் எழுத்து நெட்டெழுத்தாகவும், உகரம் குற்றியலுகரமாகவும் வரும். ஈரெழுத்து மொழியில் முதலெழுத்து குறிலாயிருந்தால் அது குற்றியலுகரமாகாது.

குற்றியலுகரமல்லாத உகரமெல்லாம் முற்றியலுகரமாம். இவைகளை எல்லாம் கீழ்வகுப்பில் படித்தீர்கள்.

உகரம் தனக்கு உரிய ஓசையில் குறைந்து வருவது போலவே இன்னும் சில எழுத்துக்களும் தம் ஓசையில் குறைந்து நிற்கும்.

குறிப்பு:—ஓசை குறைதல் என்பது தனக்குரிய மாத்திரை அளவிலிருந்து குறைதல், சாதாரணக் குறிலாகிய உகரத்திற்கு ஒரு மாத்திரையாயின் குற்றியலுகரத்திற்கு அரை மாத்திரைதான்.

இவ்வாறு ஓசை குறைந்து நிற்பனவெல்லாம் குறுக்கம் எனப்படும். ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என்பனவெல்லாம் அவ்வாறு ஓசை குறைந்தனவேயாகும். ஐகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரையில் குறைந்து நிற்பது ஐகாரக் குறுக்கமாம். அஃதேபோல் 'ஔ' தனக்குரிய இரண்டு மாத்திரையில் குறைதல் ஔகாரக் குறுக்கமென்றும், 'ம்' தனக்குரிய அரை மாத்திரையிற் குறைதல் மகரக் குறுக்கமென்றும், ஆய்தம் தனக்குரிய அரை மாத்திரையில் குறைதல் ஆய்தக் குறுக்கமென்றும் கொள்ளப்படும்.

(உ-ம்.) ஐகாரக் குறுக்கம்—பையன்
ஔகாரக் குறுக்கம்—ஔவை

மகரக் குறுக்கம்—போன்ம்
ஆய்தக் குறுக்கம்—அஃறிணை

இவற்றுள் ஐ, ஔ, ம், ஃ என்ற எழுத்துக்கள் தம் ஓசை அளவில் குறைந்து வருவதை அவைகளை உச்சரித்து அறிந்துகொள்ளுங்கள்.

இனி, இவ்வாறு எழுத்துக்கள் தம் ஓசை அளவில் குறைவது போன்று, சில எழுத்துக்கள் தம் ஓசை அளவில் மிக்கும் ஒலிக்கும். நெட்டெழுத்துக்கு உள்ள மாத்திரை இரண்டு. அது ஒலிக்கும்போது இரண்டுக்கு மேற்பட்டும் நிற்கும். இவ்வாறு அளவு நீண்டு ஒலிப்பதற்கு அளபெடை என்று பெயர். உயிரெழுத்து மாத்திரமன்றி மெய்யெழுத்தும் அவ்வாறு தனக்கு உரிய அளவில் மிக்கு ஒலிக்கும். ஆகவே, அளபெடை உயிரளபெடை என்றும், ஒற்றளபெடை என்றும் இரண்டு வகைப்படும். உயிர் அளபெடுக்கும்போது நெட்டெழுத்துக்குப் பிறகு அதன் இனமாகிய குற்றெழுத்து அடுத்து வரும். ஒற்றளபெடையில் ஓரே ஒற்று இருமுறை வரும்.

(உ-ம்.)

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

இது உயிரளபெடை

இலங்ங்கு வெண்பிறைசூ டீசன் அடியார்க்குக்
கலங்ங்கு நெஞ்சமிலை காண்

இது ஒற்றளபெடை

குறிப்பு:—இந்த சார்பெழுத்துக்களின் விரிவையும், இவற்றைப் பற்றி இன்னும் அறிந்துகொள்ளவேண்டியவற்றையும் மேல் வகுப்பில் படிப்பீர்கள்.

இக்குறுக்கம், அளபெடை முதலியன பெரும்பாலும் செய்யுளிலேயே பயின்று வரும்.

பயிற்சி 2

1. சார்பெழுத்தென்றால் என்ன?
2. சார்பெழுத்துக்கள் மொத்தம் எத்தனை வகைப்படும்? என்னென்ன?
3. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? என்னென்ன?
4. நெடிற்றொடர்க் குற்றியலுகரத்திற்கும் மற்றவற்றிற்கும் உள்ள வேறுபாடு யாது?
5. குற்றியலுகரமல்லாத உகரத்திற்கு வேறு என்ன பெயர்?
6. ஓசைகுறைதல் என்றால் என்ன?
7. ஐகாரக்குறுக்கம் என்றால் என்ன? அது மொழியில் எங்கெங்கே வரும்?
8. ஔகாரக் குறுக்கம் என்றால் என்ன?
9. மகரக்குறுக்கமென்றால் என்ன? அது வரும் இடம் யாது?
10. ஆய்தக் குறுக்கம் என்றால் என்ன? அது மொழிக்கு எவ்விடத்தில் வரும்?
11. உயிரளபெடை என்றால் என்ன?
12. உயிரளபெடை எவ்வாறு வரும்?
13. ஒற்றளபெடை என்றால் என்ன? அது எவ்வாறு வரும்?

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்

மாணவர்களே! தமிழுக்கு முதலெழுத்தாக உள்ளன முப்பது எழுத்து என்றும், அவை உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டும் ஆகும் என்றும் படித்தீர்கள். இனி, இந்த முப்பது எழுத்துக்களும் மொழிக்கு முதலாக வருமா என்று பார்க்கவேண்டும்.

பொதுவாக எல்லா மெய்யெழுத்துக்களும் மொழிக்கு முதலாக வாரா என்பது உண்மையாயினும் அம் மெய்யெழுத்தோடு உயிர் சேர்ந்த உயிர்மெய் எழுத்தாகிலும் முதலில் வருகின்றதா என்று பார்க்கவேண்டும்.

'ன' என்ற (ன் + அ) எழுத்து மொழிக்கு முதலில் வருமா என்று பார்க்க. இந்த எழுத்து முதலில் வந்த ஏதேனும் ஓர் சொல் தமிழில் இருக்கிறதா? இல்லை. இது போல இன்னும் சில எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வாரா. ஆகவே, எவை எவை மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் என்பதைப் பார்த்தல் அவசியமல்லவா?

பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்.) அணி, ஆடு, இலை, ஈகை, உலகு, ஊக்கம், எழில், ஏணி, ஐயம், ஒன்று, ஓஞ்ஞன், ஔவை.

இவ் வுயிர் எழுத்துக்களைத் தவிர மெய்யெழுத்துக்களில் பத்து எழுத்துக்கள் உயிரோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வரும். அவை: க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங என்பன.

இவற்றுள் ஞ, ங என்ற இரண்டும் தற்போது பெரும்பாலும் வழக்கில் இல்லை. மற்ற எழுத்துக்களெல்லாம் மொழிக்கு முதலில் வருவதை இன்றும் காணலாம்.

(உ-ம்.) கலை, சணல், தண்ணீர், நன்மை, பயன், மரம், வண்டு, யானை, ஞமலி, ஙப்போல். (ஞமலி—நாய்)

மொழிக்குக் கடைசியில் வரும் எழுத்துக்கள்

மொழிக்கு முதலில் எவ்வாறு எழுத்துக்கள் வராது நின்றனவோ, அவ்வாறே சில எழுத்துக்கள் மொழிக்குக் கடைசியில் வாரா. மொத்தம் இருபத்து மூன்று எழுத்துக்கள் மொழிக்குக் கடைசியில் வருவன. உயிரெழுத்துப் பன்னிரண்டும் மொழிக்கு இறுதியில் வருவனவாகும்.

(உ-ம்.) பல, பலா, புலி, தேனீ, இனிது, பூ, சே, கலை, நொ, கோ, கௌ. (சே-எருது.) (நொ-துன்பப்பட்டு.) (கோ-அரசன்.)

மெய்யெழுத்துக்களில் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்ற பதினொரு மெய் எழுத்துக்களும் மொழிக்கு இறுதியில் வரும். இவைகளைத் தவிர மற்ற ஏழும் மொழிக்குக் கடைசியில் வாரா. இவற்றுள்ளும் ஞ், ந், வ் என்பன பெரும்பாலும் இக்கால வழக்கத்திலில்லை. மற்ற எழுத்துக்கள் எல்லாம் பயின்று வருகின்றன.

(உ-ம்.) உரிஞ், ஊண், வெரிந், பணம், மன், செய், பெயர், கல், தெவ், வாழ், எள் என்பன.

இவ்வாறு மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களையும், மொழிக்குக் கடைசியில் வரும் எழுத்துக்களையும் நாம் நன்றாக அறிந்துகொள்வது தமிழ் மொழியைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் உபயோகமாகும். தற்காலத்தில் எத்தனையோ மொழிகள் தமிழில் வந்து சேருகின்றன. அவ்வாறு சேரும்போது அவைகளைத் தமிழ்மொழிக்கேற்றபடி அமைத்துக்கொள்ளாது அப்படியே வைத்துவிடுகின்றனர். அதனால் மொழியும் இலக்கணத்தை மீறுகின்றது.

உதாரணமாக டங்கா, டமாரம் போன்ற சொற்கள் 'ட' என்னும் எழுத்தை முதலாகக்கொண்ட மொழிகளாக வரம்பில்லாது வருகின்றன. இவைகள் பிழைபட்டன. இன்னின்ன எழுத்துக்கள்தான் முதலில் வருமென்றும், கடைசியில் வருமென்றும் அறிந்திருந்தால், சொற்களைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் கூடும். ஆகவே, இவைகளையெல்லாம் நன்றாகக் கற்கவேண்டுவது உங்கள் கடமையாகும். மேலே கண்ட எழுத்துக்களன்றி வேறு யாதேனும் முதலிலேனும் கடைசியிலேனும் வந்தாலும் அவை குற்றம் பொருந்தியன என அறிக.

பயிற்சி 3

1. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எத்தனை?
2. மொழிக்கு முதலில் வரும் மெய்யெழுத்துக்கள் யாவை?
3. 'ங' என்பது எப்படி மொழிக்கு முதலில் வரும்?
4. மொழிக்குக் கடைசியில் வரும் எழுத்துக்கள் எத்தனை?
5. மொழிக்குக் கடைசியில் வரும் மெய்யெழுத்துக்கள் யாவை?
6. இக்காலத்தில் பெரும்பாலும் வழக்கில் இல்லாத, மொழிக்குக் கடைசியில் வருவதாகக் கூறப்படுகின்ற மெய்யெழுத்துக்கள் யாவை?
7. தற்காலத்து இம்முறைகளெல்லாம் மாறுபடக் காரணம் என்ன?
8. இந்த இலக்கணத்தை நாம் அறிவதால் என்ன பயன்?

போலி

போலி என்பது யாது? ஒரு எழுத்தைப்போல் மற்றொரு எழுத்து அதற்குப் பதிலாக வந்து பொருள் மாறுபடாது இருக்குமாயின் அது போலியாகும்.

அது, ஒரு சொல்லில் உள்ள எழுத்தைப் போன்று வேறொரு எழுத்து வந்து, பொருள் மாறுபடாது நிற்பதாகும். அவ்வாறு வரும் எழுத்துக்களே போலி எழுத்துக்கள் எனப்படும்.

தமிழில் சில எழுத்துக்கள் ஒன்றையொன்று ஒலி அளவில் ஒத்திருப்பதே போலி எழுத்துக்கள் உண்டாகக் காரணமாகும். ஒலியில் ஒத்திருப்பனவல்லாது, வேறு சில எழுத்துக்களும் போலியாக வருகின்றன.

இவ்வாறு வரும் போலியானது, மொழி முதற் போலி என்றும், மொழி இடைப்போலி என்றும், மொழி யிறுதிப் போலி என்றும் மூன்று வகைப்படும்.

மொழிக்கு முதலில் ஒரு எழுத்துக்குப் பதில் மற்றொரு எழுத்து போலியாக வந்து பொருள் மாறுபடாதிருப்பது மொழிமுதற் போலியாகும்.

(உ-ம்.) வைத்தியன்—வயித்தியன்
பயல்—பையல்

மொழியின் இடையில் ஒரு எழுத்துக்கு மற்றொரு எழுத்து போலியாக வந்து பொருள் மாறுபடாதிருப்பது மொழி இடைப் போலியாகும்.

(உ-ம்.) ஐந்நூறு—ஐஞ்ஞூறு
அரசு—அரைசு

மொழியின் கடைசியில் ஒரு எழுத்துக்கு மற்றொரு எழுத்து போலியாக வந்து பொருள் மாறுபடாதிருப்பது மொழியிறுதிப் போலியாகும்.

(உ-ம்.) கலம்—கலன்
சாம்பல்—சாம்பர்

வட எழுத்துக்கள்

தமிழில் சில வட எழுத்துக்கள் வருவதை நீ உன் பாடத்தில் ஆங்காங்கே படித்திருப்பாய். அநேக ஆண்டுகளாகத் தமிழும் வடமொழியும் ஒன்றிற்கொன்று தொடர்பு உள்ளனவாக இருக்கிற காரணத்தால் பல வடசொற்கள் தமிழில் வந்து வழங்கியுள்ளன ஆகவே, வட எழுத்துக்கள் தமிழ் மொழியில் இடம்பெறலாயின.

ஜலம், பக்ஷம், வாஸம் இச்சொற்கள் வட சொற்கள். இவற்றுள் ஜ, க்ஷ. ஸ முதலியன வட எழுத்துக்கள். இவையும் இன்னும் சிலவும் தமிழ் மொழியில் கலந்து வழங்கி வருகின்றன.

பயிற்சி 4

1. போலி என்பது யாது?
2. தமிழில் போலி இலக்கணம் இருக்கக் காரணம் என்ன?
3. போலி எத்தனை வகைப்படும்? என்னென்ன?
4. மொழி முதற் போலியாவது யாது? உதாரணம் தருக.
5. மொழி இடைப் போலியாவது யாது? உதாரணம் தருக.
6. மொழிக் கடைப் போலியாவது யாது? உதாரணம் தருக.
7. வட எழுத்துக்கள் தமிழில் வழங்கக் காரணம் என்ன?
8. தமிழில் பெரும்பாலும் வந்து வழங்கும் எழுத்துக்கள் யாவை?

சொல்

தமிழிலே உள்ள சொற்கள் பகுபதம், பகாப்பதம் என இருவகையாகப் பிரிக்கப்படும் என்பதைக் கீழ் வகுப்பில் படித்தீர்கள். ஒரு சொல் பகுதி, விகுதி, இடைநிலை,

சாரியை, சந்தி, விகாரம் என்ற உறுப்புக்களைக் கொண்டு அவைகளால் செய்பவன் கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்ற ஆறினையும் காட்டுவது பகுபதமென்றும், பகுதி மாத்திரம் வருவது பகாப்பதமென்றும் பிரித்துக் கணக்கிட்டுள்ளார்கள்.

இனி, இச்சொற்கள் இயல்பு வழக்கென்றும் தகுதி வழக்கென்றும் இருவகைப்படும். வழக்கத்தில் உள்ளது வழக்காகும். அவற்றுள் இயல்பாக வழங்கி வருவன இயல்பு வழக்கென்றும், தகுதி பற்றி வழங்குவன தகுதி வழக்கென்றும் பெயர் பெறுகின்றன. அவ் வியல்பு வழக்கு இலக்கணமுடையது, இலக்கணப் போலி, மரூஉ என்றும், தகுதி வழக்கு இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என்றும் மும்மூன்ருகப் பகுக்கப்படும்.

இயல்பு வழக்குகள்

இலக்கணமுடைய சொற்கள்:- பண்டைக்கால முதற் கொண்டு இன்றுவரை இலக்கண முறையோடு வழங்கிவரும் சொற்கள்.

(உ-ம்.) கல், மண், நீர், தீ முதலியன.

இலக்கணப் போலிச் சொற்கள்:-பண்டைக்கால முதற் கொண்டு சில சொற்கள் இலக்கண முறைப்படி வழங்க வேண்டி இருக்க அவ்வாறு வழக்கத்திலில்லாது முன் பின்ஞக மாறியும் வேறு வகையாகச்சிறு மாற்றம் பெற்றும் இலக்கணமுடையதுபோலப் பொருள் மாறுபடாது வருவன இலக்கணப் போலியாகும்.

(உ-ம்.) வீட்டிற்கு முன்னிருக்குமிடத்தை இல் முன் என்று வழங்குவதற்குப் பதிலாக முன்றில் என மாற்றி வழங்குகின்றோம். அவ்வாறு மாற்றி வழங்கும்போதும் இப்பொருள் மாறுபடாது அப்படியே இருக்கின்றது. எனவே, பொருள் மாறுபடாது சொற்கள் ஒன்றை ஒன்று மாறி இடம் பெற்று வருவனவெல்லாம் இலக்கணப் போலி யாகும்.

(உ-ம்.) இல்வாய் என்பதனை வாயில் என்றும் தசை என்பதனைச் சதை என்றும் நகர்ப்புறம் என்பதனைப் புறநகர் என்றும் மாற்றி வழங்குகின்றோம்.

மரூஉச் சொற்கள்:-பண்டைக்காலத்து ஆன்றோரால் ஏற் படுத்தப்பட்ட மொழிகள் தற்காலத்து அப்படியே வழங்கப் படுவதில்லை. பிற்கால மக்களது முயற்சியின்மையால் சில எழுத்துக்கள் விடப்பட்டும், திரிந்தும், புது மொழியைப் போல் மருவி மாறிவிடுகின்றன. இவ்வாறு மருவி வருவன வெல்லாம் மரூஉச் சொற்களாகும்.

(உ-ம்.) அருமருந்தன்ன என்பது, அருமந்த என வும், தஞ்சாவூர் என்பது தஞ்சை எனவும் மருவி வழங்கி வருகின்றன.

தகுதி வழக்குகள்

தகுதி வழக்குச் சொல்:-இடக்கரடக்கல். வழக்கத்தி லுள்ள சொற்களில் சில நற்செயல்களுக்கும் சில தீச்செயல் களுக்கும், சில தாழ்ந்த செயல்களுக்கும், சில உயர்ந்த செயல்களுக்கும் வழங்கி வருகின்றன. ஆனால் அறிவுடை யோர் நிறைந்த சபையினிடத்துத் தாழ்ந்த சொற்களை உப யோகிக்காது உயர்ந்த சொற்களையே உபயோகிக்க வேண்டி

யிருத்தலின் அவ்விடங்களில் தாழ்ந்த சொற்களுக்காக வேறு சில சொற்கள் இடம் பெறுகின்றன. இவ்வாறு இடம் பெற்று வரும் சொற்களுக்கு இடக்கரடக்கல் சொற்கள் என்று பெயர்.

(உ-ம்.) மலங் கழுவுதல் என்பதற்குப் பதிலாகக் கால் கழுவுதல் என்பது இடக்கரடக்கலாகும்.

மங்கலச் சொற்கள்:-நம் வாழ்க்கையில் நல்ல நிகழ்ச்சிகளும் தீய நிகழ்ச்சிகளும் மாறி மாறி இடம்பெற்று வருகின்றன. ஆனால், நாம் தீய நிகழ்ச்சிகளைப்பற்றி அறிய விரும்பமாட்டோம். அச் சொற்களும் நமக்கு வெறுப்பைத் தரும். ஆனால் தீய நிகழ்ச்சிகள் நிகழாமல் இருக்கமுடியாது. அவ்வாறு நிகழும் நிகழ்ச்சிகளை அமங்கலமான சொற்களால் வெளிப்படுத்தாது மங்கலச் சொற்களாலேயே வெளிப்படுத்துவர். இதுவே மங்கலச் சொல்லாகும்.

(உ-ம்.) தாலி அறுந்தது என்பதைத் தாலி பெருகிற்று என்றும், செத்தார் என்பதைத் துஞ்சினர் என்றும், சுடுகாடு என்பதை நன்காடு என்றும் மங்கலச் சொல்லால் சொல்லுகின்றனர்.

குழூஉக் குறி:-நாட்டில் பல்வேறு வகைச் சாதியாரும், பல்வேறு வகைத் தொழிலாளிகளும், பல்வேறு வகை வியாபாரிகளும் இருக்கின்றனர். அவரவர்கள் தம் தம் முறைக்கு ஏற்றபடி தாங்களே அறிந்துகொள்ளும் வண்ணம் சில சொற்களை உபயோகிப்பார்கள். இவ்வாறு ஒரு கூட்டத்தார் தாம் மாத்திரம் அறிந்துகொள்ள உபயோகிக்கும் சொற்கள் குழூஉக் குறிச் சொற்களாகும்.

(உ-ம்.) வேடர்கள் கள்ளைச் சொல் விளம்பி என்றும், தட்டார் பொன்னைப் பறி என்றும் சொல்லுகின்றனர்.

காரண இடுகுறிப் பெயர்

பெயர்ச் சொற்கள் காரணப் பெயர் எனவும் இடுகுறிப் பெயர் எனவும் இருவகைப்படும் என்பதை நீங்களறிவீர்கள். ஆனால், ஒரு பெயரே காரணத்தை நோக்கக் காரணப் பெயராகும்; பொதுவாக நோக்க இடுகுறிப் பெயராகும். அவ்வாறு காரணப் பெயராகவும் இடுகுறிப் பெயராகவும் ஒரு சொல் வரின் அது காரண இடுகுறிப் பெயராகும்.

(உ-ம்.) நாற்காலி, முள்ளி, அந்தகன் இவற்றுள் நாற்காலி என்னும் பொழுது நான்கு கால்களையுடைய எல்லாப் பொருளுக்கும் காரணமாகவும், சிறப்பாக ஒரு பொருளுக்கு (Chair) இடுகுறியாகவும் வருகின்றது. முள்ளி என்பது முளளை உடைய எல்லாச் செடிகளுக்கும் காரணமாகவும் தனித்து ஒரு செடிக்கு இடுகுறியாகவும் வருகின்றது. அந்தகன் என்பது குருடர்களாகிய எல்லோர்க்கும் காரணமாகவும், எமனுக்கு இடுகுறியாகவும் வருகின்றது.

பயிற்சி 5

1. சொற்களில் உள்ள பகுபத உறுப்புக்கள் யாவை?
2. பகுபதம் எதை எதைக் காட்டும்?
3. பகாப்பதம் என்பது யாது?
4. வழக்கு என்பது யாது? அது எத்தனை வகைப்படும்?
5. இயல்பு வழக்கு என்பது யாது? அது எத்தனை வகைப்படும்?
6. இலக்கணமுடைய சொற்கள் என்பன யாவை?

7. இலக்கணப் போலிச் சொற்கள் என்பன யாவை? அவை எவ்வாறு வரும்?
9. தகுதி வழக்கு என்றால் என்ன? அதன் உட்பிரிவுகள் யாவை?
10. இடக்கரடக்கல் என்பது யாது? உதாரணம் தருக.
11. மங்கலச்சொல் எவ்வாறு வரும்? அவ்வாறு வரக் காரணம் என்ன?
12. குழூஉக் குறி என்பது யாது? அது யார்க்குப் பெரிதும் பயன்படும்?
13, காரண இடுகுறிப் பெயர் என்றால் என்ன?
14. ''அந்தகன், முள்ளி என்பன காரண இடுகுறிப் பெயர்களாகும்'' என்பதை விளக்கிக் காட்டு.

ஆகு பெயர்

ஒரு பொருளின் பெயர் அதனுடன் சம்பந்தப்பட்ட மற்றொன்றுக்கு ஆகி வருவது ஆகுபெயரென்பதையும், அவற்றிலுள்ள சில பிரிவுகளையும் கீழ் வகுப்பில் படித்தீர்கள்.

இவ்வாகுபெயர் மேலும் சில பிரிவுகளை உடையது. அவை, அளவையாகு பெயர், தானியாகு பெயர், சொல்லாகு பெயர், கருவியாகு பெயர், காரியவாகு பெயர், கருத்தா ஆகு பெயர், உவமையாகு பெயர் என்பனவாகும்.

அளவையாகு பெயர்:-ஒரு அளவின் பெயர் அந்த அளவினையுடைய ஒரு பொருளுக்கு ஆகி வருவது அளவையாகு பெயராம். அவ்வளவை முகத்தல், நீட்டல், எண்ணல், எடுத்தல் என நான்கு வகைப்படும்.

(உ-ம்.) முகத்தல் அளவை:-உண்பது நாழி. இதில் நாழி என்னும் முகத்தல் அளவுப் பெயர், அவ் வளவினை யுடைய அரிசிக்கு ஆகி வந்தது.

நீட்டல் அளவை:-உடுப்பது நான்கு முழம். இதில் முழம் என்ற நீட்டல் அளவுப் பெயர், அவ் வளவினைக் கொண்ட துணிக்கு ஆகி வந்தது.

எண்ணல் அளவை:-ஐந்தையும் வென்றான். இதில் ஐந்து என்னும் எண்ணல் அளவுப் பெயர், ஐம்புலன்களுக் கும் ஆகி வந்தது,

எடுத்தல் அளவை:-கடையில் புளி எவ்வளவு வேண்டும் என்று கேட்டால் ஐந்து பலம் கொடு என்று சொல்லுகி றோம்; இங்கு பலம் என்னும் எடுத்தல் அளவுப் பெயர் புளிக்கு ஆகி வந்தது.

தானியாகு பெயர்:-ஒரு தானத்தின் பெயர், தானத்தின் பெயர்க்குப் பதிலாக அத் தானத்தின்மேலுள்ள பொரு ளுக்கு ஆகி வருவது தானியாகு பெயராம்.

(உ-ம்.) விளக்கு ஒடிந்தது. ஈண்டு இருளினை நீக்கி ஒளியினைக் காட்டும் சுடரைக் குறிக்க வரும் விளக்கு என் னும் பெயர் அதனை உடைய தண்டுக்கு ஆகி வந்தது.

சொல்லாகு பெயர்:-ஒரு சொல் அதன் பொருளுக்கு ஆகி வருவது சொல்லாகு பெயராம்.

(உ-ம்.) சொல் உணர்ந்தான். இதில் சொல் என்னும் பெயர் அதன் பொருளுக்கு ஆகி வந்தது.

கருவியாகு பெயர்:-ஒரு கருவியின் பெயர் அக்கருவியால் ஆக்கப்பட்ட காரியத்துக்கு ஆகி வருதல் கருவியாகு பெயராம்.

(உ-ம்.) செம்பு நீர் கொண்டு வா. இதில் செம்பு என்னும் உலோகமாகிய கருவி அதனால் செய்யப்பட்ட பாத்திரத்துக்கு ஆகி வந்தது. திருவாசகம் படிப்பாய். இதில் திருவாசகம் என்னும் கருவிப் பெயர், அக் கருவியால் ஆக்கப்பட்ட பொருளுக்கு ஆகி வந்தது.

காரியவாகு பெயர்:-ஒரு காரியத்தின் பெயர் அக் காரியத்திற்கு முதலாக உள்ள கருவிக்கு ஆகி வருவது காரியவாகு பெயராம்.

(உ-ம்.) சரித்திரம் படித்தான். இங்குச் சரித்திரம் என்னும் காரியத்தின் பெயர் அக் காரியத்திற்குக் கருவியாகிய நூலுக்கு ஆகி வந்தது.

கருத்தா ஆகு பெயர்:-ஒரு கருத்தாவின் பெயர் அக் கருத்தாவால் செய்யப்பட்ட பொருளுக்கு ஆகி வருவது கருத்தா ஆகுபெயராம்.

(உ-ம்.) திருவள்ளுவர் படித்தான். இங்குத் திருவள்ளுவர் என்ற கருத்தாவின் பெயர் அவர் இயற்றிய நூலுக்கு ஆகி வந்தது.

உவமையாகு பெயர்:-உவமையைக் குறிக்க வருகின்ற ஒரு பெயர் உபமேயப் பொருளுக்கே ஆகி வருதல் உவமையாகு பெயராம்.

(உ-ம்.) காளை வந்தான். இதில் காளை போன்ற மனிதன் என்பதற்குப் பதிலாகக் காளை என்னும் உபமானப் பெயரே உபமேயத்திற்கு ஆகி வந்தது.

பயிற்சி 6

1. ஆகுபெயர் என்றால் என்ன?
2. ஆகுபெயர் எத்தனை வகைப்படும்?
3. அளவை ஆகுபெயரில் உள்ள வேறுபாடுகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் உதாரணம் தருக.
4. தானி ஆகுபெயர் என்றால் என்ன? விளக்கிக் காட்டு?
5. கருவியாகுபெயர், சொல்லாகுபெயர் இவைகளை விளக்குக.
6. காரிய ஆகுபெயர் என்றால் என்ன? உதாரணம் தருக.
7. கருத்தாவாகுபெயர் எவ்வாறு வரும்? உதாரணம் தருக.
8. உவமையாகுபெயர் என்றால் என்ன?

வேற்றுமை

பெயர்ச்சொற்களுக்கு ஈறாகச் சில உருபுகள் நின்று அப்பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவனவெல்லாம் வேற்றுமை என்றும், அவை எண் வகைப்படும் என்றும், அவை வேற்றுமைத் தொகை வேற்றுமை விரி என்று இரு வகைப்படுமென்றும் படித்திருக்கிறீர்கள்.

விளி ஏற்காத பெயர்கள்:-எட்டாம் வேற்றுமையாகிய விளி வேற்றுமை எல்லாப் பெயரிடத்தும் வராது. விளி வேற்றுமை படர்க்கை இடத்து உள்ளவர்களை அழைக்க உபயோகப்படும். எனவே, தன்மைப் பெயர்களும் முன்னிலைப் பெயர்களும் விளி யேலாவாயின. ஆகவே, தன்மைப்

பெயர்களாகிய நான், நாம் என்பனவும், முன்னிலைப் பெயர்களாகிய நீ, நீர், நீங்கள் என்பனவும் விளி வேற்றுமை ஏற்கா.

மற்றும், இவள், இவர் முதலிய சுட்டுப் பெயர்களும், எவன் முதலிய வினாப் பெயர்களும், தான், தாம் முதலிய பெயர்களும் விளி வேற்றுமை ஏற்காமல் வருவனவாகும்,

உருபு மயக்கம்:- வேற்றுமை உருபுகள் பொருளை உணர்த்த வரும்போது, சில ஒன்றிற்கு ஒன்று மாறி நிற்கும். அதாவது, ஒரு வேற்றுமை உருபு வந்து வேறொரு வேற்றுமையின் பொருளை விளக்கும்.

(உ-ம்.) காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

இதில் காலத்தினால் என்ற மூன்றாம் வேற்றுமை உருபு இல் என்ற ஏழாம் வேற்றுமைப் பொருளைத் தந்தது. இவ்வாறு மாறி வரும்பொழுது எந்த வேற்றுமையில் பொருள் தரப்படுகிறதோ அந்த வேற்றுமையையே கொள்ளவேண்டும்.

வேற்றுமை பெற்று வரும் சாரியைகள்:- வேற்றுமை உருபுகள் ஏற்கும்போது எல்லாப் பெயர்களும் அப்படியே அவைகளை நேராக ஏற்பதில்லை. சில மாறுபட்டும், சில சாரியைகள் பெற்றும் வரும். அவ்வாறு வரும் சாரியைகள் அற்று, அத்து, அ, உ, என், தன், தம், நம், நும், அன், இன் என்பனவும் இன்னும் பலவுமாம்.

(உ-ம்.) மாறுவன:-

தான்	தன்னை	தன்னால்
நான்	என்னை	என்னால்
நீ	உன்னை	உன்னால்
நீங்கள்	உங்களை	உங்களால்

சாரியை பெறுவன:-

அற்று	அவை + ஐ = அவற்றை
அத்து	பலம் + ஐ = பலத்தை
அ	என் + கு = எனக்கு
உ	அவன் + கு = அவனுக்கு
ன்	கோ + ஐ = கோனை
தன்	அவன் + ஐ = அவன்றன்னை
தம்	எல்லாரும் + ஐ = எல்லார் தம்மையும்
நம்	எல்லாம் + ஐ = எல்லா நம்மையும்
நும்	எல்லீர் + ஐ = எல்லீர் நும்மையும்
அன்	அது + கு = அதற்கு
இன்	நிலம் + கண் = நிலத்தின்கண்

பயிற்சி 7

1. வேற்றுமை உருபுகள் எவ்வெவ்வாறு வரும்?
2. விளியேற்காத பெயர்கள் யாவை?
3. விளியேற்காத பொதுப்பெயர்கள் யாவை?
4. உருபு மயக்கம் என்றால் என்ன? உதாரணம் காட்டி விளக்குக.
5. வேற்றுமை உருபேற்கும்போது தன்மை முன்னிலைகள் எவ்வெவ்வாறு மாறுபடுகின்றன?
6, வேற்றுமை ஏற்கும்போது உண்டாகும் சாரியைகள் யாவை?

தொழிற் பெயரும் வினையாலணையும் பெயரும்

தொழிற் பெயர் என்பது ஒரு தொழிலைக் குறிக்க வருகின்ற பெயராகும். அவ்வாறு தொழிலைக் குறிக்க வரும் போது சில விகுதி பெற்றும் சில முதனிலை திரிந்தும் முதனிலை திரியாமலும் வரும்.

வினையாலணையும் பெயர் ஒரு வினையோடு சம்பந்தப் பட்ட பொருளை அவ் வினையோடு சேர்த்து விளங்கவைக்க வருவது.

(உ-ம்.) நடத்தல் நல்லது. போதலைச் செய்தான். இவற்றுள் நடத்தல் போதல் என்னும் தொழிற் பெயர்கள் வாக்கியங்களில் எழுவாயாக வந்தன. நடந்தவன் கண்டான். படித்தவன் தேறினன். இவற்றுள் நடந்தவன் படித்தவன் என்னும் வினையாலணையும் பெயர்கள் வாக்கியங்களின் எழுவாய்களாக வந்தன.

தொழிற் பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடுகள்:—

தொழிற் பெயர்	வினையாலணையும் பெயர்
தொழிலுக்குப் பெயராய் வருவது	தொழிலையுடைய பொருளுக்குப் பெயராய் வருவது
காலங் காட்டாது	காலம் காட்டும்
படர்க்கை இடத்திற்கே உரியது	மூவிடத்திற்கும் உரியது
திணை, பால், எண், இடம் கிடையாது	திணை, பால், எண், இடம் உண்டு.

ஒருமைப் பன்மைப் பெயர்கள்:-தமிழிலே உள்ள சொற்கள் ஒருமைப் பெயர் பன்மைப் பெயர் என இரு வகைப்படும் என்பதை அறிவீர்கள். ஒரு பொருளைக் குறிக்க வருவன வெல்லாம் ஒருமைப் பெயர்களாம். ஒன்றிற்கு மேற்பட்ட வற்றைக்குறிக்க வருவன வெல்லாம் பன்மைப் பெயர்களாம். இவற்றுள் ஒருமை, பன்மையாக மாறும்பொழுது பல வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. பெரும்பாலும் கள் என்பது ஒருமையோடு சேர்ந்து பன்மைப் பெயரை உணர்த்த வருகின்றது. மற்றும், மார், அர், ஆர் என்பனவும் இன்னும் பிறவும் ஒருமையைப் பன்மைப்படுத்த உபயோகப்படுகின்றன.

(உ-ம்.) பாடம்—பாடங்கள்
பள்ளிக்கூடம்—பள்ளிக்கூடங்கள்

இவற்றுள் கள் பன்மைப் பெயரை உணர்த்த வந்தது.

தோழன்—தோழன்மார்
தோழி—தோழிமார்

இவற்றுள் மார் பன்மைப் பெயரை உணர்த்திற்று.

நல்லவன்—நல்லவர்
நல்லவள்—நல்லவர்

இவற்றுள் அன் அள் என்பதற்குப் பதிலாக அர் பன்மைப் பொருளை உணர்த்திற்று.

நாட்டான்—நாட்டார்
நாட்டாள்—நாட்டார்

இவற்றுள் ஆன் ஆள் என்பதற்குப் பதிலாக ஆர் வந்து பன்மைப் பொருளை உணர்த்திற்று.

அது—அவை
பெரியது—பெரியவை

நல்லது—நல்லன
பிறிது—பிற

இவற்றுள் உகரத்துக்குப் பதில் அகரம் வந்து பன்மை பொருளை உணர்த்தியது.

உயர்வுப் பன்மை:-இவ்வாறு ஒருமைப் பன்மை என்ற வேறுபாடுகளோடு உயர்வுப் பன்மை என்ற ஒரு பகுப்பும் உண்டு. அறிவு, திரு முதலியவற்றால் உயர்ந்தவரைப் பன்மைப் பெயரிட்டு அழைப்பது மரபு.

உலகுக்குச் சிறந்த திருவள்ளுவரை திருவள்ளுவன் என்று ஒருமையால் கூறாது திருவள்ளுவர் என்று பன்மையால் கூறவேண்டும். இவ்வாறு கூறுவதற்கு உயர்வுப் பன்மை என்று பெயர்.

(உ-ம்.) கம்பர், தந்தையார், தலைவனார், தமக்கையார், ஆசிரியர்.

பயிற்சி 8

1. தொழிற் பெயர் என்பது யாது? அது எவ்வெவ்வாறு வரும்?
3. வினையாலணையும் பெயர் என்பது யாது? அது எவ்வாறு வரும்?
3. தொழிற் பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
4. ஒருமைப் பன்மைப் பெயர்கள் என்பன யாவை?
5. ஒருமைப் பெயர் பன்மைப் பெயராகும்போது எவ்வெவ்வாறு மாறுபடும்?
6. உயர்வுப் பன்மை என்பன யாவை? அவை எவ்வாறு வரும்?

வினைச்சொல்

ஒரு தொழிலைக் காட்டுவது வினையென்றும், அது தெரிநிலை, குறிப்பு என இருவகைப்படுமென்றும் கீழ் வகுப்பில் படித்தீர்கள். மற்றும் அவ் வினை, வினைமுற்று என்றும், பெயரெச்சமென்றும், வினையெச்சமென்றும் மூவகைப்படுமென்பதையும் அறிவீர்கள். அவ்வினை முற்று, திணை, பால், எண், இடங்களுக்கு ஏற்பப் பல்வேறு விகுதிகளைப் பெற்று மாறுபட்டு நிற்கும். ஆகவே, அத் திணை, பால், எண், இடங்களுக்கு ஏற்ப மாறும் விகுதிகளை நாமறிந்து கொள்ள வேண்டுவது அவசியம்.

தன்மை வினை முற்றுக்கள்:-தன்னைப்பற்றிக் கூற வருமிடத்து திணை, பால் என்ற வேறுபாடுகள் தோன்றுமல் ஒருமைப் பன்மை என்ற வித்தியாசமே காணப்படும். ஆகவே, அவ் வொருமையும் பன்மையும் பற்றிய விகுதிகளே தன்மை வினை முற்றுக்களில் வரக் கூடியன.

தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள்:-

(உ-ம்.) அல்—நடப்பல்

அன்—நடப்பன்

என்—செல்லுவென்

ஏன்—நடப்பேன்

தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள்:-

அம்—நடப்பம்

ஆம்—நடப்பாம்

எம்—செல்வெம்

ஏம்—செல்வேம்

ஓம்—செல்வோம்

முன்னிலை வினைமுற்றுக்கள்:-முன்னிலையிலும் ஒருமைப் பன்மை என்ற வேறுபாடு தவிர மற்ற திணை, பால் வேறுபாடுகள் கிடையா.

முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள்:-

(உ-ம்.) ஐ—செல்லை
ஆய்—நடப்பாய்
இ—சென்றி

முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள்:-

இர்—சென்றனிர்
ஈர்—கொள்வீர்
உம்—செல்லும்
மின்—வம்மின்

படர்க்கை வினைமுற்று விகுதிகள்:- படர்க்கை இடத்தில் திணை, பால், வேறுபாடுகள் உள்ளன. ஆகவே, விகுதிகளும் அவைகளுக்கேற்ப மாறுபடும்.

உயர்திணை, ஆண்பால், படர்க்கை வினைமுற்று விகுதிகள்:-

அன்—சென்றனன்
ஆன்—சென்றான்

உயர்திணை, பெண்பால், படர்க்கை வினைமுற்று விகுதிகள்:-

அள்—சென்றனள்
ஆள்—சென்றாள்

உயர்திணை, பலர்பால், படர்க்கை வினைமுற்று விகுதிகள்:-

ஆர்—நடப்பர்
ஆர்—நடப்பார்
ப—செல்ப
மார்—சென்மார்

அஃறிணை, ஒன்றன்பால், படர்க்கை வினைமுற்று விகுதிகள்:-

து—சென்றது
று—சொல்லிற்று
டு—பொருட்டு (பொருளையுடையது)

அஃறிணை, பலவின் பால், படர்க்கை வினைமுற்று விகுதிகள்:-

அ—சென்றன
ஆ—செல்லா

ஆ என்னும் விகுதி எதிர்மறைப் பொருளில் மாத்திரம் வரும்.

பயிற்சி 9

1. வினைச்சொற்கள் எவ்வெவ்வாறு மாறுபடும்?
2. தன்மை வினைமுற்றுக்கள் யாவை? அவை எத்தனை வகைப் படும்? என்னென்ன?
3. முன்னிலை வினை முற்றுக்களிலுள்ள வேறுபாடுகள் யாவை? உதாரணம் தருக.
4. முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.
5. படர்க்கை வினைமுற்று விகுதிகள் எவ்வெவ்வாறு வேறுபட்டிருக்கின்றன?

6. பலர்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.
7. பலவின்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள் யாவை? அவை எவ்வெப் பொருள்களில் வரும்?

முற்றெச்சம்

எச்சமென்பது முடியா வினை பெயர்ச்சொல்லுக்கோ வினைச்சொல்லுக்கோ எஞ்சி நிற்பது என்பதை அறிவீர்கள். அப்பொழுது அவ் வினை ஒரு முடிந்த பொருளைக் கொடுக்காததாகி நிற்கும். ஆனால், வினை முடிந்த பொருளைக் கொடுக்கின்ற சில வினைமுற்றுக்களும் அப்படியே மாறுபடாது எச்சப் பொருளில் வரும். இம்மாதிரியான எச்சம் முற்றெச்சம் எனப்படும்.

இது பெரும்பாலும் செய்யுள் நடையிலேயே வரும்.

(உ-ம்.) இராமன் தந்தையைக் கண்டனன் வணங்கினான். இதில் கண்டனன் என்ற முற்றுவினை கண்டு வணங்கினான் என வினையெச்சப் பொருளை உணர்த்திற்று.

குறிப்பு:—பெரும்பாலும் செய்யுள் நடையிலேயே வருகின்ற காரணத்தால் இது பேச்சு வழக்கில் காணப்படுவதில்லை.

மற்றும் குறிப்பு வினைமுற்று இவ்வாறு வினையெச்சப் பொருளில் வருவதோடு பெயரெச்சப் பொருளிலும் வரும்.

(உ-ம்.) பொன்னன் இராமன் வந்தான். இதில் பொன்னன் என்ற குறிப்பு வினைமுற்று பொன்னனாகிய இராமன் என்று பெயரெச்சப் பொருளை உணர்த்திற்று.

அவன் குருடன் வந்தான். இதில் குருடன் என்ற குறிப்பு வினைமுற்று குருடனாகி வந்தான் என்று வினையெச்சப் பொருளை உணர்த்திற்று. எனவே, தெரிநிலை வினைமுற்று வினையெச்சப் பொருளிலும், குறிப்பு வினை முற்று ஈரெச்சப் பொருளிலும் வரும் என்பதை அறிக.

இவையும் பெரும்பாலும் செய்யுளிடத்தே வரும்.

"வினைமுற்றே வினையெச்சமாகலும்,
குறிப்பு முற்று ஈரெச்சமாகலும் உளவே"

என்பது நன்னூல் சூத்திரம்.

காலங் கரந்த பெயரெச்சம்:- கீழ் வகுப்பில் பெயரெச்சம் முக்காலத்தையுங் காட்ட வரும் என்பதைப் படித்தீர்கள். அவற்றுள் சில ஒருகாலத்தையுங் காட்டாது பொதுவாகக் கரந்து பொருள் விளக்கும்போது மூன்று காலத்தையுங் காட்டி நிற்கும். இவ்வாறு காலங்களை மறைத்து வைக்குங் காரணத்தால் இது காலங் கரந்த பெயரெச்சம் எனப்படும்.

(உ-ம்.) தோய் தயிர். விடு சரம்.

இவற்றுள் தோய், விடு என்ற பெயரெச்சங்கள் தயிர், சரம் என்ற பெயர்ச் சொற்களைக் கொண்டு முடிந்தன. அவைகளை விரிக்கும்பொழுது தோய்ந்த தயிர், தோய்கின்ற தயிர், தோயும் தயிர் என்றும், விட்ட சரம், விடுகின்ற சரம், விடும் சரம் என்றும், மூன்று காலத்தையும் காட்டி நிற்கின்றன.

குறிப்பு:— இக் காலங் கரந்த பெயரெச்சமே வினைத்தொகையாகும்.

பயிற்சி 10

1. முற்றெச்சம் என்பது யாது?
2. முற்றெச்சம் பெரும்பாலும் எவ்விடத்து வரும்?
3. முற்றெச்சத்தை ஒரு உதாரணம் கொடுத்து விளக்கு.
4. இரண்டு எச்சத்திலும் பொருள்பட வரும் முற்று யாது?
5. குறிப்பு முற்று எவ்வெவ்வாறு எச்சமாகும் என்பதை உதாரணங் காட்டி விளக்கு.
6. காலம் கரந்த பெயரெச்சம் என்பது யாது? உதாரணத்தோடு விளக்குக.
7. காலம் கரந்த பெயரெச்சத்திற்கு உள்ள வேறு பெயர் என்ன?

சில வினைமுற்றுக்கள்

நாம் மேலே வினைமுற்றுக்கள் திணை, பால், எண், இடங்களுக்கேற்ப மாறுபடும் என்று பார்த்தோம். ஆனால், சில வினைமுற்றுக்கள் திணை, பால், எண், இடங்களுக்கு ஏற்ப மாறுபடாமல் அப்படியே வரும்.

வேறு, இல்லை, உண்டு என்ற இந்த மூன்று வினைமுற்றுக்களும் திணை, பால், எண், இடங்கள் யாவற்றிற்கும் வேறுபாடில்லாமல் வருகின்றன.

(உ-ம்.) நீ இல்லை, நான் இல்லை, அவன் இல்லை,
நீ வேறு, நான் வேறு, அவன் வேறு,
நீ உண்டு, நான் உண்டு, அவன் உண்டு,
அது உண்டு.

இதுபோலப் பிறவற்றிற்கும் வரக் கண்டுகொள்க. இவைகளைத் தவிர யார், எவன் என்ற வினாச்சொற்கள் சிலவற்றிற்கு வேறுபாடு தோன்றாமல் வரும். இவற்றுள் யார்

என்னும் வினாச் சொல் உயர்திணைப்பால் மூன்றிற்கும் வரும்.

எவன் என்னும் வினாச்சொல் அஃறிணைப்பால் இரண்டிற்கும் வரும்.

(உ-ம்.) அவன் யார்? அவள் யார்? அவர் யார்? அது எவன்? அவை எவன்?

எவன் என்பது விகாரப்பட்டு என், என்ன, என்னை என்றும் வரும்.

(உ-ம்.) அது என்? அது என்னை? அவை என்ன?

செய்யும் என்னும் வினைமுற்று:-ஒரு வினைமுற்றே திணை, பால், எண், இடங்களில் கலந்து வரும் என்பதைப் படித்தீர்கள். ஆனால், இது ஒன்றற்கே சிறப்பாக உள்ள வினைமுற்றாகும். அதாவது, படர்க்கையிலே உள்ள ஒருமை எண்ணுக்கும், பலவின்பாலுக்கும் இச் செய்யும் என்னும் வினைமுற்று உரியதாகும். ஆனால், படர்க்கைப் பலர்பாலிலும் தன்மை முன்னிலைகளிலும் இவ் வினைமுற்று வராது. மற்றும் இவ் வினைமுற்று இறந்தகாலத்தைக் காட்டாது. பெரும்பாலும் எதிர்காலத்தையே காட்டும். சிலவிடங்களில் நிகழ்காலத்தைக் காட்டவும் வரும்.

(உ-ம்.) அவன் செல்லும். அவள் செல்லும்.
நாய் ஓடும். மயில்கள் அகவும்.

உடன்பாடு எதிர்மறை:-ஒரு தொழிலைக் குறிக்கும் பொழுது அத் தொழிலைச் செய்தவனைச் செய்தான் என்றும், செய்யாதவனைச் செய்யாதவன் என்றுங்கூறுகிறோம். ஆகவே, அத் தொழிலுக்கு உடன்பட்டு நிற்றலை உடன்பாட்டு வினை

யென்றும், செய்யாது எதிர்த்து நிற்றலை எதிர்மறை வினை என்றும் கூறுவது முறையாகும்.

இவ் வுடன்பாட்டு எதிர்மறை வினைகள் திணை, பால், எண் இடங்களுக்கு ஏற்ப மாறுபட்டு நிற்கும். எதிர்மறை வினைகளில் எதிர்மறைப் பொருளை உணர்த்தும் அல், இல், ஆ என்பன இடைநிலைகளாக வரும்.

(உ-ம்.) அல்—உண்ணலன்
இல்—உண்டிலன்
ஆ—உண்ணான்

மற்றும் இவ் வுடன்பாட்டு வினை முற்றுக்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற வேறுபாட்டோடும், படர்க்கையில் பால் வேறுபாட்டோடும் வரும் என்பதைப் படித்திருக்கிறீர்கள். அதேபோல் எதிர்மறை வினையும் அல், இல், ஆ, என்ற எதிர்மறைகளை உணர்த்தும் இடைநிலைகளைக் கொண்டு தன்மை முன்னிலையில் ஒருமைப் பன்மை வேறுபாட்டோடும், படர்க்கையில் பால் வேறுபாட்டோடும் வரும்.

(உ-ம்.) தன்மை ஒருமை—சென்றிலேன்
தன்மைப் பன்மை—சென்றிலேம்

படர்க்கை:—

ஆண்பால்—சென்றிலன்
பெண்பால்—சென்றிலள்
பலர்பால்—சென்றிலர் (செல்லார்)
ஒன்றன்பால்—சென்றிலது
பலவின்பால்—சென்றில (செல்லா)

பயிற்சி 11

1. பொதுவாக வருகின்ற வினைமுற்றுக்கள் யாவை?
2. வினைச் சொற்கள் திணை, பால், எண், இடங்களுக்குப் பொது வாக வரும் என்பதை விளக்கு.
3. உயர்திணைக்கும், அஃறிணைக்கும் வருகின்ற வினைச் சொற்கள் யாவை?
4. செய்யும் என்னும் வினைமுற்று எவ்வெவ்விடங்களில் வரும்?
5. உடன்பாடு எதிர்மறை இவைகளை விளக்குக.
6. வினைச்சொல்லில் எதிர்மறைப் பொருளை உணர்த்தும் எழுத் துக்கள் யாவை? உதாரணம் காட்டி விளக்கு.
7. எதிர்மறை வினைகள் எவ்வெவ்வாறு வரும்?

வியங்கோள் வினை

இவ் வியங்கோள் வினை வாழ்த்து முதலியவற்றிற்கு உபயோகிக்கப்படுமென்பதை அறிவீர்கள். இவ் வினைகள் இரு திணை, ஐம்பால், மூவிடத்தும் வரும். இவ் வியங்கோளும் உடன்பாட்டு வியங்கோள், எதிர்மறை வியங்கோள் என்று பிரிக்கப்படும்.

(உ-ம்.) உடன்பாடு	எதிர்மறை
தன்மை ஒருமை—நான் வாழ்க	நான் வாழற்க
தன்மைப் பன்மை—நாம் வாழ்க	நாம் வாழற்க
முன்னிலை ஒருமை——நீ வாழ்க	நீ வாழற்க
முன்னிலைப் பன்மை—நீங்கள் வாழியர்	நீங்கள் வாழற்க

படர்க்கை:—

ஆண்பால்—அவன் வாழ்க	அவன் வாழற்க
பெண்பால்—அவள் வாழ்க	அவள் வாழற்க
பலர்பால்—அவர் வாழியர்	அவர் வாழற்க

ஒன்றன்பால்—அது வாழ்க	அது வாழற்க
பலவின்பால்—அவை வாழ்க	அவை வாழற்க

ஏவல் வினை

ஏவல் வினையானது கட்டளைப் பொருளில் வருவது. இது முன்னிலை இடத்திற்கே உரியதாகும். இவ்வேவலும் உடன்பாடு, எதிர்மறை என இருவகைப்படும். உடன்பாட்டில் ஒருமையாயின் ஆய், இ என்ற விகுதிகளைப் பெற்றும் பன்மையில் வரும்பொழுது மின், உம் என்ற விகுதிகளைப் பெற்றும் வரும். எதிர்மறையில் ஒருமையாயின் ஆ என்ற எதிர்மறை இடைநிலையையும், ஏ, இ என்ற விகுதிகளையும் பெற்றும், பன்மையாயின் அல், ஆ என்ற எதிர்மறை இடைநிலைகளையும் மின், ஈர், கள் என்ற விகுதிகளையும் பெற்று வரும்.

(உ-ம்.)	உடன்பாடு	எதிர்மறை
ஒருமை	உண்ணாய்	உண்ணாதே
	செல்லுதி	செல்லாதி
	உண்	உண்ணாதே
பன்மை	நடமின்	நடவன்மின்
	செய்யும்	செய்யாதீர்
	வம்மின்	வராதீர்கள்

ஏவலுக்கும் வியங்கோளுக்கும் உள்ள வேறுபாடு:-

ஏவல்	வியங்கோள்
கட்டளைப் பொருளில் மாத்திரம் வரும்	வாழ்த்துதல், வைதல், ஏத்துதல் முதலிய பல பொருளில் வரும்.

ஏவல்	வியங்கோள்
ஒருமைப் பன்மை என்ற வேறுபாடு உண்டு.	ஒருமைப் பன்மை என்ற வேறுபாடில்லை.
முன்னிலை இடத்தில் மட்டும் வரும்.	மூவிடத்தும் வரும்.
இருவழக்கிலும் விரவி வரும்.	பெரும்பாலும் செய்யுள் வழக்கில் வரும்.

ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்:-வினைமுற்றுக்கள் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வருவனபோன்று பெயரெச்சமும் வரும். அவ்வாறு வரும்பொழுது பெயரெச்சத்தில் சில இடங்களில் கடைசி எழுத்துக் குறைந்து நிற்கும். அப்படிக் குறைந்து நிற்பது ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகும்.

(உ-ம்.) பறவாக் குளவி. பாயா வேங்கை.

இவற்றுள் பறவாத, பாயாத என்ற பெயரெச்சங்கள் பறவா பாயா என்று கடைசி எழுத்துக் குறைந்து நின்று பொருள் மாறுபடாது இருந்தன.

பயிற்சி 12

1. வியங்கோள் வினை என்றால் என்ன?
2. வியங்கோள் வினை மூவிடத்திற்கும் பொது என்பதை விளக்குக.
3. ஏவல்வினை உடன்பாட்டில் எவ்வெவ் விகுதிகளைப் பெற்று வரும்?
4. ஏவல்வினை எதிர்மறையில் எவ்வெவ் விகுதிகளைப்பெற்றுவரும்?
5. ஏவல் வினைக்கு உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் உள்ள வேறுபாடுகளை விளக்கிக் காட்டு
6. ஏவலுக்கும், வியங்கோளுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
7. 'பறவாக் குளவி'. இதன் இலக்கணத்தை விளக்கி எழுது. இதில் வரும் எச்சம் யாது?

இடைச்சொல்

பெயர்ச் சொல்லையும் வினைச் சொல்லையும் அடுத்து அவற்றின் முன்பின் ஓரிடத்து வந்து வழங்கும் சொல் இடைச்சொல் எனப்படும். அது பலவகைப்படும் என்பதைக் கீழ் வகுப்பில் படித்துள்ளீர்கள்.

ஏகார இடைச்சொல்:-பலவகைப்பட்ட இடைச்சொற்களில் 'ஏ' என்பதும் ஓர் இடைச்சொல்லாக வரும். அந்த ஏகார இடைச்சொல் ஆறுவகைப்பட்ட பொருள்களில் வரும். அவை: பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை என்பனவாகும்.

(உ-ம்.) பிரிநிலை:- இராமனே வந்தான்.

இதில் இராமனே என்று மற்றவர்களைப் பிரித்து நிற்பதால் பிரிநிலை ஏகாரமாயிற்று.

வினா:- நானே கொண்டேன்?

இதில் நானே என்பது கேள்விப்பொருளை உணர்த்திய காரணத்தால் இது வினா ஏகாரமாயிற்று.

எண்:- மாடே, கன்றே, பொன்னே, பொருளே.

இவற்றிலுள்ள ஏகாரங்கள் எண்ணைக் குறிக்க வருதலால் இவை எண் ஏகாரமாயின.

ஈற்றசை:- 'அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே.'

இதில் கடைசியிலுள்ள ஏகாரம் ஒரு பொருளுமில்லாது வந்ததால் இது ஈற்றசை ஏகாரமாயிற்று.

தேற்றம்:- மன்னனை மதித்தற்குரியன்.

இதிலுள்ள ஏகாரம் தெளிந்த பொருளை உறுதிப்படுத்திக் கூறுதலால் இது தேற்ற ஏகாரமாயிற்று.

இசைநிறை:-ஏ ஏ இவளொருத்தி பேடியே.

இதில் முதலிலுள்ள ஏ ஏ என்பது இசையை நிறைக்க வருதலால் இது இசைநிறை ஏகாரமாயிற்று.

ஓகார இடைச்சொல்:- இவ் வோகார இடைச்சொல் ஒழிஇசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசை நிலை, பிரிநிலை என்ற பொருள்களில் வரும்.

(உ-ம்.) ஒழிஇசை:- நீ பாடற்கோ வந்தாய்?

இதில் ஓகாரம் அல்ல என்ற பொருளில் ஒழித்துக் காட்டுவதால் இது ஒழி இசை ஓகாரமாயிற்று.

(உ-ம்) வினா:- நேற்று வந்தாயோ?

இது வினாப் பொருளைத் தருதலால் வினா ஓகாரமாயிற்று.

சிறப்பு:- ஓ ஓ இவன் பெரியன்.
ஓ ஓ இவன் கொடியன்.

இவற்றுள் ஓ ஓ என்பன சிறப்பைக் காட்ட வருதலால் இது சிறப்பு ஓகாரமாயிற்று. சிறப்பு உயர்வு சிறப்பு, இழிவு சிறப்பு என இரு வகைப்படும். ஒரு பொருளைப்பற்றி உயர்த்திச் சொல்லுதல் உயர்வு சிறப்பாகும். ஒரு பொருளைப்பற்றித் தாழ்த்திச் சொல்லுதல் இழிவு சிறப்பாகும்.

மேலே காட்டிய உதாரணங்களில் ஓ ஓ இவன் பெரியன் என்பது உயர்வு சிறப்பு. ஓ ஓ இவன் கொடியன் என்பது இழிவுசிறப்பு.

மாணவர் வீண் பொழுது போக்குதல் நல்லதோ! இதில் நல்லதல்ல என்ற எதிர்மறைப்பொருளில் வருதலால் இது எதிர்மறை ஓகாரமாயிற்று.

தெரிநிலை:- கந்தனோ அவனுமல்லன்.
முருகனோ அவனுமல்லன்.

இதில் ஓகாரம் இருவரும் அல்ல என்று தெளிவுபடுத்துவதால் இது தெரிநிலை ஓகாரமாயிற்று.

கழிவு:- ஓ ஓ மறைந்தனன்.
மறைந்தாயோ மன்னா.

இவைகளில் ஓகாரப் பொருள் கழிந்ததைப்பற்றிக் கூறுவதால் இது கழிவுப் பொருளில் வந்த ஓகாரம்.

அசைநிலை:- வம்மினோ உலகீர்.

இதில் ஓகாரம் அசைநிலைப் பொருளில் வந்ததால் இது அசைநிலை ஓகாரமாயிற்று.

உம் என்னும் இடைச்சொல்:- இந்த உம் என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்ற எண்வகைப் பொருள்களிலும் வரும்.

(உ-ம்.) எதிர்மறை:- அவன் போதற்கும் உரியன்.

இதில் போகாததற்கும் உரியன் என எதிர்மறைப் பொருள் படுதலால் இது எதிர்மறை உம்மை.

சிறப்பு:- இதுவும் உயர்வு சிறப்பு, இழிவு சிறப்பு என இருவகைப்படும்.

குறவரும் மருளும் குன்றம்.

இது உயர்வு சிறப்பு உம்மை.

புலையரும் விரும்பாப் புன்புலால் யாக்கை.

இது இழிவு சிறப்பு உம்மை.

ஐயம்:- ஒன்றாயினும் இரண்டாயினும் கொள்.

இதில் ஐயப் பொருளைத் தருதலால் இது ஐய உம்மை.

எச்சம்:-இறந்தது தழுவிய எச்சம் என்றும், எதிரது தழுவிய எச்சம் என்றும் இரு வகைப்படும். அதாவது நடந்த ஒன்றோடு சம்பந்தப்படுவதும், நடக்கப்போவதோடு சம்பந்தப்படுவதுமாகும்.

(உ-ம்.) ஆசிரியரும் வந்தார்.

இதில் முன் மாணவரும் வந்தார் என்ற பொருளைத் தழுவிக் கொள்வதால் இறந்தது தழுவிய எச்ச உம்மை.

மாணவரும் வந்தார்.

இதில் பிறகு ஆசிரியரும் வருவார் என்ற பொருளைத் தழுவியதால் இது எதிரது தழுவிய எச்ச உம்மை.

முற்று:- ஐந்தையும் வென்றவன் அறிவன்.

இதில் முற்றுப்பொருளைத் தருதலால் இது முற்றும்மை.

அளவை:- ஒன்றும் இரண்டும் மூன்றும் கொண்டான்.

இதில் அளவைக் குறிக்க வருதலால் இவை அளவும்மை எனப்படும்.

தெரிநிலை:- இவன் இளையனும் அல்லன் முதியனும் அல்லன்.

இதில் ஒருவன் நிலையைத் தெளிவாகக் காட்டுவதால் தெரிநிலை உம்மை.

ஆக்கம்:- கீரை மருந்தும் ஆயிற்று.

இதில் உணவாகவேண்டிய கீரை மருந்தாகவும் ஆதலால் ஆக்க உம்மையாகும்.

கொல் என்னு மிடைச்சொல்:- இக் கொல் என்னும் இடைச்சொல் ஐயப் பொருளிலும் அசைநிலைப் பொருளிலும் வரும்.

ஐயம்:- 'இவ்வளவில் மீளுங்கொல் என்றுரையா விம்மினன்.'

இதில் கொல் என்னும் இடைச்சொல் ஐயப்பொருளைக் காட்டிற்று.

அசைநிலை:- என்று கருங்கொல் என வேண்டா.

இதில் கொல் என்பது அசைநிலையாக வந்தது.

உரிச்சொல்

தனித்து இயங்கமுடியாததாகிப் பெயர்ச்சொல்லோடும் வினைச்சொல்லோடும் சம்பந்தப்பட்டு வந்து அவற்றின் குணத்தை விளக்குவது உரிச்சொல்லாகும்.

அவற்றுள் ஒரு குணம் குறிக்கப் பல உரிச்சொற்களும் பல குணங்களைக் குறிக்க ஒரு உரிச்சொல்லும் உள்ளன.

ஒரு குணங் குறித்த பல உரிச்சோல்:- சால, உறு, தவ, நனி, கூர் கழி மிகல் இவையெல்லாம் மிகுதி என்னும் ஒரே பொருளைக்காட்டும் உரிச்சொற்களாகும்.

(உ-ம்.) சாலப் பசித்தான். உறுதுயர்.
தவப் பெரியன். நனி சிறந்தான்.
அன்புகூர்ந்த உரை. கழிபேருவகை.
மிகைபடப் பேசினன்.

பல குணங்களைக் குறித்த ஒரு உரிச்சோல்:- கடி என்னும் உரிச்சொல் காவல், கூர்மை, அச்சம், மிகுதி, ஆர்த்தல், மணம், காரம் முதலிய பல்வேறு வகைப் பொருள்களில் வரும்.

(உ-ம்.) கடி நகர் — காவல்.
கடி வாள் — கூர்மை.
கடி கடம் — அச்சம்.
கடி பயன் — மிகுதி.
கடி முரசம் — ஆர்த்தல்.
கடி வினை — மணம்.
கடி மிளகு — காரம்.

குறிப்பு:— இந் நால்வகைச் சொற்களைப்பற்றியும் இன்னும் சில இவற்றோடு சம்பந்தப்பட்ட இலக்கணங்களைப்பற்றியும் உயர்தர வகுப்புகளில் நன்ருகப் படிப்பீர்கள்.

பயிற்சி 13

1. வகார இடைச்சொல் எத்தனைப் பொருளில் வரும்? என்னென்ன? ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

2. ஓகார இடைச்சொல் எவ்வெப் பொருள்களில் வரும்? உதாரணம் காட்டு.
3. 'உம்' என்னும் இடைச்சொல் தரும் பொருள்கள் யாவை? விளக்குக.
4. 'கொல்' என்னும் இடைச்சொல் எவ்வெப் பொருள்களில் வரும்?
5. உரிச்சொல் எத்தனை வகைப்படும்? என்னென்ன?
6. இரண்டு வகைப்பட்ட உரிச்சொற்களையும் உதாரணத்தோடு விளக்குக.

சொற்றொடர்

ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் ஒரு பொருளைத் தருமாறு தொடர்ந்து வருமாயின் அவைகள் சொற்றொடர் எனப்படும் என்பதைக் கீழ் வகுப்பில் படித்தீர்கள். இனி, அச்சொற்றொடர்களிலுள்ள பல்வேறு வகைப் பிரிவினைகளைப்பற்றிப் படிப்பீர்கள்.

சொற்றொடர், தொகைநிலைச் சொற்றொடர் எனவும், தொகாநிலைச் சொற்றொடர் எனவும் இருவகைப்படும்.

தொகைநிலைச் சொற்றொடராவது, சொற்களுக்கு நடுவில் பொருள் விளக்க வரவேண்டிய சொல்லோ எழுத்தோ மறைந்து நிற்பதாகும். அவ்வாறு மறையாது வெளிப்படையாய் நிற்பது தொகாநிலைச் சொற்றொடராம்.

தொகைநிலைச் சொற்றொடர்

தொகைநிலைச் சொற்றொடர் ஆறுவகைப்படும். அவை வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத் தொகை,

உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை என்பன.

வேற்றுமைத் தொகை:- வேற்றுமைத் தொகையாவது இரண்டாம் வேற்றுமை முதலாக ஏழாம் வேற்றுமை ஈருக உள்ள ஆறு வேற்றுமை உருபுகளும், இரண்டு சொற்கள் சேரும்போது மறைந்துநின்று பொருளை விளக்குவதாகும்.

(உ-ம்.) இரண்டாம் வேற்றுமைத் தொகை — வீடு அடைந்தான்.

மூன்ரும் வேற்றுமைத் தொகை— கல்லெறிந்தான்.

நான்காம் வேற்றுமைத் தொகை — கூலி வேலை.

ஐந்தாம் வேற்றுமைத் தொகை— நகர் நீங்கினுன்.

ஆரும் வேற்றுமைத் தொகை — என் புத்தகம்.

ஏழாம் வேற்றுமைத் தொகை — மணி ஒளி.

மேலே காட்டிய வீடு அடைந்தான் முதலியவற்றில் இரண்டு முதலாக உள்ள ஆறு வேற்றுமை உருபுகளும் மறைந்து நின்று பொருளைத் தருகின்றன. எனவே, இவைகள் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்களாகும்.

வினைத்தொகை:-பெயரெச்சம் தனது காலங் காட்டும் இடைநிலை இல்லாமலும் விகுதி இல்லாமலும் வந்து தனக்குரிய பெயரைச் சேர்ந்து நிற்கும். அவ்வாறு வருவதே வினைத்தொகையாகும்.

(உ-ம்.) அடு களிறு. தோய் தயிர்.

இவை காலங் கரந்த பெயரெச்சமாவதை யறிக.

பண்புத்தொகை:-பண்பை விளக்க வருவதாகிய ஆகிய என்கின்ற பண்புருபானது மறைந்து வருவது பண்புத் தொகையாகும்.

(உ-ம்.) கரும்பலகை. செம்மொழி.

இவற்றில் ஆகிய என்ற பண்புருபுகள் மறைந்து வந்தன.

உவமைத் தொகை:-உவமை உருபுகளாகிய போல, புரைய, ஒப்ப முதலியவை இரு சொற்களுக்கிடையில் மறைந்து வருவது உவமைத் தொகையாகும்.

(உ-ம்.) மலர் முகம். துடி இடை.

இவற்றில் உவமை உருபுகள் மறைந்து வந்துள்ளன.

உம்மைத் தொகை:- எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்ற நான்கு அளவைகளிடத்தும் உம் என்பது மறைந்து வருவது உம்மைத் தொகையாகும்.

(உ-ம்.) எண்ணல் — இராம இலக்குமணர்.
எடுத்தல் — பாரம் மணங்கு.
நீட்டல் —ஐந்தடி ஆறங்குலம். (முழம் சாண்)
முகத்தல் — உழக்காழாக்கு.

இவற்றில் உம்மைகள் மறைந்து வந்திருக்கின்றன.

அன்மொழித் தொகை:-இது மற்றத் தொகைகளிலிருந்து சிறிது மாறுபட்டதாகும். மற்றத் தொகைகள் இரண்டு சொற்களுக்குள் சம்பந்தப்பட்டு அதற்குள்ள பொருளையே விளக்க வருகின்றன. ஆனால் அன்மொழித் தொகையோ

இவ்விரண்டு சொற்களுக்கும் அப்பாற்பட்ட ஒரு பொருளைக் குறிக்க வருவதாகும். சொற்களுக்குச் சம்பந்தமில்லாத வற்றைக் குறிக்கின்ற காரணத்தால் அது அன்மொழித் தொகை யென்ற பெயர் பெற்றது. மற்றும், இவ்வன் மொழித் தொகை தனித்து வராது. மேற்கண்ட வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை என்ற ஐந்து தொகைகளோடு சம்பந்தப்பட்டு அவைகளுக்குப் புறத்தில் வேறு பொருளை உணர்த்த வருவது அன்மொழித் தொகையாகும்.

(உ-ம்,) மலர்க்குழல் வந்தாள்.

இது மலரையணிந்த கூந்தலையுடைய பெண் வந்தாள் எனப் பொருள் படுதலால் இது இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

(உ-ம்.) தாழ்குழல் வந்தாள்.

இது வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

பைந்தொடி நடந்தாள்.

இது பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

தேமொழி பாடினாள்.

இது உவமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன் மொழித் தொகை.

உயிர் மெய் இருநூற்றுப் பதினாறு.

இது உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித் தொகை.

தொகா நிலைத் தொடர்:- மேலே கண்ட தொகைநிலைத் தொடர்களில் மறைந்து நின்ற வேற்றுமை உருபு முதலியன வெளிப்பட்டு நின்று வருவது தொகா நிலைச் சொற்றொடராகும். அத் தொகா நிலைச் சொற்றொடர் வினைமுற்றுத் தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர், எழுவாய்த் தொடர், விளித் தொடர், வேற்றுமைத் தொடர், இடைச் சொற்றொடர், உரிச் சொற்றொடர், அடுக்குத் தொடர் எனப் பலவகைப்படும்.

(உ-ம்.)

நடந்தான் இராமன்—தெரிநிலை வினைமுற்றுத் தொடர்.
பெரியன் அவன்—குறிப்பு வினைமுற்றுத் தொடர்.
வந்த மனிதன்—தெரிநிலைப் பெயரெச்சத் தொடர்.
பெரிய பையன்—குறிப்புப் பெயரெச்சத் தொடர்.
ஓடி வந்தான்—தெரிநிலை வினையெச்சத் தொடர்.
படித்தன்றி வாரான்—குறிப்பு வினையெச்சத் தொடர்.
இராமன் வந்தான்—எழுவாய்த் தொடர்.
இராமனே வா—விளித் தொடர்.
குடத்தை வனைந்தான்—வேற்றுமைத் தொடர்.
முன்னேறினான்—இடைச் சொற்றொடர்.
நனி சிறந்தான்—உரிச் சொற்றொடர்.
பாம்பு பாம்பு—அடுக்குத் தொடர்.

மூவகைச் சொற்றொடர்கள்

தமிழிலுள்ள சொற்றொடர்கள் தனிச் சொற்றொடர் (தனி வாக்கியம்) தொடர்ச்சொற்றொடர் (தொடர் வாக்கியம்) கலப்புச் சொற்றொடர் (கலப்புவாக்கியம்) என மூன்று வகைப் படும்.

தனிச் சொற்றொடர்:-முருகன்வந்தான், முருகன் வேலை எடுத்தான், இவ் வாக்கியங்கள் இரண்டையும் கவனிக்க. முதல் வாக்கியம் ஒரு தனித்த பொருளைப்பற்றி ஒரு எழுவாயையும் ஒரு பயனிலையையும் கொண்டு முடிகின்றது. இரண்டாம் வாக்கியம் வேறோர் தனிப் பொருளைப்பற்றி எழுவாய் பயனிலை செயப்படுபொருள்களோடு இருக்கிறது. இவ்வாறு ஏதேனும் ஒரு குறித்த பொருளைப்பற்றி ஒரு எழுவாய் ஒரு பயனிலையைக்கொண்டோ அவைகளோடு சம்பந்தப்பட்ட செயப்படுபொருளைக்கொண்டோ முடிந்து நிற்பது தனி வாக்கியமாகும்.

தொடர்ச் சொற்றொடர்:- மாணவன் காலையில் எழுந்தான்; பாடத்தைப் படித்தான். கந்தன் நன்றாகப் படித்தான்; ஆகையினால் அவன் தேர்ச்சிபெற்றான்.

இவற்றில் முதல் வாக்கியம ஒரே எழுவாயையுடைய இரண்டு தனிவாக்கியங்கள் தொடரக் கூட்டு இடைச்சொல் ஒன்றுமில்லாது அப்படியே வந்து பொருளைத் தருகின்றது. இரண்டாவது வாக்கியம் இரண்டு தனி வாக்கியங்களோடு ஆகையால் என்னும் கூட்டு இடைச்சொல் வர ஒரு பொருளைக் கொடுக்கின்றது. எனவே ஒன்றுக்கு மேற்பட்ட தனி வாக்கியங்கள் தொடர்ந்து கூட்டிடைச்சொல் பெற்றோ பெறுமலோ ஒரே எழுவாயைக் கொண்டு முடிந்து நிற்பது தொடர்ச்சொற்றொடராகும்.

கலப்புச் சொற்றொடர்:-பாடம் படிக்கல் நல்லதென்று ஆசிரியர் சொன்னார். உடற்பயிற்சி நலந்தரும் என்று பலர் கூறுகின்றனர்.

இந்த இரண்டு வாக்கியங்களும் ஒரு தனிச் சொற்றொடரையும் அவற்றோடு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு எச்சச் சொற்றொடரையுங் கொண்டு முடிகின்றன. இவற்றுள் தனி வாக்கியம் முதல் சொற்றொடரென்றும் எச்சத்தொடர் சார்புச் சொற்றொடர் என்றும் பெயர் பெறுகின்றன. எனவே இவ்வாறு ஒரு தனி வாக்கியமும் ஒரு எச்சச் சொற்றொடராகிய சார்பு வாக்கியமும் கலந்து வருவது கலப்பு வாக்கியமாகும்.

பயிற்சி 14.

1. சொற்றொடர் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?
2. தொகைநிலைதொடர் எத்தனை வகைப்படும்? என்னென்ன? ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணம் கொடு:
3. அன்மொழித் தொகைக்கும் பிறதொகைகளுக்குமுள்ள வேறுபாடு என்ன?
4. அன்மொழித்தொகை எவ்வெவ்வாறு வரும்?
5. தொகா நிலைத்தொடர் என்றால் என்ன? அதற்கும் தொகை நிலைத் தொடருக்குமுள்ள வேறுபாடு யாது?
6. தொகாநிலைத்தொடர் எத்தனை வகைப்படும்?
7. வினை எச்சத்தொடர் என்றால் என்ன?
8. வேற்றுமைத் தொடர் எவ்வாறு வரும்?
9. எழுவாய்த் தொடருக்கும் வினை முற்றுத் தொடருக்குமுள்ள வேறுபாடு என்ன?
10. உரிச்சொல் தொடருக்கும் இடைச்சொல் தொடருக்கும் ஒவ்வொரு உதாரணம் கொடு:
11. மூவகைச் சொற்றொடர்கள் என்னென்ன?
12. கலப்புச் சொற்றொடர் என்றால் என்ன?
13. தனிவாக்கியம் என்றால் என்ன? உதாரணம் கொடு:
14. தொடர் சொற்றொடர் எவ்வாறு வரும்?

தொடர் இலக்கணம்

மேலே தமிழிலே உள்ள சொற்றொடர்கள் பல வகைப் படுமென்று படித்தீர்கள். அவைகள் ஒரு வாக்கியத்தில் தொடர்ந்து வரும்போது அவைகளைப் பிரித்துத் தனியாக அவைகளுக்கு இலக்கணங் கூறுவதே தொடர் இலக்கணமாகும். ஒவ்வொரு தொடரிலுமுள்ள நிலைமொழியைக் கொண்டே தொடரிலக்கணம் அறியப்படும். அவை தொகை நிலைத் தொடராயினும், தொகாநிலைத் தொடராயினும் அவ்வாறே கூறப்படும். தொகைநிலைத் தொடரைத் தொகை என்றும், தொகா நிலைத் தொடரை விரி என்றும் சுருக்கிக் கூறுவர்.

(உ-ம்.) கந்தன் பள்ளிக்கூடத்தில் பாடங்களைப் படித்துத் தேறினான்.

இவற்றுள், கந்தன் பள்ளிக்கூடம்—ஆறாந் தொகை அல்ல; பெயர் அல்ல; ...

பள்ளிக்கூடத்தில் பாடங்களை—ஏழாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

பாடங்களைப் படித்து — இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

படித்துத் தேறினான் — வினையெச்சத் தொடர்

பகுபத இலக்கணம்

சொற்கள் பகுபதம் பகாப்பதம் என இரு வகைப்படும் என்பதை அறிவீர்கள். பகுபதத்தை அதற்குரிய உறுப்புகளைக் கொண்டு பிரித்து இன்னின்னவென்று காட்டுதலே பகுபத இலக்கணமாகும். ஒரு பதத்துள், பகுபத உறுப்புக்களாகிய பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம்

என்ற ஆறேனும் அவற்றுள் ஒன்றிரண்டு குறைந்தேனும் வரும்.

உண்டான் = உண் + ட் + ஆன்.

உண்—பகுதி, ட்—இறந்தகால இடைநிலை, ஆன்—ஆண்பாற் படர்க்கை வினை முற்று விகுதி.

செய்தனன் = செய் + த் + அன் + அன்.

செய்—பகுதி, த்—இறந்தகால இடைநிலை, அன்—சாரியை, அன்—ஆண்பாற் படர்க்கை வினை முற்று விகுதி.

நடந்தனன் = நட + த் + த் + அன் + அன்.

நட—பகுதி, த்—சந்தி, த்—இறந்தகால இடைநிலை, அன்—சாரியை, அன்—ஆண்பாற் படர்க்கை வினை முற்று விகுதி, த், ந் ஆகத் திரிந்ததால் விகாரம்.

பயிற்சி 15.

1. தொடர் இலக்கண மென்றால் என்ன?
2. தொடர் இலக்கணம் ஒரு வாக்கியத்திலுள்ள எந்த சொல்லைக் கொண்டு அறியப்படும்?
3. தொகைநிலைத் தொடருக்கும் தொகா நிலைத் தொடருக்கு முள்ள சுருக்கப் பெயர்களென்னென்ன?
4. பதம் எத்தனை வகைப்படும்?
5. பகுபதம் என்றால் என்ன?
6, பகுபத உறுப்புக்கள் யாவை? உதாரணம் கொடுத்து விளக்குக.
7. பகுபத உறுப்புக்கள் எல்லாம் வரும்படி ஒருபதம் பிரித்து எழுதி காட்டு:

புணர்ச்சி

புணர்ச்சியாவது இரண்டு மொழிகள் ஒன்றோடொன்று சேருவதாகும். அம்மொழிகளில் ஒன்று நிலைமொழியாக வும், மற்றொன்று வருமொழியாகவும் இருக்கும். நிலை மொழி என்பது நிலைத்த மொழி. வருமொழி அதனோடு வந்து சேரும் மொழி. இவ்வாறு நிலைமொழியும், வரு மொழியும் ஒன்றோடொன்று சேரும்பொழுது இயல்பா யிருத்தலும், விகாரப்படுதலும் புணர்ச்சியின் இலக்கணங் களாம்.

வேற்றுமை, அவ்வழிப் புணர்ச்சி:-

புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி என்றும், அவ்வழிப் புணர்ச்சி என்றும் இரு வகைப்படும். வேற்றுமைப் புணர்ச்சியாவது இரண்டுமுதல் ஏழாம் வேற்றுமைவரையி லுள்ள உருபுகள் மறைந்தும் வெளிப்பட்டும் வருவனவாகும். அவ்வாறு வரும்பொழுது சில எழுத்துக்கள் சேர்ந்தும், இயல்பாயும் நிற்கும். வேற்றுமை அல்லாத வழிகளா கிய தொகைநிலைத் தொடர் ஐந்தும், தொகா நிலைத் தொடர் ஒன்பதும் தத்தமக்குள்ள சொற்கள் சேரும்போது உண்டா கும் புணர்ச்சிகள் எல்லாம் அவ்வழிப் புணர்ச்சிகளாம்.

பண்புப் பெயர்ப் புணர்ச்சி:- பண்புச் சொற்கள் நிலை மொழியாக இருக்க அவற்றோடு வருமொழிகள் வந்து சேரும் பொழுது ஈறு போதல், இடையுகரம் இயாதல், ஆதிநீடல் அடி அகரம் ஐயாதல், தன்னொற்று இரட்டல், முன்னின்ற மெய்திரிதல், இனமிகல் முதலிய வேறுபாடுகளைப் பெற்று வரும்.

(உ-ம்.)

ஈறு போதல்:- சிறுமை + பண்டம் = சிறுபண்டம்.

இடையுகரம் இயாதல்:- வறுமை + ஆர் = வறியார்.

ஆதி நீடல்:- பெருமை + ஊர் = பேரூர்.

அடி அகரம் ஐயாதல்:- பசுமை + தார் = பைந்தார்.

தன்னொற்று இரட்டல்:- குறுமை + உயிர் = குற்றுயிர்.

முன்னின்ற மெய் திரிதல்:- செம்மை + நீர் = செந்நீர்.

இனமிகல்:- கருமை + தாழை = கருந்தாழை.

ணகர, னகர ஈறு—

நிலைமொழிக் கடைசியிலே ண, ன என்ற எழுத்துக்களிருந்து வருமொழி முதலில் வல்லினம் வந்தால் வேற்றுமைப் புணர்ச்சியில் அவை முறையே டகரமாகவும் றகரமாகவும் திரியும்; மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாகும்.

(உ-ம்.) மண் + பாண்டம் = மட் பாண்டம்

பொன் + காசு = பொற்காசு

இவற்றுள் வல்லினம் வர ணகர, னகரங்கள் வேற்றுமையில் முறையே டகர, றகரங்களாயின.

மண் + நீண்டது = மண் நீண்டது

பொன் + மிக்கது = பொன் மிக்கது

மண் + வளை = மண் வளை

பொன் + வளையல் = பொன் வளையல்

இவற்றுள், மெல்லினமும் இடையினமும் வர வேற்றுமையில் இயல்பாயின.

பண் + பெரிது = பண் பெரிது
பண் + மாண்டது = பண் மாண்டது
கண் + யாது = கண் யாது
நான் + கண்டேன் = நான் கண்டேன்
அவன் + நடந்தான் = அவன் நடந்தான்
மன் + வந்தான் = மன் வந்தான்

இவற்றுள், அல்வழியில் மூவினத்துக்கு முன்னும் இயல்பாயின.

ளகர லகர ஈறு:-நிலைமொழியின் கடைசியில் ளகர லகரங்களிருந்து வருமொழி முதலில் வல்லினம் வந்தால் வேற்றுமைப் புணர்ச்சியில் அவை முறையே டகர, றகரங்களாகத் திரியும்; அல்வழியில் இயல்பும் விகற்பமுமாகும். வருமொழி முதலில் மெல்லினம் இருந்தால் இருவகைப் புணர்ச்சியிலும் முறையே அவை ணகர,னகரமாகத் திரியும். இடையினம் வந்தால் இருவழியும் இயல்பாகும்.

(உ-ம்.) கள் + குறைவு = கட்குறைவு
கல் + பாண்டம் = கற் பாண்டம்

இவற்றுள், வல்லினம் வர ளகர,லகரங்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் டகர, றகரங்களாகத் திரிந்தன.

முள் + தீது = முட்டீது—முள் தீது
கல் + சிறிது = கற் சிறிது—கல் சிறிது

இவற்றுள் வல்லினம் வர அல் வழியில் இயல்பும் விகற்பமும் பெற்றன.

எள் + முளைத்தது = எண் முளைத்தது } அல்வழி
கல் + மலை = கன்மலை

வாள் + மாட்சி = வாண் மாட்சி } வேற்றுமை
கல் + மண்டபம் = கன் மண்டபம்

இவற்றுள் இருவகைப் புணர்ச்சியிலும் மெல்லினம் வர ணகர, னகரங்களாயின.

வாள் + வலி = வாள் வலி } வேற்றுமை
கல் + யானை = கல் யானை

வாள் + வலிது = வாள் வலிது } அல்வழி
வால் + வலி = வால் வலி

இவற்றுள், இருவகையிலும் இடையினம் வர இயல்பாயின.

வடமொழிப் புணர்ச்சி

தமிழில் வடமொழிச் சொற்கள் பல வந்து வழங்குகின்றன. ஆகலால் அவற்றின் புணர்ச்சியையும் ஒரு சிறிது அறிந்துகொள்வது அவசியம். வடமொழிப் புணர்ச்சி மூன்று வகைப்படும். அவை தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி என்பன.

தீர்க்க சந்தி:-நிலைமொழியின் கடைசியில் அ, ஆ இருந்து வருமொழி முதலிலும் அ, ஆ வருமானால் அவ்வெழுத்து அவை இரண்டும் கெட ஒரு ஆகாரம் தோன்றும்.

(உ-ம்.) பாத + அரவிந்தம் = பாதாரவிந்தம்
சதா + ஆனந்தம் = சதானந்தம்

இ, ஈ முன் இ, ஈ வரின் இரண்டும் கெட ஓர் ஈ தோன்றும்.

(உ-ம்.) கவி + இந்திரன் = கவீந்திரன்
மகீ + இந்திரன் = மகீந்திரன்

உ, ஊ முன் உ, ஊ வரின் இரண்டும் கெட ஓர் ஊ தோன்றும்.

(உ-ம்.) குரு+உபதேசம்=குரூபதேசம்

குணசந்தி:-அ, ஆ முன் இ, ஈ வரின் ஏகாரமும், உ, ஊ வரின் ஓகாரமும் தோன்றும்.

(உ-ம்.) தேவ+இந்திரன்=தேவேந்திரன்
கங்கா+உற்பத்தி=கங்கோற்பத்தி

விருத்திசந்தி:-அ, ஆ முன் ஏ, ஐ வரின் ஐகாரமும், ஒ, ஓ வரின் ஔகாரமும் தோன்றும்.

(உ-ம்.) சர்வ+ஐசுவரியம்=சர்வைசுவரியம்
மகா+ஔஷதம்=மகௌஷதம்.

பயிற்சி 16

1. புணர்ச்சி என்றால் என்ன?
2. நிலைமொழி, வருமொழி என்பன யாவை?
3. சொற்கள் சேரும்போது எவ்வெவ்வாறு மாறும்?
4. வேற்றுமைப் புணர்ச்சி என்றால் என்ன?
5. அல்வழிப் புணர்ச்சியாவது யாது? உதாரணம் கொடு.
6. பண்புப் பெயர்கள் புணரும்போது என்னென்ன மாறுதல்களை யடையும்?
7. ணகர னகர ஈறு வருமொழியில் வல்லெழுத்து வந்தால் எவ்வாறு சேரும்?
8. மெல்லினமும், இடையினமும் வந்தால் எவ்வாறு சேரும்?
9. ளகர லகர ஈறுகள் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் எவ்வாறு மாறும்?
10. மெல்லினமும், இடையினமும் வந்தால் எவ்வாறு புணரும்?
11. தீர்க்கசந்தி என்றால் என்ன? உதாரணம் கொடுத்து விளக்கு.
12. குணசந்தி விருத்தி சந்தி என்பன யாவை? ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணம் கொடு.

பிற் சேர்க்கை

1. Alphabet (Letter) — எழுத்து
2. Vowel — உயிர்
3. Short Letter — குறில்
4. Long Letter — நெடில்
5. Consonant — மெய்
6. Vowel-Consonant — உயிர்மெய்
7. Primary forms of Letters — முதல் எழுத்துக்கள்
8. Secondary forms of Letters — சார் பெழுத்துக்கள்
9. A Chapter — இயல்
10. Orthograhy — எழுத்தியல்
11. Etymology — சொல்லியல்
12. Syntax — தொடர் இயல்
13. A Noun — பெயர்ச்சொல்
14. Caste — திணை
15. Gender — பால்
16. Masculine — ஆண் பால்
17. Feminine — பெண் பால்
18. Neuter — ஒன்றன்பால், பலவின்பால்
19. Number — எண்
20. Singular — ஒருமை
21. Plural — பன்மை
22. Person — இடம்
23. Case — வேற்றுமை

24. Nominative Case — முதல் வேற்றுமை
25. Accusative (objective) Case — 2ம் ,,
26. Instrumental ,, — 3ம் ,,
27. Dative ,, — 4ம் ,,
28. Ablative ,, — 5ம் ,,
29. Genitive (Possessive) ,, — 6ம் ,,
30. Locative ,, — 7ம் ,,
31. Vocative ,, — 8ம் ,,
32. A Pronoun ,, — பிரதிப் பெயர்ச் சொல்
33. Verbal noun — தொழிற் பெயர்
34. Participle noun — வினையால் அணையும் பெயர்
35. A Verb — வினைச்சொல்
36. Transitive Verb — தன் வினை
37. Intransitive ,, — பிற வினை
38. Auxiliary Verb — துணை வினை
39. Causal ,, — காரண வினை
40. Defective Verb — குறை வினை
41. Finite ,, — முற்றுவினை
42. The Imperative — ஏவல்
43. The Optative — வியங்கோள்
44. Noun Defect — பெயரெச்சம்
45. Infinitive — வினையெச்சம்
46. Positive — உடன்பாடு
47. Negative — எதிர்மறை
48. Active Voice — செய்வினை
49. Passive ,, — செயப்பாட்டுவினை

50. A Partical or Suffex — இடைச்சொல்
51. An Interjection — குறிப்பிடைச்சொல்
52. Case termination — உருபு
53. An Adjective — உரிச்சொல்
54. A Demonstrative — சுட்டுரிச்சொல்
55. A Numeral — எண்ணுரிச்சொல்
56. A Cardinal Number — தொகை எண்
57. An Ordinal ,, — முறை எண்
58. An Adverb — வினை உரிச்சொல்
59. Prosody — யாப்பியல்
60. Rhetoric — அணியியல்
61. Subject — எழுவாய்
62. Predicate — பயனிலை
63. Object — செயப்படுபொருள்
64. Adjunct — அடைமொழி
65. Interrogative — வினா
66. Simple Sentence — தனி வாக்கியம்
67. Compound ,, — தொடர் வாக்கியம்
68. Complex ,, — கலப்பு வாக்கியம்
69. Parsing — சொல் இலக்கணம்
70. Root or Stem — பகுதி
71. Person termination — விகுதி
72. Medial syllable — இடைநிலை